அறிவியல் தொழில்நுட்ப இலக்கியங்களைத் தமிழாக்குவதற்கான ஒரு கையேடு

A handbook for translating scientific and technical literature to Tamil

ஜெயபாண்டியன் கோட்டாளம்

Jeyapandian Kottalam

முதற்பதிப்பு: 15, நவம்பர், 2014

First Edition: November 15, 2014

மீள்திருத்த முதற்பதிப்பு: 2, திசம்பர், 2014

Revised First Edition: December 2, 2014

அனுமதி

இந்த நூலை முழுமையானதாகவும், மாற்றமில்லாமலும், இலவசமாகவும் விநியோகிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் விநியோகத்துக்கான அனுமதியை ஆசிரியர் இதனால் அனைவருக்கும் வழங்குகிறார்.

அனுப்புவதற்கான தொடுப்பு: *https://drive.google.com/file/d/0BzwpbxABzaV5SzVpQ24tY0NGVXc*

Permission

The author hereby grants everyone permission to distribute this book provided that it is distributed in its entirety, without any modification, and free of charge.

Link to share: https://drive.google.com/file/d/0BzwpbxABzaV5SzVpQ24tY0NGVXc

ஆசிரியரைப்பற்றி

ஜெ. கோட்டாளம் அறிவியல் மற்றும் தகவல்தொழில்நுட்ப ஆய்வும் வளராக்கமுமாகிய துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் 1954-ஆம் ஆண்டு இந்தியாவின் தென் தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிற்றூரில் பிறந்தார். சென்னையிலுள்ள இந்திய நுட்பியல் பயிலகத்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வி பெற்று, சாண்டியேகோவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகம், ஸ்க்ரிப்ஸ் ஆய்வுப் பயிலகம், ஹார்வர்டு பல்கலைக்கழகம், கிரே ஆய்வகம் முதலிய இடங்களில் பணியாற்றினார். புரதம், அணுக்கருவமிலம் போன்ற பெருமூலக்கூறுகளின் கட்டமைப்புகளையும் இயக்கங்களையும் மிகைக்கணினியில் பாவனையாக்குவதற்கான மென்பொருளை உருவாக்குவதில் இவர் பங்களித்தார். மேலும், கணக்கீட்டுப் பாய்ம இயக்கவியல், புள்ளியிய இயற்பியல் ஆகிய துறைகளிலும் பங்களித்துள்ளார். தற்போது ஆங்கில மொழியிலுள்ள அறிவியற்செல்வங்களை திட்டமிட்ட ஒழுங்குமுறையில் தமிழுக்குக்கொண்டுவரும் முயற்சியிலும் அவ்வாறு கொண்டுவரத் தேவையான உதவிப்பொருட்களை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

ஆசிரியர் எழுதியவையும் மொழிமாற்றியவையும்

1. நூல்: **அறிவியல் தொழில்நுட்ப இலக்கியங்களை தமிழாக்குவதற்கான ஒரு கையேடு**

அறிவியல் தொழில்நுட்ப இலக்கியங்களை தமிழில் எழுதுவதிலும் மொழிபெயர்ப்பதிலும் உள்ள ஒரு பெரும் இடர்ப்பாடு என்னவென்றால், அதற்கு தேவையான கலைச்சொற்கள் இல்லாததாகும். கலைச்சொல் இல்லாத ஒரு கருத்துருவுக்கு பல எழுத்தாளர்களும் அவரவர் உடனடித்தேவைக்கு தக்கவாறு பலவிதமாக கலைச்சொற்களை உருவாக்குகின்றனர். அவ்வாறு உருவாகும் கலைச்சொற்கள் ஒரு சீரான நடையை பின்பற்றி அமைவதில்லை. அவற்றுள் சில செந்தமிழ்ச் சொற்களாகவும், சில கலப்புமொழிச் சொற்களாகவும், வேறு சில ஆங்கிலச் சொற்களாகவும் அமைகின்றன. எல்லா எழுத்தாளர்களும் ஒரேசீராக எழுத வேண்டுமானாலும், ஒன்றுடனொன்று இயைபுடைய அறிவியல் நூல்கள் தமிழில் தோன்ற வேண்டுமானாலும், அனைத்துக் கலைச்சொற்களும் அடங்கிய ஒரு பட்டியலை உருவாக்கி அனைவரும் அந்த பட்டியலையே பயன்படுத்துவதான ஒரு மரபை தமிழ் எழுத்தாளர்கள் ஏற்க வேண்டும். அவ்வாறான ஒரு பட்டியலை உருவாக்கி அறிஞர்களிடம் முன்வைப்பதே இந்நூலின் நோக்கம்.

2. நூல்: **கோட்பாட்டு வேதியியலுக்கான அடிப்படைக்கணிதம்**

உலகளவில் உயர்நிலை வேதியியல் கற்கும் மாணவர்கள் துணுக்க வேதியியல், புள்ளியிய எந்திரவியல் போன்ற கோட்பாட்டுப் பாடங்களைப் படிக்குமுன் தெரிந்துகொள்ளவேண்டிய கணித அடிப்படை நூல்கள் ஆங்கிலத்திலும் இருப்பதாகத் தோன்றவில்லை. இளங்கலை வகுப்புகளில் அவர்கள் படிக்கும் கணிதத்துக்கும் இந்த முதுகலை பாடங்களுக்குத் தேவையான கணிதத்துக்குமிடையே ஒரு இடைவெளி உள்ளது. தளவணிகள், நேரிய இயற்கணிதம், பான்மைமதிப்புகளும் பான்மைச்சார்புகளும், வகையீட்டுச்சமன்பாடுகளின் தொடர்த்தீர்வுகள், தொகுதிக்கோட்பாடு, நிகழ்தகவுகோட்பாடு, உதிரி மற்றும் தொடர்ச்சியான வாய்ப்புசார் நிகழ்முறைகள் போன்ற பாடங்களை வேதியியலுக்குத்தேவையான அளவில் தொகுத்து ஒருமிக்க வழங்குவதே இந்நூலின் நோக்கம். வேதியியலை கற்பிக்க முயலாமல் கோட்பாட்டுவேதியியலுக்கான கணிதமுறைகளை மட்டும் இந்நூலில் வழங்குகிறேன். இயல் நிகழ்முறைகளின் கணிதவொப்புருவாக்கத்தையும் அவ்வாறான ஒப்புருக்களின் கணிதத்தீர்வுகளையும் வேறுபடுத்திக்காண இந்த நூலின் அணுகுமுறை உதவும். கணிதத்தை தனிப்படுத்தியபின் கணிதவிவரங்கள் மாணவர்களின் கவனத்தை சிதைக்காமல் அறிவியலை கற்பிப்பது வசதியாகும்.

3. Book: ***Learning Tamil by yourself***

This book is intended to teach Tamil, a classical Indian language, to native speakers of English and others who know English. It is particularly useful for high school students and adults in Tamil speaking families in English speaking countries. Others may be interested in learning the language for its rich literary content or for its connection to South Indian classical music and dance. If you are married to a Tamil person, you may want to know what your spouse is really saying to your in-laws about you and your family ☺. Tamil people who studied at English medium high schools in India or those who wished for a more casual but effective method of learning the language may also find it useful.

4. கட்டுரை: **பண்டைத்தமிழர் வாழ்க்கைமுறை**

தொல்காப்பியர் உலகை புவியியல் அமைப்புக்கேற்றவாறு ஐந்து திணைகளாக பிரிக்கிறார். அவை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இவற்றுள், எடுத்துக்காட்டாக குறிஞ்சி சமுதாயத்தின் வாழ்க்கை அமைப்பை மட்டும் இங்கு விரிவாகக் காணலாம்.

5. கட்டுரை: **போதனார் வாய்ப்பாட்டின் பெருமையை சரியாகச் சொல்லும் விதம்**

பித்தாகரசுத்தேற்றத்தை பயன்படுத்தாமலே போதனார்வாய்ப்பாட்டை பயன்படுத்தி ஒரு செங்கோணமுக்கோணத்தின் பக்கங்களிலிருந்து அதன் கர்ணத்தை கணக்கிடும் முறையை பண்டைத்தமிழர் அறிந்திருந்தனர் என்று சிலர் இணையத்தில் பலவிடங்களில் சொல்லிவருகின்றனர். அது தவறென்றும் போதனார்வாய்ப்பாடு பித்தாகரசின் வாய்ப்பாட்டுக்கு ஒருபோதும் ஈடாகாதென்றும் வேறுபலர் அதை எதிர்த்து வாதிட்டுவருகின்றனர். இதற்கு பதிலளிக்க முதற்குழுவினருள் சிலர் போதனார்வாய்ப்பாடு ஒரு நல்ல தோராயமென்றும், இரண்டாங்குழுவினர் கணிதத்தில் தோராயத்துக்கிடமில்லையென்றும், இவ்வாறாகவே வாதிடுகின்றனர். இருபக்கத்தினர் சொல்வதிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. இவ்விரு வாய்ப்பாடுகளுக்குமுள்ள தொடர்பை கணிதமுறையில் ஆய்ந்து அவற்றிடையேயுள்ள ஒற்றுமைவேற்றுமைகளை அறிந்துகொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

6. மொழிபெயர்த்த நூல்: **பால்வீதியின் பயணிகளுக்கான ஒரு வழிகாட்டி** – டக்ளஸ் ஆடம்ஸ்

Douglas Adams எழுதிய *The Hitchhiker's guide to the galaxy* என்ற ஒரு சிரிப்பான அறிவியல் புனைவின் தமிழாக்கம் இந்த நூல். ஒரு வியாழக்கிழமை காலை வழக்கம்போல் விழித்தெழுந்த ஆரதன் அண்டத்தில் நிகழ்ந்த பல நிகழ்தகவின்மை நிகழ்ச்சிகளால் வெவ்வேறு உலகங்களுக்கு சென்று பலவித உயிரினங்களை சந்தித்து சில இக்கட்டான நிலைமைகளில் சிக்கி பிறகு தப்பித்து இறுதியில் வேற்றுலக நண்பர்களுடன் வாழ்கிறான்.

7. மொழிபெயர்த்த நூல்: **ஒன்று, இரண்டு, மூன்று, முடிவிலி** – ஜார்ஜ் கேமாவ்

George Gamov எழுதிய *One, Two, Three, Infinity* என்ற ஒரு அறிவியல் விளக்க நூலின் தமிழாக்கம். அணு, விண்மீன், நெபுலம், சீர்குலைவு, மரபணு, வெளியை வளைக்கவியலுமா, விண்கலங்கள் குறுகுவதேன் ஆகியவற்றைப்பற்றியும் இதேயளவு ஆர்வமூட்டும் மற்ற தலைப்புகளைப்பற்றியும் இந்த நூலில் விவரிக்கப்போகிறோம். இயற்கையுலகம் நுண்ணளவிலும் பேரளவிலும் அறிவியலாளரின் கண்களுக்கு இன்று தோன்றுகிறபடி ஒரு பொதுவான சித்திரத்தை வாசிப்போருக்கு வழங்கும்பொருட்டு, தற்கால அறிவியலின் அதியார்வமிக்க உண்மைகளையும், கோட்பாடுகளையும் தொகுப்பதன் ஒரு முயற்சிதான் இந்த நூல். அடிப்படையறிவியலின் எந்த மூலையும் விட்டுப்போகாமல், இங்கு கூறப்படும் தலைப்புகள் எல்லாத்துறைகளையும் சுருக்கமாக தொட்டுச்செல்லுமாறு மிகவும் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

8. *கட்டுரை:* ***தமிழெழுத்துகளின் சரியான ஒலிப்பு***

தற்காலத்தில் பெரும்பான்மையான தமிழர் தவறாக ஒலிக்கும் சில எழுத்துகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாம் தமிழில் எழுதும்போது சில சொற்களில் வருவது இந்த ந வா, அந்த ன வா, இந்த ர வா அந்த ற வா என்றெல்லாம் ஐயங்கள் எழுகின்றன. இந்த ஐயங்களெல்லாம் நாம் அந்த எழுத்துகளை சரியாக ஒலிக்காததாலே ஏற்படுகின்றன. தமிழில் ஒரே ஒலிக்கு இரண்டு எழுத்துகள் கிடையாது. ஒவ்வோரெழுத்துக்கும் ஓர் ஒருத்துவமான ஒலியுண்டு. இதை தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் தெளிவாகச்சொல்கின்றன.

9. *சிறுகதை:* ***மகன் தந்தைக்கு ஆற்றும் …***

நான் அமெரிக்கா வந்ததும் என் குடும்பத்துக்கு விடிவுகாலம் வந்தது என்று எண்ணினேன். நான் சிறு வயதில் பட்ட கஷ்டமெல்லாம் என் சந்ததியினருக்கு வராமல் பார்த்துக்கொள்ள விரும்பினேன். என் மகனை டாக்டராக்கி வசதியாக வாழ வைக்க திட்டமிட்டிருந்தேன். ஆனால் அவனோ படிப்பில் சுழியாய்ப்போய்விட்டான்.

10. *வெண்பா:* ***வீண் பா***

இலக்கணம் வாசித்தபோது விளையாட்டாக எழுதிய ஒரு வெண்பா.

அறிவியல் தொழில்நுட்ப இலக்கியங்களைத் தமிழாக்குவதற்கான ஒரு கையேடு

பொருளடக்கம்

முன்னுரையும் குறிக்கோளும் 1

Introduction and purpose 1

பொருட்களும் செய்முறைகளும் 15

Materials and methods 15

விளைவுகளும் உடனுரையும் 22

Results and discussion 22

எதிர்கால அலுவல்களும் சுருக்கவுரையும் 37

Future work and summary 37

ஆங்கிலத்திலிருந்து தமிழ் 41

English to Tamil 41

A 42

B 59

C 68

D 91

E 104

F 115

G 123

H 130

I 139

J 150

K 151

L 152

M 160

N 174

O 181

P 187

Q 209

R *210*
S *220*
T *242*
U *254*
V *258*
W *261*
X *264*
Y *264*
Z *265*
தமிழிலிருந்து ஆங்கிலம் *267*
Tamil to English *267*
1 ..... *268*
அ *268*
ஆ *281*
இ *285*
ஈ *300*
உ *301*
ஊ *311*
எ *312*
ஏ *317*
ஐ *319*
ஒ *319*
ஓ *326*
க *327*
ச *357*
ஞ *375*
ட *375*
த *375*
ந *397*
ப *413*
ம *442*
ய *471*
ர *472*

ல..... 472
வ 472
ன..... 491
ஜ..... 491

அட்டவணை 1 பெரிய எண்களின் பெயர்களும் மெட்டிரிக முன்னொட்டுகளும் 23
அட்டவணை 2 ஆயிரத்தின் அடுக்குகளுக்கான மெட்டிரிக முன்னொட்டுகளும் அடையாளங்களும்..... 25
அட்டவணை 3 அளவைகளின் அலகுகளும் அடையாளங்களும் 27
அட்டவணை 4 வேதித் தனிமங்களின் பெயர்களும் அடையாளங்களும்..... 31
அட்டவணை 5 கரிமத் தனிமங்களின் பெயரிடுமுறைக்கான சொற்பகுதிகள்..... 33
அட்டவணை 6 பதூபவே விதிகளின் படி கரிமச் சேர்மங்களின் பெயர்கள்..... 34
அட்டவணை 7 பாகுபாட்டியலில் வழங்கும் சில சொற்பகுதிகள்..... 36
அட்டவணை 8 சொற்பட்டியல்களில் பயன்படும் குறுங்குறிகள் 40

முன்னுரையும் குறிக்கோளும்

Introduction and purpose

அறிவியல் தொழில்நுட்ப இலக்கியங்களைத் தமிழில் எழுதுவதிலும் மொழிபெயர்ப்பதிலும் உள்ள ஒரு பெரும் இடர்ப்பாடு என்னவென்றால், அதற்குத் தேவையான கலைச்சொற்கள் இல்லாததாகும். கலைச்சொல் இல்லாத ஒரு கருத்துருவுக்குப் பல எழுத்தாளர்களும் அவரவர் உடனடித் தேவைக்குத் தக்கவாறு பலவிதமாகக் கலைச்சொற்களை உருவாக்குகின்றனர். அவ்வாறு உருவாகும் கலைச்சொற்கள் ஒரு சீரான நடையைப் பின்பற்றி அமைவதில்லை. அவற்றுள் சில செந்தமிழ்ச் சொற்களாகவும், சில கலப்புமொழிச் சொற்களாகவும், வேறு சில ஆங்கிலச் சொற்களாகவும் அமைகின்றன. எல்லா எழுத்தாளர்களும் ஒரேசீராக எழுத வேண்டுமானாலும், ஒன்றுடனொன்று இயைபுடைய அறிவியல் நூல்கள் தமிழில் தோன்ற வேண்டுமானாலும், அனைத்துக் கலைச்சொற்களும் அடங்கிய ஒரு பட்டியலை உருவாக்கி அனைவரும் அந்தப் பட்டியலையே பயன்படுத்துவதான ஒரு மரபை தமிழ் எழுத்தாளர்கள் ஏற்க வேண்டும். அவ்வாறான ஒரு பட்டியலை உருவாக்கி அறிஞர்களிடம் முன்வைப்பதே இம்முயற்சியின் நோக்கம்.

The lack of technical terminology in Tamil is a significant impediment to writing and translating scientific and technological literature. For a concept lacking a technical term, different authors create different terms to suit their immediate needs. The technical terms created this way do not follow a uniform style. Some of them happen to be செந்தமிழ் words, some of mixed origin, and some others English words. If all authors were to follow a uniform terminology, and if scientific books consistent with each other were to appear in Tamil, we should create a list containing all technical terms and writers should adopt a convention to use the same list. The purpose of this work is to create such a list and submit to scholars as a proposal.

பல கலைச்சொல் அகராதிகள் தமிழில் ஏற்கெனவே இருக்கலாம். இதுவும் மற்றொரு அகராதியன்று. இந்நூலின் நோக்கம் ஓர் அகராதியின் நோக்கத்திலிருந்து மாறுபட்டது. அகராதியின் நோக்கம் சொல்லை வரையறுத்துப் பொருளை விளக்குவதாகும். சொல்லில் பொருள்மயக்கம் இருப்பின், அச்சொல்லின் எல்லாப் பொருட்களையும் விளக்குகிறது அகராதி. மாறாக, இந்நூலின் நோக்கம் ஓர் ஆங்கிலக் கலைச்சொல்லுக்கு இணையான ஒரு தமிழ்க் கலைச்சொல்லைத் தருவதும், பொருள்மயக்கம் ஏற்படாதவாறு ஒரு சொற்பட்டியலை உருவாக்குவதும் ஆகும். ஒரே கருத்துருவுக்குப் பல துறைகளிலும் வழங்கிவரும் வெவ்வேறு சொற்களையும் பட்டியலிடுகிறது அகராதி. ஒரு கருத்துருவைக் குறிக்கப் பல துறைகளிலும் பயன்படுமாறு ஒரே சொல்லை முன்வைக்க முனைகிறது இந்நூல். பழக்கத்தில் வந்த சொற்களைப் பட்டியலிட்டுப் பொருள் விளக்குகிறது அகராதி. பழக்கத்தில் வரவேண்டிய சொற்களை முன்வைக்கிறது இந்நூல்.

There may be many technical dictionaries in Tamil already. This is not another technical dictionary. The purpose of this work is different from that of a dictionary. The purpose of a dictionary is to define words and explain meanings. If there is ambiguity in a word, a dictionary explains all meanings of the work. In contrast, the purpose of this work is to present a Tamil

technical word corresponding to an English technical word and create a list of words in such a way that ambiguities do not arise. A dictionary lists different words in use in different disciplines for the same concept. This book attempts to propose a single word to represent a concept in many areas. A dictionary lists and explains the meanings of words already in use. This book proposes words that should become in common use.

மக்கள் பேசும் இயல் மொழிகளில் ஒரே சொல் சூழமைவைப் பொறுத்துப் பலவாறு பொருள் தருவது இயல்பு. இது ஆங்கிலம் உட்பட எல்லா மொழிகளுக்கும் பொதுவான பண்பு. ஆனால், அறிவியலில் பயன்படும் கலைச்சொற்கள் இயன்றவரை திட்டவட்டமான வரையறை கொண்டவை. இங்கு ஒரே சொல் பல பொருட்களைத் தருவதும், ஒரே கருத்துருவுக்குப் பல சொற்கள் இருப்பதும் அரிது. விலங்கியல், தாவரவியல், வேதியியல் போன்ற துறைகளில் ஒவ்வோர் இனத்துக்கும் ஓர் ஒருத்துவப் பெயரை இடுவதற்கான கண்டிப்பான விதிமுறைகள் உள்ளன. இவ்வாறிருக்கும்போது, தமிழிலும் ஒரு திட்டவட்டமான பட்டியலை உருவாக்குவது சாத்தியமானது மட்டுமல்லாமல் அவசியமானதாகவும் ஆகிறது.

In natural languages spoken by people it is common that a word has different meanings in different contexts. This is a common property of all languages including English. However, technical words used in science have definite definitions as much as possible. Here it is rare that a single word has many meanings or there are many words for a single concept. In zoology, botany, and chemistry, there are strict rules to assign a unique name to a species. Given this situation, it is not only possible but also necessary to create a definite list in Tamil as well.

இவ்வாறான பட்டியல் முழுமையானதாக இருக்க வேண்டியதும் அவசியம். எந்தவொரு ஆங்கிலக் கலைச்சொல்லைத் தேடினாலும் அதற்கிணையான தமிழ்க் கலைச்சொல்லைத் தருவதாக இப்பட்டியல் இருக்கவேண்டும். ஆனால், அறிவியல் தொழில்நுட்பத் துறைகளின் மொத்த வெளி மிகவும் விரிவானது. அவ்வெளியின் எல்லா மூலை முடுக்குகளையும் சென்றடைந்தால்தான் நம் பட்டியலை முழுமையானதாகக் கருதலாம். மேலும், அறிவியல் துறைகள் அனைத்தும் வளர்ந்து வரும் துறைகள். புதிய கலைச் சொற்கள் ஆங்கிலத்திலும் வேறு பல மொழிகளிலும் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. அதற்குத் தகுந்தவாறு நம் பட்டியலும் தொடர்ச்சியாக இற்றையடைந்து வரவேண்டும். அறிவியலின் விரிவையும் வளர்ச்சியையும் வென்று முழுமையை எய்துவது ஓர் இமயப் பணி. அது இயலக்கூடியதா என்பது ஐயத்துக்கிடமானதே. ஆயினும் முயன்றால்தானே சாத்தியமாகும்? இமயத்தின் உச்சியையும் மனிதன் சென்றடைந்து விட்டானல்லவா? அறிவியல் துறைகள் அகலமாகவும், ஆழமாகவும், திறந்தனவாகவும் இருப்பதால் ***முழுமை*** என்பது அடையத்தக்கதன்று; ஆனால் அணுகத்தக்கது. கணிதமுறையில் கூறின், முழுமை என்பது தொலைதொடுவகையில் வேண்டுமளவு நெருக்கமாக அணுகத்தக்க ஓர் *எல்லை*.

It is essential that such a list be complete. For every English technical word to be searched, the list should yield the corresponding Tamil technical word. But the total space of science and technology is very broad. Our list can be considered complete only if it reaches every nook and corner of that space. Moreover, all scientific disciplines are developing areas. New technical words are being formed in English and other languages. Our list should also get updated accordingly on a continuous basis. Conquering the breadth and growth of science and achieving

completeness is a monumental task. It is doubtful whether it is feasible. But we must try. Monuments have been built in the past! Since scientific fields are broad, deep, and open, completeness is not achievable; but it can be approached. Mathematically, completeness is a limit that can be asymptotically approached arbitrarily closely.

சுருக்கமாக, அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஆங்கிலத்தில் வழங்கும் கலைச்சொற்கள் ஒவ்வொன்றுக்கும் இணையாக ஒரு ***துல்லியமான, திட்டவட்டமான, ஒருத்துவத்*** *தமிழ்க் கலைச்சொல்லைத் தரும்* ***முழுமையான, ஒன்றுக்கொன்றான, தன்னியைபான*** *பட்டியலை* ***முன்வைப்பதன் முதற்படி*** *இந்நூல்.*

In summary, this work is the ***first step*** *in* ***proposing*** *a* ***complete, one-to-one,*** *and* ***self-consistent*** *list containing a* ***precise, definite,*** *and* ***unique*** *Tamil technical word for a given English technical word in science and technology.*

நுரையீரலைப் பற்றிப் படிக்கும்போது alveoli என்ற சொல்லை எதிர்கொள்கிறோம். அதிகம் சிந்திக்காமல், alveoli - காற்றுச் சிற்றறை என்று எழுதிப் பழக்கத்தில் கொண்டுவந்து விட்டோமானால், தேன்கூடு, பல்லியல் போன்ற மற்றச் சூழமைவுகளில் alveoli வரும்போது, காற்றுச்சிற்றறை என்று சொல்ல இயலாமல் திண்டாடி, வேறு சொற்களை உண்டாக்க வேண்டிய அவசியத்துக்கு உள்ளாவோம். இந்தச் சிக்கலைத் தவிர்க்க, ஆங்கிலச் சொல் உணர்த்தும் பொருளை மிகாமலும் குறையாமலும் அவ்வாறே குறிக்கும் தமிழ்ச்சொல்லை இயன்றவரை முதலிலேயே தேர்ந்தெடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, alveoli – சிற்றறை என்றால், அது எல்லா இடங்களிலும் பொருந்தும். மிகாமலும் குறையாமலும் பொருளுணர்த்தும் நிகரான சொற்களைத் ***துல்லியமானவை*** *என்கிறோம்.*

While studying about lungs, we come across the term alveoli. Without thinking much about it, if we write alveoli - காற்றுச் சிற்றறை and it becomes common usage, then we won't be able to use காற்றுச் சிற்றறை when we come across alveoli in other contexts such as honeycomb and dentistry; we would have to create new words. To avoid this problem, we should select a Tamil word representing the exact meaning of the English word as much as possible in the first place. For example alveoli – சிற்றறை would be suitable in all contexts. Words which neither exceed nor are deficient in meaning are said to be ***precise.***

Compute, calculate ஆகிய இரு சொற்களும் ஒரே பொருளுடையவை. ஆயினும் இன்றைய நடைமுறைப் பழக்கத்தில் computer, calculator என்பவை வெவ்வேறு கருவிகளைக் குறிப்பது ஒரு பயன்பாட்டு மரபினால்தான். இதுபோன்ற மரபுகள் தமிழிலும் உருவாக வேண்டும். இணையத்தில் விக்சனரி என்ற மதிப்பும் பயனும் மிக்க ஒரு வளம் உள்ளது. அதில் computer என்ற சொல்லுக்குப் பொருளாக கணினி, கணிப்பொறி, கணிப்பான், கணியம் ஆகிய நான்கு சொற்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. விக்சனரி ஒரு அகராதியாதலால், அதன் குறிக்கோள் computer என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளை விளக்குவதேயாகும். ஒருவேளை வெவ்வேறு இடங்களில் computer என்ற பொருளில் இந்நான்கு சொற்களுமே பயன்பட்டிருக்கலாம். இந்நான்கு சொற்களில் வெகுவாகப் பழக்கத்திலிருக்கும் ஒன்றை மட்டும் தேர்ந்து கொள்வது இந்நூலின் குறிக்கோள்களுள் ஒன்று. ஆகவே, இந்நூலில் உள்ள பட்டியலில் computer என்ற சொல்லுக்கு நிகராக கணினி என்ற ஒரே ஒரு சொல் மட்டும்

காணப்படுகிறது. இது ***திட்டவட்டம்***. கணினி என்ற சொல்லை *computer*-க்கு நிகராகக் குறித்தபின், அதே சொல்லை வேறொரு கலைச்சொல்லுக்கு இணையாக இந்நூலின் பட்டியல் குறிக்கவில்லை. இது ***ஒருத்துவம்***.

> *The two words compute and calculate have the same meaning. It is merely by a usage convention that computer and calculator represent different instruments in practice. Such conventions should arise in Tamil too. There is a valuable and useful internet resource called Wiktionary. It lists the four words கணினி, கணிப்பொறி, கணிப்பான், கணியம் for computer. Since Wiktionary is a dictionary, its purpose is to explain the meaning of the word computer. Perhaps these four words have been used at different places to mean computer. One of the purposes in this book is to select one from these four words that is most commonly used. Hence, only the word கணினி is listed for computer in the table contained in this book. This is **definiteness**. After specifying கணினி to correspond to computer, the list in this book does not specify the same word for another technical word. This is **uniqueness**.*

இந்நூலில் ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களடங்கிய ஒரு பட்டியல் உள்ளது. இப்பட்டியலின் தகவலடக்கம் தமிழ்ச்சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களடங்கிய பட்டியலாக மீண்டும் தரப்படுகிறது. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குச் செல்லும் பட்டியலின் பதிகைகள் திட்டவட்டமானவையாதலால், தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குச் செல்லும் பட்டியலின் பதிகைகள் ஒருத்துவமானவை. முந்தையவை ஒருத்துவமானவையாதலால், பிந்தையவை திட்டவட்டமானவை. வேறுவிதமாகக் கூறின், ஒவ்வொரு பட்டியலும் ஆங்கிலக் கலைச்சொற்கணம், தமிழ்க் கலைச்சொற்கணம் ஆகியவற்றிடையே ஓர் ***ஒன்றுக்கொன்றான*** இணைபடத்தைக் குறிக்கிறது.

> *This book contains a list of Tamil words corresponding to English words. The information content of this list is presented again as a list of English words corresponding to Tamil words. Since the list entries from English to Tamil are definite, the list entries from Tamil to English are unique. Since the former are unique, the latter are definite. In other words, each list represents a **one-to-one** map between the set of Tamil technical words and the set of English technical words.*

தமிழ்க் கலைச்சொல்லிலிருந்து ஆங்கிலக் கலைச் சொல்லைப் பெறவும் ஒரு திட்டவட்டமான ஒருத்துவமான வழி இருப்பதால், மூல ஆங்கிலச் சொல் மீள்பெறக்கூடியது. இந்தத் தமிழாக்கச் செயல்முறையும் ***மீள்திருப்பத்தகுந்தது***. ஆகவே, தமிழாக்கத்தின்போது தகவலிழப்பு நேரிடுமோ என்ற அச்சம் தேவையில்லை.

> *Since there is a definite and unique way to get an English technical word from the Tamil technical word, the original English word is retrievable. This process of translation is thus **reversible**. There need not be any fear of loss of information during translation.*

Hetero- என்ற முன்னொட்டு அறிவியல் துறைகள் பலவற்றில் பல இடங்களில் இடம்பெறுகிறது. அதற்குறிய தமிழ் முன்னொட்டைத் தேர்ந்தெடுத்து எல்லா இடங்களிலும் இயன்றவரை அதையே பயன்படுத்தினால், *hetero-* என்று தொடங்கும் சொற்களுக்கு

இணையான தமிழ்ச் சொற்களிடையேயும் ஒரு இயைபு நிலவும். இவ்வாறு தொடர்புடைய சொற்கள் அதே தொடர்பைத் தமிழிலும் தக்கவைக்குமாறு வடிவமைத்த சொற்பட்டியல் ***தன்னியைபு*** உடையது எனப்படுகிறது.

The prefix hetero- appears at several places in scientific areas. If we select a suitable Tamil prefix for it and use the same everywhere as much as possible, there will be a consistency among the Tamil words paralleling the words starting with hetero. A list designed so that related words retain the same relationship in Tamil is said to be ***self-consistent.***

Metamorphosis என்ற சொல்லுக்குப் பல துறைகளிலும் வெவ்வேறு சொற்கள் பழக்கத்திலிருப்பதாக விக்சனரி கூறுகிறது. இயற்பியலில் உருமாற்றம், மீன்வளத்தில் வளருருமாற்றம், வேளாண்மையில் உருவமாறுதல், இவ்வாறாக இன்னும் பல துறைகளில் விக்சனரி பொருள் கூறுகிறது. இந்நிலை மாறி, எல்லாத் துறையினரும் ஒரே சொல்லைப் பயன்படுத்தல் நலம். மேலும் *transformation* என்ற சொல்லுக்கும் உருமாற்றம் என்ற சொல் பொருளாகத் தரப்படுகிறது. *Transformation* என்பதை உருமாற்றம், என்றும் *metamorphosis* என்பதை வளருருமாற்றம் என்றும் எப்போதும் குறிப்பிட வேண்டும் என்று இந்நூலில் பரிந்துரைக்கிறேன். எல்லாத் துறையினரும் ஒரே மரபைப் பின்பற்றுவது ***துறையிடை இயைபை*** உண்டாக்கும்.

According to Wiktionary there are different words in use in different disciplines for the word metamorphosis. Wiktionary says the meaning as உருமாற்றம் *in physics,* வளருருமாற்றம் *in fishery,* உருவமாறுதல் *in agriculture, and so on in other disciplines. This situation should change; it is good to use the same word in all disciplines. In addition,* உருமாற்றம் *is given as the meaning for transformation too. I recommend in this book that transformation should always be written as* உருமாற்றம் *and metamorphosis as* வளருருமாற்றம். *All disciplines following the same convention would lead to* ***interdisciplinary consistency.***

Respiration என்ற சொல்லுக்கு இணையாக, சிலவிடங்களில் சுவாசம் என்ற சொல்லும், வேறு சில இடங்களில் மூச்சுவிடல் என்று சொல்லும் பயன்படுவது மற்றொரு விதமான இயைபின்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்நிலையில் சுவாசம் என்பதும் மூச்சுவிடல் என்பதும் ஒரே கருத்துருவைக் குறிக்கின்றனவா அல்லது அவை வெவ்வேறானவையா என்ற ஐயம் வாசிப்போரின் மனதில் எழ வாய்ப்புண்டு. வாசிப்போர் மாணவராயின், ஐயம் குழப்பமாகவே மாறும். ***எழுத்தாளர் இயைபுடன்*** செயல்படுவது இந்நிலையை மாற்றும்.

The use of சுவாசம் *at some places and* மூச்சுவிடல் *at other places corresponding to respiration is an example of another kind of inconsistency. Under these circumstances, readers are likely to wonder whether* சுவாசம் *and* மூச்சுவிடல் *represent the same or different concepts. If the readers are students, this leads to confusion. This can be remedied with* ***writers' consistency****.*

தமிழ்நாடு அரசு வெளியிடும் பாடநூல்களில் பலவிடங்களிலும் இயைபின்மையைக் காணலாம். எடுத்துக்காட்டாக, *trigonometry* என்ற சொல்லுக்குப் பத்தாம் வகுப்புக் கணித நூலில் முக்கோணவியல் என்றும், பதினொன்றாம் வகுப்புக் கணித நூலில் திரிகோணமிதி என்றும் எழுதப்பட்டுள்ளன. *Biodiversity* என்ற சொல்லுக்கு நிகராகப் பதினொன்றாம்

வகுப்புத் தாவரவியல் நூலில் பல்லுயிர் தன்மை என்றும், அதே வகுப்பு விலங்கியல் நூலில் பல்லுயிரியல்பு என்றும் எழுதப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் எப்போதும் *biodiversity* என்றே எழுதுகிறோமேயன்றிச் சிலவிடங்களில் *diversity of life* என்று எழுதுவதில்லை; ஏனென்றால் *biodiversity* என்ற சொல்லை ஒரு கலைச்சொல்லாக ஏற்றுக்கொண்டோம். தமிழிலும் அனைத்து எழுத்தாளர்களும் ***எல்லா இடங்களிலும் இயைபுடன்*** ஒரே சொல்லைப் பயன்படுத்துவது நலம். அதற்குத் தேவையான ஒரு தீர்வகமாக இந்நூல் பயன்படுமென்பது என் நம்பிக்கை.

> *We can find several occurrences of inconsistencies in textbooks published by Tamilnadu government. For example, the tenth standard mathematics book uses முக்கோணவியல் for trigonometry and eleventh standard book uses திரிகோணமிதி. The eleventh standard Botany textbook uses பல்லுயிர் தன்மை for biodiversity and the Zoology textbook for the same standard uses பல்லுயிரியல்பு. In English we write biodiversity everywhere and do not write diversity of life at some places; because we have accepted biodiversity as a technical term. In Tamil too, it is better that all writers use the same word* ***consistently in all contexts****. I hope that this book will serve as a clearinghouse for that purpose.*

நாம் அன்றாடம் பயன்படுத்தும் இயல்மொழியில் ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள் இருப்பதும், சூழமைவைப் பொறுத்து பொருள் மாறுபடுவதும் வெகுவாகக் காணப்படுகின்றன. பொதுவாக இரண்டு இயல்மொழிகளின் சொற்களுக்கிடையே ஒரு ஒன்றுக்கொன்றான தொடர்பை ஏற்படுத்துவது சாத்தியமன்று. ஆகவேதான் ஒரு மொழியின் ஒவ்வொரு சொல்லுக்கும் நிகராக மற்றொரு மொழியின் பல சொற்களைத் தருகிறது அகராதி. ஆனால், பெரும்பாலான அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொற்கள் துல்லியமான வரையறையுடன் விளங்குகின்றன. முக்கியமாக, உயர் அறிவியலின் தனித்துவமாக்கிய துறைகளில் வழங்கும் கலைச்சொற்கள் ஒருத்துவமானவை. அதாவது, ஒவ்வொரு சொல்லும் ஒரு கருத்துருவைக் குறிப்பதற்காக இயற்றப்பட்டது; ஒரு கருத்துருவைக் குறிக்க பெரும்பாலும் ஒரு சொல் மட்டுமே உள்ளது. இந்நிலையில் தமிழிலும் இவ்வாறான ஒரு கலைச்சொற் பட்டியலை உருவாக்குவதும், தமிழ்க் கலைச்சொற்களுக்கும் ஆங்கிலக் கலைச்சொற்களுக்கும் இடையே ஓர் ஒன்றுக்கொன்றான தொடர்பை அமைப்பதும் சாத்தியமாகிறது.

> *In the natural languages we use every day, it is common that a single word has many meanings and that the meaning changes with context. In general, it is not possible to make a one-to-one correspondence between the words of two natural languages. This is why a dictionary lists many words of one language corresponding to each word of another language. However, most scientific and technological terms are precisely defined. In particular the technical terms practiced in specialized branches of advanced science are unique. In other words, each word is made to denote a single concept; and each concept generally has only one word. Under these circumstances it becomes possible to construct a similar list of technical terms in Tamil and to make a one-to-one correspondence between Tamil and English terms.*

கணினி மூலம் தானாகவே ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் மென்பொருட்கள் எதிர்காலத்தில் உருவாகலாம். சூழமைவு சார் மொழிகளைவிடச் சூழமைவு

சாரா மொழிகள் சொல்லலசலுக்கும் பொருளுணர்வுக்கும் எளிமையாவை என்பது கணினி அறிவியலார் அறிந்த உண்மை. இயல் மொழிகள் வெகுவாகச் சூழமைவு சார்ந்தவை என்பதும் மொழியியலார் அறிந்த உண்மை. ஆயினும், கலைச்சொற்கள் சூழமைவு சாரா வகையில் துல்லியமாக வரையறுக்கப்பட்ட பொருளுடைய போக்கு இருப்பதால் கலையிலக்கியங்கள் தானியங்கி மொழிபெயர்ப்புக்கு உகந்தவையாகலாம். இந்தப் பட்டியலைத் தொகுக்கையில் இயன்றவரை தானியங்கி மொழிபெயர்ப்பை எளிதாக்கும் வகையில் சூழமைவு சாரா ஒருத்துவத்தைப் பாதுகாக்க முயன்றிருக்கிறேன்.

In the future there may arise software to automatically translate from English to Tamil. It is a fact known to computer scientists that context independent languages are easier than context dependent languages to analyze and interpret. It is also a fact known to linguists that natural languages are highly context dependent. Nevertheless, since there is a trend for technical terms to have precisely defined meanings in a context independent manner, scientific literature may be more amenable to automatic translation. While compiling this list I have attempted to preserve the context independent uniqueness to ease automatic translation.

கலைச்சொற்கள் பெரும்பாலும் ஒருத்துவமானவையாயினும், விதிவிலக்குகளும் உள்ளன. கலைச்சொற்களுக்கும் இயல்மொழிச் சொற்களுக்கும் இடையே உள்ள பிரிவு கூர்மையானதன்று. இவற்றுக்கு இடைப்பட்ட சொற்களும் பல உள்ளன. எடுத்துக்காட்டாக, *resolution* என்ற சொல் இயல்மொழியில் *resolution of a conflict, New Year's resolution* என்ற வெவ்வேறு பொருட்களிலும், அறிவியலில் *resolution of an instrument, resolution of a vector* என்ற வெவ்வேறு பொருட்களிலும் பயன்படுகிறது. இவ்வாறான பொருள்மயக்கங்கள் தமிழிலும் உள்ளன. செவ்வாய், புதன், வியாழன் என்ற சொற்கள் கிழமைகளையும் குறிக்கின்றன, கோள்களையும் குறிக்கின்றன. ஆங்கிலத்தில் அவ்விரு கணங்களுக்கும் வெவ்வேறான சொற்கள் உள்ளன. இதுபோன்ற இடங்களில் பொருள் வேறுபாடு தோன்றுமாறு சொற்களை பொருள்மயக்கநீக்க வேண்டிய அவசியத்துக்குள்ளாகிறோம். இந்நூலிலுள்ள பட்டியல்களில் பொருள்மயக்கநீக்கக் குறிப்புகளை அடைப்புக்குறிகளுக்குள் தருவதன்மூலம் ஒவ்வொரு பதிகையும் ஒருத்துவமானதாக இருக்குமாறு அமைக்க முயன்றிருக்கிறேன்.

Although technical terms are mostly unique, there are exceptions too. There is no sharp distinction between words of natural language and scientific terms. There are many words at intermediate levels. For example, the word resolution is used in natural language as in resolution of a conflict and New Year's resolution with different meanings; and in science as resolution of an instrument and resolution of a vector with different meanings. Such ambiguities are present in Tamil too. The words செவ்வாய், புதன், வியாழன் represent days of the week as well as planets. In English there are different words for the two sets. In such situations, we have a need to disambiguate words in order to distinguish the meanings. I have attempted to make each entry in the tables of this book unique by giving disambiguating notes within parentheses.

ஆங்கிலத்தில் ஒரே பொருளைத் தரும் பல சொற்களும் உள்ளன. *Lattice, grid, grill* ஆகிய மூன்று சொற்களும் கிட்டத்தட்ட ஒரே பொருளுடையவை. ஆயினும், அறிவியலில் *lattice* என்ற சொல்லைப் பயன்படுத்தும் இடங்களில் *grid* பயன்படுத்துவதில்லை; திருப்பியவாறும்.

Lattice என்ற சொல்லுக்கு நிகராக ஒரு தமிழ்ச் சொல்லையும், *grid* என்பதற்கு நிகராக மற்றொரு தமிழ்ச்சொல்லையும் நாம் தேர்ந்தெடுத்து இயைபுடன் பயன்படுத்த வேண்டும். அப்படியானால்தான், மீள்திருப்ப மொழிபெயர்ப்பின்போது சரியான ஆங்கிலச் சொல்லைப் பெற இயலும்.

> *In English there are many words with the same meaning. The three words lattice, grid, and grill mean nearly the same thing. However, in scientific contexts where lattice is used, grid is not used and vice versa. We should select a Tamil word corresponding to lattice and another Tamil word for grid and use them consistently. Only then we can get the correct English word during reverse translation.*

இணை என்பது தமிழில் பலபொருள் ஒரு சொல்லாக உள்ளது. *Pair, connection, parallel, bond, double, doublet, couple, consistent, agreement, ortho* போன்ற பல ஆங்கிலச் சொற்களுக்கு நிகராக இச்சொல்லைப் பயன்படுத்தும் ஒரு போக்கு நமக்கு இயல்பாகவே உள்ளது. மேலும், *internet*-க்கும் இணையம் என்ற சொல் வழக்கில் வந்துவிட்டது. இணை என்ற சொல்லை *pair* என்பதற்கு ஒதுக்குவது நல்லது. அப்படியானால், மற்றக் கருத்துருக்களுக்கு இச்சொல்லைப் பயன்படுத்தாமல் அந்தந்தக் கருத்துருவுக்கு ஒதுக்கப்பட்ட சொல்லையே பயன்படுத்துவதில் நாம் மிகுந்த கவனமாக இருக்கவேண்டும். இதன் மறுபக்கமாக, இரண்டு கருத்துருக்கள் ஒரே ஆங்கிலச் சொல்லால் விவரிக்கப்படும்போது, அந்தக் கருத்துருக்கள் இரு வேறு தமிழ்ச் சொற்களால் பிரித்தறியப் படவேண்டும். எடுத்துக்காட்டாக, *translation* நகர்த்தல் என்ற பொருளையும், மொழிபெயர்த்தல் என்ற பொருளையும் தரலாம், இதுபோன்ற இடங்களில் நான் அடைப்புக்குறிக்குள் பொருள்மயக்கநீக்கச் சொற்களுடன் இரண்டு பதிகைகள் செய்கிறேன்.

> *The word* இணை *has many meanings in Tamil. There is a natural trend to use it corresponding to English words such as pair, connection, parallel, bond, double, doublet, couple, consistent, agreement, and ortho. Further, the word* இணையம் *has come into practice for internet. It is preferable to reserve the word* இணை *for pair. Then we should be careful not to use this word for any other concept and to use the word assigned for each of those concepts. On the other hand, when two different concepts are described by the same English word, the concepts need to be distinguished with two different Tamil words. For example, translation can mean* நகர்த்தல் *as well as* மொழிபெயர்த்தல். *In these cases, I make two entries with disambiguating words in parentheses.*

தமிழில் கலைச்சொற்களை உருவாக்கப் பல முறைகள் உள்ளன. ஆறு கரிம அணுக்கள் அடங்கிய தெவிட்டிய நீரியக்கரிமத்தின் பெயர் *hexane*. இதைத் தமிழில் எழுதுவதற்கான மூன்று முறைகளை இங்கு எடுத்துரைக்கிறேன். முதலாவதாக, ஹெக்ஸேன் என்று எழுதுவது ஆங்கிலப் பெயரின் ஒலியைத் தமிழ் எழுத்துக்களால் எழுதுவதாகும். இம்முறையைப் பேச்சொலியியல் முறை எனலாம். இரண்டாவதாக, வடமொழி எழுத்துக்களை நீக்கிவிட்டுத் தூய தமிழ் எழுத்துக்களால் கெச்சேன் என்று எழுதுவதைத் தமிழியலாக்க முறை எனலாம். இம்முறைக்கான வழியுரைகள் நன்னூல் என்ற தொன்மையான தமிழிலக்கண நூலின் *146* முதல் *150* வரையான வாய்ப்பாடுகளில் விவரிக்கப்பட்டுள்ளன. மூன்றாவதாக, *hexa-* என்ற

முன்னொட்டு ஆறு என்ற எண்ணைக் குறிப்பதால், ஆற- என்ற முன்னொட்டை நாமும் பயன்படுத்தி ஆறவேன் என்று எழுதுவது செந்தமிழாக்க முறையாகும்.

There are many methods to create technical words in Tamil. The name of a saturated hydrocarbon with six carbon atoms is hexane. I illustrate three methods of writing this in Tamil. First, ஹெக்ஸேன் arises from writing the sounds of the English name using Tamil letters. We may call this the phonetic method. Second, removing Tamil letters of foreign origin and using only the native Tamil letters to get கெச்சேன் may be termed the Tamilization method. The general guidelines of this method are described in the ancient Tamil grammar book நன்னூல் in formulae 146 through 150. Third, since the prefix hexa- denotes the number six, using ஆற- as a prefix and writing ஆறவேன் is the செந்தமிழ் method.

தமிழில் அறிவியல் கலைச்சொற்கள் பரணமிக்கும் வரலாற்றை உற்றுப்பார்க்கும்போது ஒரு முக்கிய உண்மை தெளிவாகிறது. நான் பள்ளியில் படித்த காலத்தில் science, physics, chemistry ஆகிய சொற்கள் முறையே விஞ்ஞானம், பௌதிகம், ரசாயனம் என்றிருந்தன. தற்காலத்தில் அவை அறிவியல், இயற்பியல், வேதியியல் எனப்படுகின்றன. Solid, liquid, gas ஆகியவை திடம், திரவம், வாயு ஆகியவற்றிலிருந்து, திண்மம், நீர்மம், வளிமம் என்று மாறிவிட்டன. Meiosis மெய்யாசிஸ் என்று எழுதப்பட்ட காலம் ஒன்றிருந்தது. தற்காலத்தில் குன்றற்பிரிவு எனப்படுகிறது. இவ்வாறாக செந்தமிழ்ச் சொற்களை நோக்கி நகரும் ஒரு தெளிவான போக்கு தமிழ் மக்களிடையே இருக்கிறது. ஆசிரியர்கள் பேச்சொலியியல் முறையை இன்னும் பயன்படுத்துவதற்கான ஒரே காரணம் அவற்றுக்கு நிகரான செந்தமிழ்ச் சொற்கள் அவர்களிடம் இல்லாததே என்று எனக்குத் தோன்றுகிறது. அவ்வாறான சொற்களை அவர்களுக்கு அளிப்பதே இந்நூலின் நோக்கம்.

An important fact becomes obvious when we examine the history of evolution of technical terms in Tamil. When I was in school the words science, physics, and chemistry were விஞ்ஞானம், பௌதிகம், and ரசாயனம் respectively. At present they are written as அறிவியல், இயற்பியல், and வேதியியல். Solid, liquid, and gas changed from திடம், திரவம், and வாயு to திண்மம், நீர்மம், and வளிமம். There was a time when meiosis was written as மெய்யாசிஸ். At present it is குன்றற்பிரிவு. Thus there is a clear tendency among Tamil people to move towards செந்தமிழ் terminology. The only reason I can envision for authors to still use the phonetic method is that the corresponding செந்தமிழ் terms are not available to them. The purpose of this book is to make such terms available to them.

கலைச்சொற்கள் செந்தமிழில் இருக்கவேண்டும் என்ற முடிபு ஒரு தனிமனிதனின் தமிழ்ப் பற்றால் எழுந்ததன்று. தன்னியைபுடைய பட்டியலை உருவாக்கும் நோக்கத்தின் தவிர்க்கவியலாத பின்விளைவுதான் அது. செந்தமிழாக்கமா, தமிழியலாக்கமா, ஒலியாக்கமா என்றெல்லாம் விவாதித்துக்கொண்டிராமல், நாம் இன்று காணும் செந்தமிழ்ப் போக்கு முற்றுப்பெறுமாறு விரைவில் நீட்டி விடுவதே நலம் பயக்கும். இல்லாவிட்டால், தமிழ் அறிவியல் ஓர் ஒழுங்கில்லாத, இயைபற்ற, கலப்படமான மொழியால் எழுதப்படுவது தொடர்வதுடன், அது செந்தமிழை நோக்கி மிக மெதுவாகப் பரிணமித்துக் கொண்டிருக்கும். அவ்வாறான பரிணாமம் மாணவர்களுக்குக் குழப்பத்தையே விளைவிக்கும். Meiosis என்பதைக் குன்றற்பிரிவு என்று எழுதினால், mitosis என்பதை மைட்டாசிஸ் என்று எழுதுவது

இயைபின்மை; அதை இழையுருப்பிரிவு என்று எழுதுவதே இயைபுடைமை. *Respiration* என்ற சொல்லுக்கு மூச்சுவிடல் என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தால் அது மாறாமல் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். சுவாசம் என்ற சொல்லைத் தேர்ந்தால் செந்தமிழ் விரும்புவோர் மீண்டும் அதை மாற்றக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

> *The conclusion that technical words should be in செந்தமிழ் does not arise from an individual's love for the language. It is an inevitable consequence of making a self-consistent list. Instead of arguing among செந்தமிழ், Tamilization, and phonetic method, my view is that it is beneficial to extrapolate quickly so that the current trend towards செந்தமிழ் may be completed. Otherwise, science in Tamil would continue to be written in a mixed, inconsistent, and chaotic language; and it will very slowly evolve towards செந்தமிழ். Such an evolution can only cause confusion to students. If meiosis is written as குன்றற்பிரிவு, then it is inconsistent to write mitosis as மைட்டாசிஸ்; it is consistent to write it as இழையுருப்பிரிவு. If we choose மூச்சுவிடல் for respiration, it is expected not to change. If we choose சுவாசம், there is a possibility that the செந்தமிழ் proponents would change it again.*

ஆகவே, கலைச்சொற்கள் இயன்றவரை செந்தமிழிலேயே இருக்குமாறு அமைத்திருக்கிறேன். செந்தமிழச் சொல் கிடைக்காத சில இடங்களில் தமிழியலாக்கிய ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறேன். வெளிநாட்டு அறிவியலாளர்களின் பெயர்களை எழுதும்போது, வடமொழி எழுத்துக்களையும் ஃப வரிசை எழுத்தையும் பயன்படுத்தி, சரியான உச்சரிப்பின் மிக அருகிலான எழுத்துக்களால் எழுதுகிறேன். ஆனால் அவர்கள் பெயர்களால் வழங்கும் விதிகள், கருவிகள், கொள்கைகள், வழிமுறைகள் இவ்வாறானவற்றைக் கலைச்சொற்களாகக் கருதி அவற்றைத் தமிழியலாக்கி எழுதுகிறேன். எடுத்துக்காட்டாக, ஜார்ஜ் பெந்தம், ஜோசஃப் டால்ற்றன் ஹுக்கர் ஆகியோர் வழங்கிய வகைப்பாட்டு முறை பெந்தங்குக்கர் வகைப்பாடு என்றும், ஜார்ஜ் லக்லாஞ்சி என்பவர் கண்டுபிடித்த மின்கலம் அவர் பெயரால் இலக்கலாஞ்சி மின்கலம் என வழங்கப் படுகிறது என்றும் எழுதலாம். இங்கு அறிவியலாளர் தமிழர் அல்லாராதலால், அவர்களுடைய பெயர்கள் அயல் ஒலிகளைக் கொண்டிருப்பதுடன், தமிழ் இலக்கண விதிகளையும் மீறுகின்றன (லகரத்தில் தொடங்குவதும், ககர ஒற்றைத் தொடர்ந்து லகரம் வருவதும்). அறிவியலாளர்களின் பெயர்களை மாற்றுவதற்கு நமக்கு உரிமையில்லை. இதுபோன்ற தவிர்க்கவியலாத நேரங்களில் பயன்படுத்தத்தான் வடமொழி எழுத்துக்களைத் தமிழில் நம் முன்னோர் சேர்த்திருக்கின்றனர். ஆயினும் வகைப்பாட்டு முறையையும் மின்கலத்தையும் குறிக்கும் பெயர்ச்சொற்களைத் தமிழிலிக்கண விதிகளைப் பின்பற்றும் வகையில் வடிவமைத்துக்கொள்ளும் உரிமை நமக்குண்டு.

> *Hence I have written technical words in செந்தமிழ் as much as possible. On some occasions where I could not find செந்தமிழ் words, I have used Tamilized English words. While writing the names of foreign scientists, I have used Tamil letters of foreign origin and ஃப series of letters that are closest to the correct pronunciation. However, I consider the laws, instruments, principles, processes etc. that are named after them as technical terms; and I Tamilize them. For example, we can write ஜார்ஜ் பெந்தம், ஜோசஃப் டால்ற்றன் ஹுக்கர் ஆகியோர் வழங்கிய வகைப்பாட்டு முறை பெந்தங்குக்கர் வகைப்பாடு and ஜார்ஜ் லக்லாஞ்சி என்பவர் கண்டுபிடித்த மின்கலம் அவர் பெயரால் இலக்கலாஞ்சி மின்கலம் என வழங்கப் படுகிறது. Here since the scientists are not Tamilians, their names not only contain foreign sounds but also*

violate Tamil grammatical rules (beginning with ல and க்ல combination). We have no right to change scientists' names. It is for use under such unavoidable circumstances that our ancestors have included foreign letters into Tamil. However, we do have the right to design nouns representing the classification method and the electric cell to satisfy Tamil grammatical rules.

புதிய செந்தமிழ்ச் சொற்களை முதலில் சந்திக்கும்போது அவை வேடிக்கையாகத் தோன்றலாம். ஹெக்ஸேன் என்று சொல்லிப் பழகியவர்களுக்கு ஆறவேன் என்று சொல்வது வேடிக்கையாகத்தான் தோன்றும். விஞ்ஞானம் என்று சொல்லிப் பழகியவர்களுக்கு அறிவியல் என்று சொல்வது முதலில் வேடிக்கையாகத்தான் இருந்தது. இப்போது அறிவியல் என்று சொல்வதே இனிமையாக இருக்கிறது. கணினி, குறுந்தகடு, இணையம், புகுபதிகை, கடவுச்சொல் என்பன போன்ற சொற்களை முதலில் நாம் கேட்கும்போது வேடிக்கையாகத் தோன்றின. ஆனால் குறுகிய காலத்திலேயே நாம் அவற்றைப் பயன்படுத்திப் பழகிவிட்டோம்.

On first encounter the செந்தமிழ் words may seem funny. Saying ஆறவேன் would seem funny to those who are used to saying ஹெக்ஸேன். Saying அறிவியல் did at first seem funny to those who were used to saying விஞ்ஞானம். Now we like saying அறிவியல். Words like கணினி, குறுந்தகடு, இணையம், புகுபதிகை, கடவுச்சொல் did seem funny when we first heard them. But we got accustomed to using them over a short period of time.

தமிழ்ச் சொற்களை ஆக்கும்போது கவனிக்க வேண்டியவை திட்டவட்டம், ஒருத்துவம், துல்லியமான பொருள், இயன்றவரை செந்தமிழ் ஆகியவை. ஒரு தமிழ்க் கலைச்சொல் ஒரு கருத்துருவைக் குறிப்பதாகவும் அக்கருத்துரு எப்போதும் அதே சொல்லால் குறிப்பதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறான சொல்லைத் தேர்வுசெய்வதற்காகக் கீழ்க்கண்ட வழியுரைகளைக் கடைப்பிடிக்கிறேன்:

1. வேற்று நாட்டு அறிவியலாரின் பெயர்கள் இயன்றவரை உச்சரிப்பு மாறாமல் தமிழெழுதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு தமிழெழுதும்போது வடமொழி எழுத்துக்களையும், F ஒலியைக் குறிக்கும் ஃப என்ற எழுத்தையும் பயன்படுத்துவது தவிர்க்கவியலாதது.

2. ஆனால் அறிவியலில் வெகுவாகப் பயன்படும் ஒரு கருத்துரு ஓர் அறிவியலாளர் பெயரால் வழங்கும்போது, அது கலைச்சொல்லாகக் கருதப்பட்டுத் தமிழியலாக்கம் செய்யப்படுகிறது.

3. அறிவியலார் பெயரால் வழங்கப்படாத ஒரு கருத்துருவுக்கான செந்தமிழ்ச் சொல் ஏற்கெனவே பழக்கத்தில் இருந்தால், அச் சொல் ஏற்கப்படுகிறது.

4. அவ்வாறான பல சொற்கள் பழக்கத்தில் இருந்தால், கருத்துருவை மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் குறிக்கும் ஒரு சொல் அவற்றுள்ளிருந்து தேர்வுசெய்யப்படுகிறது.

5. பழக்கத்திலிருக்கும் ஒரு சொல் வேறொரு கருத்துருவையும் குறிப்பதாயிருந்தால், அவற்றுள் ஒன்றுக்கு வேறொரு சொல்லைத் தேர்வுசெய்வதன் மூலம் பொருள்மயக்கம் நீக்கப்படுகிறது.

6. பழக்கத்திலிருக்கும் செந்தமிழ்ச் சொல்லைக் கண்டுபிடிக்க என்னால் இயலாவிட்டால், கருத்துருவின் பொருள் விளங்குமாறும் வேறொரு கருத்துருவைக் குறிப்பிடாமலுமான ஒரு புதிய சொல் உருவாக்கப்படுகிறது.

7. அவ்வாறு உருவாக்க இயலாவிட்டால், ஆங்கிலத்தில் பழக்கத்திலிருக்கும் சொல் செந்தமிழ்ச் சொல்லாகத் தோன்றும் வகையில் தமிழியலாக்கப்படுகிறது.

The points to note while making up Tamil words are definiteness, uniqueness, precise meaning, and as close to செந்தமிழ் as possible. A Tamil technical word should denote a concept and that concept should always be denoted by that word. I adhere to the following guidelines in order to select such a word.

1. *The names of foreign scientists are written in Tamil with least change in pronunciation. Tamil letters of foreign origin and ஃப for F sound are inevitably used for this purpose.*

2. *However, when a scientific concept is named after a scientist, the name is considered a technical tern and is Tamilized.*

3. *If there is a செந்தமிழ் word in usage for a concept not named after a scientist, the word is accepted.*

4. *If there are many such words in usage, one is chosen among them to denote the concept clearly and precisely.*

5. *If the word in usage also denotes another concept, ambiguity is removed by chosing another name for one of them.*

6. *If I cannot find a செந்தமிழ் word in usage, a new word is coined in such a way that it clarifies the meaning and does not denote any other concept.*

7. *If I cannot coin such a term, I Tamilize the word in English usage to make it appear செந்தமிழ்.*

சொல்லாக்கமும் மொழியியலாக்கமும் ஆகிய முறைகள் தமிழில் மட்டுமல்லாது மற்ற மொழிகளிலும் பின்பற்றப் படுகின்றன. சீன மொழியில் வேதித்தனிமங்களின் பெயர்கள் அடங்கிய ஆவர்த்தன அட்டவணையை படம் 1 காட்டுகிறது. சதுர வடிவிலுள்ள சீன எழுத்துக்கள் தனிமங்களின் பெயர்களேயன்றி அடையாளங்களல்ல. அடையாளங்கள் உரோமானிய எழுத்துக்களாலேயே குறிக்கப் பட்டுள்ளன. அணு எண் *113* முதல் *118* வரையுள்ள புதிய செயற்கைத் தனிமங்களுக்கு இந்த அட்டவணையைத் தயாரித்த காலத்தில் பெயரிட்டிருக்கவில்லை போலும். பிறமொழிச் சொற்கள் சப்பானிய மொழியில் தகவமைந்ததற்கு இதோ இரண்டு எடுத்துக்காட்டுகள். *Christmas* クリスマス (கிரிசுமசு) ஆனது. சோடியம் என்பதற்கான சொல் ナトリウム *(நடோரியூமு)* அதன் *Natrium* என்ற இலத்தீன் மொழிப் பெயரிலிருந்து வந்தது.

Translation and linguistic naturalization of technical words are followed in languages other than Tamil. படம் 1 shows the periodic table containing the Chinese names of chemical elements. The square Chinese characters are names of elements not symbols. The symbols are written with Roman letters. Apparently elements 113 through 118 had not yet been named when this table was prepared. Here are two examples where the Japanese language has adapted words from other languages. Christmas becomes クリスマス (கிரிசுமசு). The word for sodium ナトリウム (நடோரியூமு) comes from its Latin name Natrium.



படம் 1 சீன மொழியில் வேதித் தனிமங்களின் ஆவர்த்தன அட்டவணை

வேதியியலில் வேதி இனங்களின் பெயர்களை அமைமுறையாக எழுதுவதற்கு விதிகள் உள்ளன. இந்த விதிகள் பன்னாட்டு தூய மற்றும் பயன்பாட்டு வேதியியலார் (பதூபவே) ஒன்றியத்தால் உருவாக்கப்பட்டவை. அதைப்போலவே, தாவர இனங்களைப் பெயரிடுவதற்காக தாவரவியல் பெயரிடுமுறையின் பன்னாட்டு விதிமுறை (தாபவி) என்பதும், விலங்கு இனங்களைப் பெயரிடுவதற்காக விலங்கியல் பெயரிடுமுறையின் பன்னாட்டு விதிமுறை (விபவி) என்பதும் உள்ளன. இந்த விதிகள் வேதிப்பொருள்கள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றின் பெயர்கள் ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டும் என்பதை உள்ளுரைக்கின்றனவா என்ற கேள்வி எழுகிறது. இந்த விதிகளை ஊன்றிப் படிக்கும்போது அப்படியான ஓர் உள்ளுரை இல்லை என்பது விளங்குகிறது. உண்மையில் இந்த விதிகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு விதிகளுக்கிணங்கிய பெயர்கள் அந்தந்த மொழிகளில் உருவாக்கப் பட்டுள்ளன.

There are rules in chemistry to write the names of chemical species systematically. These rules were made by International Union of Pure and Applied Chemistry (IUPAC). Similarly there are International Code of Botanical Nomenclature (ICBN) for naming botanical species and International Code of Zoological Nomenclature (ICZN) for naming zoological species. The question arises whether these rules imply that the names of chemical substances, plants, and animals be in English. When these rules are studied closely it becomes clear that there is no such implication. In fact, these rules have been translated into many languages and names conforming to the rules have been created in those languages.

பொருட்களும் செய்முறைகளும்

Materials and methods

இந்த நூலின் நடப்புப் பதிப்பில் உள்ள பட்டியலுக்காக தமிழ்நாடு அரசு பதிப்பித்த பாடநூற்களிலிருந்து கலைச்சொற்களைத் தொகுத்தேன். ஒன்றிலிருந்து பன்னிரண்டு வரையான வகுப்புக்களுக்குரிய பாடப்புத்தகங்கள் தமிழ்நாடு அரசினரின் இணையதளத்தில் கிடைக்கின்றன. தமிழ் விக்சனரியையும் ஒரு வளமாகப் பயன்படுத்தினேன். பொதுவான ஓர் ஆங்கில அகராதி www.dictionary.com என்ற இணையதளத்தில் கிடைக்கிறது. அதை ஆங்கிலச் சொற்களின் சரியான வரையறைகளையும் பன்மடிப் பொருள்களையும் புரிந்துகொள்வதற்காகப் பயன்படுத்தினேன். தேவைக்குத் தகுந்தபடி மேற்பட்ட தகவல்களைப் பெறுவதற்காகப் பொதுவான கூகிள் தேடல்களையும் பல விக்கிப்பீடியா ஆய்வுரைகளையும் பயன்படுத்தினேன். தொகுப்பின்போது வளர்ந்து வரும் பட்டியலை மேலாள்வதற்காக *Microsoft Excel* என்ற மென்பொருளைப் பயன்படுத்தினேன். இந்த மென்பொருளில் தேவையானபோது தமிழ் அகரவரிசையிலோ அல்லது ஆங்கில அகரவரிசையிலோ பட்டியலை மறுமுறைமையாக்கும் வசதி இருக்கிறது. தமிழில் தொடுதட்டச்சுவதற்கு ஒரு தமிழ்99 விசைப்பலகையைப் பயன்படுத்துகிறேன்.

> *For the list contained in the current version of this book I collected technical words from the textbooks published by Tamilnadu government. Textbooks for first through twelfth standards are available at Tamilnadu Government's website. I also used Tamil Wiktionary as a resource. A general English dictionary is available at www.dictionary.com. I used it in order to understand the correct definitions and multiple meanings of English words. I also used general Google searches and several Wikipedia articles for additional information as needed. I used Microsoft Excel as the software to manage the growing list during collection. There is facility in this software to reorder the list according to Tamil or English alphabetical order as needed. I use a Tamil99 keyboard for touch-typing in Tamil.*

பத்தாம் முதல் பன்னிரண்டாம் வகுப்புக்களுக்குரிய அறிவியல் தொழில்நுட்பப் பாடப்புத்தகங்களை வாசித்துப் பார்த்துக் கலைச்சொற்களைக் குறிப்பெடுத்தேன். ஒரே புத்தகத்தின் தமிழ் பதிப்பையும் ஆங்கிலப் பதிப்பையும் அருகருகே வைத்து வாசித்தேன். ஆங்கிலப் பதிப்பில் ஒரு கலைச்சொல்லை எதிர்கொண்டபோது தமிழ்ப் பதிப்பில் அதற்கு நிகராகவுள்ள சொல்லைக் கண்டுபிடித்தேன். ஆங்கிலச் சொற்கள் நன்கு நிறுவப்பட்டவையாதலால் அவற்றை இருந்தபடியே குறித்துக்கொண்டேன். நிகரான ஒரு தமிழ்ச் சொல்லைப் பெற கீழ்க்கண்ட படிகளாலான ஒரு செய்முறையைப் பின்பற்றினேன்:

1. புத்தகத்தின் தமிழ்ப் பதிப்பிலுள்ள சொல் முன்சொன்ன வழியுரைகளைப் பின்பற்றினால் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன்.

2. தமிழ்ப் புத்தகத்திலுள்ள சொல் வழியுரைகளுடன் இணங்காவிட்டால், ஆங்கிலச் சொல்லைத் தமிழ் விக்சனரியில் தேடுகிறேன். சொல் அங்கு இருந்தால், நிகரான தமிழ்ச் சொல்லை அல்லது பல சொற்களிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறேன்.

3. ஆங்கிலச் சொல் விக்சனரியில் இல்லாவிட்டாலோ அல்லது அங்குள்ள தமிழ்ச்சொற்களில் எதுவும் வழியுரைகளைப் பின்பற்றாவிட்டாலோ, ஒரு புதிய சொல்லைக் கட்டமைக்க முயல்கிறேன். அதற்காக முதலில் இணையவழி ஆங்கில அகராதியில் பொருள் காண்கிறேன். அந்த அகராதி பெரும்பாலும் கலைச்சொல்லின் கிரேக்க அல்லது இலத்தீன் போன்ற மூலச்சொல்லைத் தருகிறது. அவசியமானால் விக்கிப்பீடியா ஆய்வுரை அல்லது பொதுவான கூகிள் தேடல் மூலம் இந்தச் சொல் அறிவியலில் பயன்படும் சூழமைவுகளைப் பற்றிய தகவல்களையும் சேகரிக்கிறேன். இவற்றின் அடிப்படையில் வழியுரைகளைப் பின்பற்றும் ஒரு சொல்லை உருவாக்க முயல்கிறேன்.

4. வேறெதிலும் வெற்றி கிடைக்காவிட்டால் இறுதி முயற்சியாக ஆங்கிலச்சொல்லைப் பேச்சொலி மூலம் தமிழாக்குகிறேன். இதற்காக முதலில் ஆங்கில அகராதியில் சரியான உச்சரிப்பைப் பார்க்கிறேன். இந்த உச்சரிப்பு தமிழுக்கு மிகவும் அயலாகத் தோன்றாவிட்டால் அதை அப்படியே வைத்துக்கொள்கிறேன். அயலாகத் தோன்றினால் அதைத் தமிழியலாக்குகிறேன். அறிவியலாளர்களின் பெயர்கள் தமிழியலாக்குவதற்கு ஒரு விதிவிலக்கு. இயற்பெயர்களின் சரியான உச்சரிப்புகளை வடமொழி எழுத்துக்களைப் பயன்படுத்தியாவது தமிழில் மீளுருவாக்க முயல்கிறேன்.

5. ஒரு புதிய சொல்லை எழுதும்போது அதனுடன் தொடர்புடையவையும் பட்டியலில் ஏற்கெனவே இருப்பவையுமான மற்றச் சொற்களை இயைபுடைமைக்காக மாற்றுவது சில நேரங்களில் அவசியமாகிறது. ஆகவே இது ஒரு மறுசுருள் வழிமுறை ஆகிறது.



படம் 2 செய்முறையைக் காட்டும் திரைநிலைப்படம்

I read the science and technology textbooks for tenth through twelfth standards and noted the technical words. I read the English and Tamil versions of the same book side by side. When I came across a technical word in the English version I spotted the corresponding word used in the Tamil version. Since the English words are well established I noted them as such. For a corresponding Tamil word I followed a procedure with the following steps:

1. *If the word in the Tamil version of the book follows the guidelines mentioned above, then I take it as such.*

2. *If the word in the Tamil book does not conform to the guidelines, I look up the English word in Tamil Wiktionary. If the word appears there, I select from the corresponding Tamil word or words.*

3. *If the English word does not appear in Wiktionary or if none of the Tamil words listed there follows the guidelines, then I attempt to construct a word. To do this I first look at the online English dictionary for the meaning. Invariably the dictionary lists origin for technical terms, usually Greek or Latin. If necessary I look for a Wikipedia article or make a general Google search to gather some relevant context in which the term is used in science. Based on these I try to come up with a Tamil word satisfying the guidelines.*

4. *If all else fails, as a last resort I transliterate the English word. To do this I first look in the English dictionary for the correct pronunciation. If the pronunciation does not sound too awkward in Tamil I use it as such. If it does, I Tamilize it. One exception to Tamilization is for names of Scientists. I try to reproduce the exact pronunciation of proper names in Tamil even by using letters of foreign origin.*

5. *When writing a new word, it sometimes becomes necessary to modify related words already on the list for consistency. Thus this is an iterative process.*

தமிழ் ஆங்கிலப் பாடப்புத்தகங்களின் பக்கங்களையும் வளர்ந்து வரும் பட்டியலின் ஒரு பகுதியையும், ஓர் இணைய மேலோடியையும் என் கணினித் திரையில் ஒரே நேரத்தில் பார்க்கும்படியான ஒரு பாவு சாளர அமைப்பைப் படம் 2 திரைநிலைப்படமாகக் காட்டுகிறது. மேலோடியில் உள்ள தத்தல்களுள் தமிழ் விக்சனரியையும், ஆங்கில அகராதியையும், கூகிள் தேடல் முடிவுகளையும் காட்டுபவை அடங்கியுள்ளன. எல்லா வளங்களும் கணினி மூலமும் இணையம் மூலமும் கிடைப்பதால் இந்த வேலை பல வன்னகல் புத்தகங்களைக் கையால் புரட்டும் முறையை விட எளிதாகிறது.

படம் 2 *shows a tiled window system as a screenshot where I can see the pages of Tamil and English textbooks, a part of the growing list, and an internet browser at the same time on my computer screen. The browser contains tabs showing Tamil Wiktionary, English dictionary, and*

Google search results. Since all resources are available through computer and internet, this work becomes easier than flipping through many hard copy books by hand.

மேலே குறிப்பிட்ட பள்ளிப் பாடநூல்கள் எல்லாவற்றையும் வாசித்துக் கலைச் சொற்களைத் தொகுத்தபின், ஒருத்துவமும் திட்டவட்டமும் செயலுறுதியாகுமாறு பட்டியலைப் பரிசீலித்தேன். முதலில் பட்டியலை ஆங்கிலச் சொற்களால் அகரவரிசையாக்கி, மேலிருந்து கீழாக வாசித்தேன். ஒரே ஆங்கிலச் சொல் ஒரு தடவைக்கு மேல் வந்து அதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்ச்சொற்கள் பட்டியலில் இருந்தால் அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தேன். பிறகு தமிழ்ச் சொற்களால் அகரவரிசையாக்கி மீண்டும் வாசித்து ஒரு தமிழ்ச்சொல் ஒன்றுக்கு மேற்பட்ட ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக வந்தால், ஒன்று தவிர மற்றவற்றுக்கு வேறு தமிழ்ச்சொற்களை எழுதினேன். இவ்வாறு எழுதும்போது புதிய சொற்களும் ஏற்கெனவே பட்டியலில் இருக்கும் வாய்ப்பு உள்ளது. ஆகவே இது ஒரு மறுசுருள் வழிமுறை ஆகிறது. ஆனால் இந்த மறுசுருள் விரைவில் குவிபோவதால் ஓரிரண்டு மீள்பார்வைகளில் வழிமுறை முற்றுப்பெறுகிறது. அகரவரிசையில் ஒத்த முன்னொட்டுச் சொற்கள் அருகில் தொகுக்கப்படுவதால், இந்த வழிமுறை இயைபுடைமையை ஓரளவு சரிபார்ப்பதற்கும் உதவுகிறது.

After reading all textbooks mentioned above and collecting all technical words, I examined the list to guarantee uniqueness and definiteness. First I alphabetized the list on the English words and read it from top to bottom. If the list contained an English word more than once with more than one Tamil word corresponding to it, I chose one among them. Then I alphabetized on the Tamil words and read again. If a Tamil word appeared corresponding to more than one English word, I wrote new Tamil words for all but one. While writing such new words there is a chance that the new words may already be on the list. Hence this becomes an iterative process. But since this iteration converges rapidly, the process terminates after a few reviews. Since words with similar prefixes are grouped together in the alphabetic order, this process also helps to check consistency to some extent.

புதிய கலைச்சொற்களை உருவாக்கும்போது இலக்கண விதிகள் அனைத்தையும் கடைப்பிடித்தால்தான் அச் சொற்கள் செந்தமிழ்ச் சொற்களாக இருக்கும். ஒரு சில விதிகளைத் தளர்த்தினால் பிறகு மற்ற சில விதிகளையும் தளர்த்தலாம்; அவ்வாறே எல்லா விதிகளையும் தளர்த்திவிடலாம். எந்தெந்த விதிகளைத் தளர்த்தலாம் என்பதற்குத் திட்டவட்டமான வழியுரைகள் இல்லை. சொல்லாக்கத்தின்போது மனதில் கொள்ளவேண்டிய விதிகளுள் சில கீழ்வருவன:

1. தமிழ்ச்சொல் புள்ளிவைத்த ஒற்றெழுத்தில் தொடங்காது. Gram என்ற சொல்லைத் தமிழில் க்ராம் என்று எழுதுவது இந்த விதியை மீறும். ஆகவே கிராம் என்று எழுதுகிறோம்.
2. டகர, ணகர, ரகர, லகர, ழகர, ளகர, றகர, னகர ஆகிய எழுத்துக்கள் எந்த உயிரெழுத்துடன் சேர்ந்தும் சொல்லின் முதலில் வாரா. டேனியலின் மின்கலம், ரேடியம், லக்கலாஞ்சியின் மின்கலம் போன்றவை இந்த விதியை மீறுவதால் முறையே இடேனியலின் மின்கலம், இரேடியம், இலக்கலாஞ்சியின் மின்கலம் என்று சொல்கிறோம்.
3. வல்லின ஒற்றுகளும் ஙகர ஒற்றும் (அதாவது, க், ங், ச், ட், த், ப், ற் ஆகிய எழுத்துக்கள்) தமிழ்ச் சொல்லின் கடைசி எழுத்தாக இருக்காதவை. (நன்னூல் 107). அசிற்றிக் அமிலம் என்பது இந்த விதியை மீறும். ஆகவே அசிற்றிக அமிலம் என்கிறோம்.

4. *ககர, சகர, தகர, பகர ஒற்றுக்களை அடுத்து அதே எழுத்தின் உயிர்மெய் வடிவமே வரலாம்: வேறெந்த மெய்யெழுத்தும் வராது. சக்கரம், உச்சி, மீத்தேன், உப்பு ஆகியவை சரியானவை. ஆனால், மெட்ரிக அமைப்பு என்றும், பாக்டீரியம் என்றும் எழுதுவது இந்த விதியை மீறும். ஆகவே, மெட்டிரிக அமைப்பு என்றும் பாட்டீரியம் என்றும் எழுதுகிறோம்.*
5. *ரகர, ழகர ஒற்றுக்களை அடுத்து அதே எழுத்து தனியாகவோ உயிர்மெய்யாகவோ வராது. சர்ரியல் என்ற சொல் இந்த விதியை மீறுகிறது. ஆகவே இயல்புமீறு என்று தமிழாக்கிச் சொல்கிறோம்.*
6. *மேற்சொன்ன ஆறு தவிர மற்ற பன்னிரண்டு ஒற்றுக்களையும் தொடர்ந்து (அதாவது, ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் ஆகிய எழுத்துக்களைத் தொடர்ந்து) எந்த எழுத்தும் வரலாம். (நன்னூல் 110)*

இந்த விதிகளைக் கடைப்பிடித்தால் தமிழின் இயல்பு மாறாமல் இருக்கும். தமிழில் எழுதிய அறிவியல் நூல்கள் வேற்று மொழியில் எழுதியது போன்று இப்போதிருக்கும் தன்மை மறையும். நன்னூல் ஆசிரியர்

> *பழையன கழிதலும் புதியன புகுதலும்*
> *வழுவல கால வகையி னானே*

என்று சொன்னது உண்மைதான். ஆனால் அவர் சொன்னதை நாம் தவறாகப் புரிந்துகொண்டோம். தமிழின் இயல்பைப் பாதுகாக்க நாம் கடைப்பிடிக்க வேண்டிய இலக்கண விதிகளை நாநூற்றறுபத்தொரு வாய்ப்பாடுகளால் விவரித்துக் கூறிவிட்டு இறுதி வாய்ப்பாடான 462-ஆம் வாய்ப்பாட்டில் நூலின் புறனடையாக இதைச் சொன்னார். மேலும் அவர் 'பழையன கழித்தலும், புதியன புகுத்தலும்' என்று சொல்லவில்லை. அவை காலத்தின் போக்கால் தானாக நிகழ்ந்தால் அதில் தவறில்லை (வழுவல) என்று சொல்கிறார். இக்காலத்தில் அறிவியல் தொடர்பான சொற்களை நாம் உருவாக்குவது தவிர்க்கவியலாதது. அது புதியன புகுதலைக் குறிக்கிறது. உரல், உலக்கை, அம்மி, அம்மிக்குழைவி, ஆட்டுரல் போன்ற கருவிகளை இக்காலத்தில் நாம் பயன்படுத்துவதில்லை. அவை பழையனவாகக் கழிகின்றன.

New technical words would be in செந்தமிழ் only if we follow all grammatical rules. If we relax some of the rules, then we can relax some more rules and thus we can relax all of the rules. There is no definite guideline to say which rules can be relaxed. The following are some rules to keep in mind during the construction of new words:

1. *Tamil words do not start with a pure consonant that has a dot over it. Writing gram as க்ராம் would violate this rule. So we write கிராம்.*
2. *The consonants ட, ண, ர, ல, ழ, ள, ற, ன do not start a word in combination with any vowel. டேனியலின் மின்கலம், ரேடியம், லக்கலாஞ்சியின் மின்கலம் would violate this rule. So we say இடேனியலின் மின்கலம், இரேடியம், இலக்கலாஞ்சியின் மின்கலம் respectively.*
3. *The pure plosive consonants (க், ச், ட், த், ப், ற்) and the pure consonat ங் cannot be the last letter of a Tamil word (Nannool 107). அசிற்றிக் அமிலம் would violate this rule. So we say அசிற்றிக அமிலம்.*
4. *Following each of க், ச், த், ப், only the same consonant in combination with any vowel can appear; no other consonant can appear. சக்கரம், உச்சி, மீத்தேன், உப்பு are correct.*

However, writing மெட்ரிக் அமைப்பு and பாக்டீரியம் would violate this rule. So we write மெட்டிரிக அமைப்பு and பாட்டீரியம்.

5. *Following each of ர், ழ் the same letter cannot appear either purely or in combination with a vowel. சர்ரியல் would violate this rule. So we write இயல்புமீறு in pure Tamil.*
6. *Other than the six mentioned above, the remaining twelve pure consonants (ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன்) can be followed by any consonant (Nannool 110).*

If we follow these rules the nature of Tamil would be preserved. The current appearance of Tamil scientific books as if written in a foreign language would disappear. It is true that Nannool author said

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

However, we have misunderstood what he said. After expounding the rules we need to follow in order to preserve the nature of Tamil in four hundred and sixtyone formulae, he added this last 462nd formula as an exception to his book. Further, he did not word it பழையன கழித்தலும் புதியன புகுத்தலும். If these changes occur spontaneously as time goes on there is nothing wrong with it (வழுவல), he said. At the present time it is inevitable that we create scientific words. This represents புதியன புகுதல். We no longer use devices such as உரல், உலக்கை, அம்மி, அம்மிக்குழைவி, ஆட்டுரல். This represents பழையன கழிதல்.

பாட்டீரியம் என்று எழுதியதை பாக்டீரியம் அல்லது *bacterium* என்று வாசிப்பது தவறு. தமிழ் ஒரு பேச்சொலி மொழியாகும். ஆங்கிலத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் எழுத்துக்கூட்டலும் உச்சரிப்பும் தனித்தனியாக அகராதி தருகிறது. ஆனால் தமிழில் எழுத்துக்கூட்டலிலிருந்தே உச்சரிப்பை பெறுகிறோம். மேலும் தமிழில் ஒலியற்ற எழுத்து என்ற ஒன்றும் இல்லை. ஆகவே, இடேனியலின் மின்கலத்தை டேனியல் மின்கலம் என்றும், இரேடியம் என்பதை ரேடியம் என்றும் வாசிப்பது தவறு.

It is wrong to read பாட்டீரியம் as பாக்டீரியம் or bacterium. Tamil is a phonetic language. In English spelling and pronunciation are given separately for each word. But the Tamil pronunciation is obtained from the spelling. Further there is no such thing as a silent letter in Tamil. Hence it is wrong to read இடேனியல் மின்கலம் as டேனியல் மின்கலம் and இரேடியம் as ரேடியம்.

அறிவியல் இலக்கியத்தில் உள்ளதை உள்ளவாறே கூறுவதுதான் சிறப்பு. 'குண்டிகழுவச் சென்றிருக்கிறான்' என்று சொல்வதற்குப்பதிலாக 'கால்கழுவச்சென்றிருக்கிறான்' என்று சொல்வது தமிழ்மரபு. இதை இடக்கரடக்கல் என்று பெயரிட்டு தமிழிலிக்கணமும் ஏற்றுக்கொண்டது. ஆனால், 'குதத்தில் புண் உள்ளது' என்று சொல்வதற்குப்பதிலாக மருத்துவரிடம் சென்று 'காலில் புண் உள்ளது' என்று சொல்கிறவன் சரியான சிகிச்சையை பெறமாட்டான். முந்தைய சூழமைவில், எதைக்கழுவ சென்றிருக்கிறான் என்ற விவரம் முக்கியமானதாக இல்லை. 'ஏதோவொரு சிறு வேலையாக சென்றிருக்கிறான், விரைவில் வந்துவிடுவான்' என்பதுதான் முக்கியச்செய்தி. ஆகவே, குண்டிகழுவத்தான் சென்றிருக்கிறான்

என்பது சொல்பவருக்கு தெரிந்திருந்தும், சமூகச்சூழலில் அதை சொல்லவேண்டாமென்று 'கால்கழுவ சென்றிருக்கிறான்' என்று பொய்சொல்கிறார். புரைதீர்ந்த நன்மை பயப்பதால், வள்ளுவரின் வரையறையின் படி (திருக்குறள் 292) அந்த பொய்யும் வாய்மைபோன்று ஆகிவிடுகிறது. ஆனால், பிந்தைய சூழமைவில், புண் எங்கே இருக்கிறது என்பது முக்கியச்செய்தி. அதைப்பொருத்தே மருத்துவரின் அடுத்த செயல் இருக்கும். ஆகவே 'காலில் புண் உள்ளது' என்று கூறுவது புரைதீர்ந்த நன்மை பயக்கவில்லை. அதைப்போன்றே, penis, testicle, vagina, breast, intercourse ஆகிய சொற்களுக்கு நிகராகத்தரப்பட்ட ஆண்குறி, விந்தகம், பெண்குறி, மார்பகம், கலவி என்ற சொற்களை இயல்பாகவும் இயைபாகவும் பயன்படுத்தவேண்டும். முலை என்ற சொல் தற்காலத்தில் தகாதசொல்லாக கருதப்படுவதால், மார்பகம் என்ற சொல்லை தேர்ந்தெடுத்தேன். இந்த சொல் பட்டியலில் ஒருமுறைதான் இடம்பெறுவதால், பொருள்மயக்கம் ஏற்படுமோ என்ற அச்சமின்றி எங்கும் பயன்படுத்தலாம். முக்கியமாக மருத்துவர்கள் தங்கள் நோயாளிகளிடம் பேசும்போது இதே சொற்களை பயன்படுத்தினால், விரைவில் பொதுமக்களும் கற்றுக்கொள்வார்கள்.

In scientific literature it is best to state things as they are. Instead of saying 'He has gone to wash his buttocks' it is a Tamil tradition to say 'He has gone to wash his feet'. Naming this practice இடக்கரடக்கல் Tamil grammar has also accepted it. However, instead of saying 'There is swelling in the anus', if someone goes to the doctor and says 'There is swelling in the feet', he will not get the correct treatment. In the former context, the detail of what he has gone to wash is unimportant. 'He has gone for a small task and will return shortly' is the important information. Hence, eventhough the speaker knows that the man has gone to wash his buttocks, in order not to say it in a social setting, he lies by saying 'He has gone to wash his feet'. Since it results in a flawless benefit (Thirukkural 292), according to Valluvar, the lie becomes as good as truth. However, in the latter context, the actual location of the swelling is an important information. The doctor's next action is going to depend on it. Hence, saying 'There is swelling on the feet' does not result in a flawless benefit. Similarly, the words ஆண்குறி, விந்தகம், பெண்குறி, மார்பகம், and கலவி given corresponding to penis, testicle, vagina, breast, and intercourse should be used naturally and consistently. Since the word முலை is considered vulgar in modern times, I have chosen மார்பகம். Since this word appears only once in the list, it can be used everywhere without fear of loss of information. In particular, if doctors use these words while speaking to their patients, common people will soon learn them.

விளைவுகளும் உடனுரையும்

Results and discussion

அறிவியலில் மிகப்பெரும் எண்களும் மிகச்சிறு எண்களும் எழுகின்றன. எடுத்துக்காட்டாக புவியிலிருந்து கதிரவனின் தொலைவு 149,597,870,700 மீட்டர். கரிம அணுவின் (சகதிறன்) விட்டம் $140\,x\,10^{-12}$ மீட்டர். மிகப்பெரிய எண்களையும் மிகச்சிறிய எண்களையும் குறிப்பதற்கு அறிவியலாளர் அறிவியல் குறியீடு என்ற முறையை பயன்படுத்துகின்றனர். இம்முறையில் இலக்கங்களை மும்மூன்றாக தொகுத்து எழுதுவது வழக்கம்; அதாவது ஆயிரத்தின் அடுக்குகளாக தொகுப்பது வழக்கம். இந்த அடுக்குகளுக்கு மெட்டிரிக முறையில் மெகா-, கிலோ-, மில்லி-, மைக்குரோ- போன்ற முன்னொட்டுகள் உள்ளன. ஆயிரத்தின் அடுக்குகளை பெயரிடுவதற்கான சொற்களை ஆக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இதற்காக நான் முன்மொழியும் முறையை அட்டவணை 1 காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, ஐமடியாயிரம் என்பது ஆயிரத்தின் ஐந்தாவது அடுக்கு. இலச்சம், கோடி என்பவை ஆயிரத்தின் அடுக்குகள் அல்லாததால் அவற்றை அறிவியலில் பயன்படுத்தவேண்டாம். இம்முறையில் கதிரவனின் தொலைவை சொற்களால் வாசிக்க நூற்றுநாற்பத்தொன்பது மும்மடியாயிரத்து ஐநூற்றுத்தொண்ணூற்றேழு இருமடியாயிரத்து எண்ணூற்றெழுபது ஆயிரத்து எழுநூறு மீட்டர் எனலாம். எண்களை சொற்களால் எழுதும்போது இடையே காற்புள்ளி வைக்கவேண்டாம்.

எண்	**பெயர்**	***Short scale English names***
10^{3}	ஆயிரம்	*thousand*
10^{6}	இருமடியாயிரம்	*million*
10^{9}	மும்மடியாயிரம்	*billion*
10^{12}	நான்மடியாயிரம்	*trillion*
10^{15}	ஐமடியாயிரம்	*quadrillion*
10^{18}	அறுமடியாயிரம்	*quintillion*
10^{21}	எழுமடியாயிரம்	*sextillion*
10^{24}	எண்மடியாயிரம்	*septillion*
10^{27}	ஒன்பதுமடியாயிரம்	*octillion*
10^{30}	பதின்மடியாயிரம்	*nonillion*
10^{33}	பதினொருமடியாயிரம்	*decillion*
10^{36}	பன்னிருமடியாயிரம்	*undecillion*
10^{39}	பதின்மும்மடியாயிரம்	*duodecillion*

10^{42}	பதிநான்மடியாயிரம்	*tredecillion*
10^{45}	பதினைமடியாயிரம்	*quattuordecillion*
10^{48}	பதினறுமடியாயிரம்	*quindecillion*
10^{51}	பதினெழுமடியாயிரம்	*sexdecillion*
10^{54}	பதினெண்மடியாயிரம்	*septendecillion*
10^{57}	பத்தொன்பதுமடியாயிரம்	*octodecillion*
10^{60}	இருபதின்மடியாயிரம்	*novemdecillion*
10^{63}	இருபத்தொருமடியாயிரம்	*vigintillion*
10^{300}	நூறுமடியாயிரம்	
10^{303}	நூற்றொருமடியாயிரம்	*centillion*

அட்டவணை 1 பெரிய எண்களின் பெயர்கள்

Very large and very small numbers arise in science. For example, the distance of the sun from the earth is 149,597,870,700 *meter. The (covalent) diameter of carbon atom is* $140\ x\ 10^{-12}$ *meter. Scientists use a method called the scientific notation to denote very large and very small numbers. In this method, it is customary to group digits three by three; that is, to group them in powers of thousand. There are prefixes such as mega-, kilo-, milli-, and micro- in the metric system for these powers. We are in a position of having to create words for the powers of thousand.* அட்டவணை 1 *shows the method I propose for this purpose. For example,* ஐமடியாயிரம் *is the fifth power of thousand. Since lakh and crore are not powers of thousand, let us not use them in science. In this method we can say that the distance to the sun is* நூற்றுநாற்பத்தொன்பது மும்மடியாயிரத்து ஐநூற்றுத்தொண்ணூற்றேழு இருமடியாயிரத்து எண்ணூற்றெழுபது ஆயிரத்து எழுநூறு *meter. Let us not use commas in the middle of numbers written in words.*

அட்டவணையில் தமிழ்ப்பெயர்களுக்கும் ஆங்கிலப்பெயர்களுக்குமிடையே ஒரு இயைபின்மை தெளிவாகத்தெரிகிறது. இது ஆங்கிலப்பெயர்களிலுள்ள ஒரு குறைபாட்டையே குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஆயிரத்தின் ஐந்தாவது அடுக்கு நான்குக்கு நிகரான *quad* என்ற முன்னொட்டால் *quadrillion* எனப்படுகிறது. இந்த இயைபின்மையால் எண்களை தழிழுக்கும் ஆங்கிலத்துக்குமிடையே மொழிபெயர்க்கும்போது நாம் கவனமாகத்தான் இருக்கவேண்டும். ஆங்கிலத்தில்போலவே நாமும் ஐந்தாவது அடுக்கை நான்மடியாயிரம் என்று சொல்லும் சாத்தியம் செருப்புக்குத்தகுந்தாற்போல் காலை வெட்டிக்கொள்ளும் சாத்தியத்தைப்போன்றது. தற்காலத்தில் அறிவியல்போன்ற துறைகளில் ஆங்கிலம் ஆதிக்கஞ்செலுத்துவது உண்மைதான். ஆனால் இந்த நிலை சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்ததில்லை; இன்னும் முந்நூறு ஆண்டுகளில் இல்லாமற்போகலாம். ஆங்கிலத்தின் ஆதிக்கம் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளால் ஏற்பட்டது. தமிழ்மொழி அந்த காலக்கட்டத்துக்கு அப்பாற்பட்டது. இந்த அட்டவணையில் நான் தந்திருப்பது குற்றளவு எனப்படும் அமைப்பிலான அமெரிக்க ஆங்கிலப்பெயர்கள்.

அமெரிக்க ஆங்கிலத்துக்கும் பிரித்தானிய ஆங்கிலத்துக்குமிடையேயும் எண்களின் பெயர்களில் ஒரு இயைபின்மை இருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

A discrepancy between the Tamil words and the English words is clearly visible in the table. This indicates a deficiency in the English names. For example, the fifth power of thousand is written quadrillion using the prefix quad- corresponding to four. Due to this discrepancy, we must be careful while translating numbers between Tamil and English. The possibility of calling the fifth power of thosand நான்மடியாயிரம் just as in English is like the possibility of trimming our feet to fit the shoe. It is true that English dominates science and other areas at present. But this situation did not prevail about three hundred years ago; it may not prevail three hundred years since. The dominance of English arose from historical events taking place a century or two ago. Tamil is beyond this time frame. What I have given in the table are the American names in a system called short scale. It is noteworthy that there is a discrepancy between American English and British English regarding the names of large numbers.

பெரிய எண்களின் பெயர்களை அடுத்து, ஆயிரத்தின் அடுக்குகளின் மெட்டிரிக முன்னொட்டுகளை காண்போம். அவ்வாறான ஆங்கில முன்னொட்டுகளையும் அவற்றுக்கு தமிழில் நான் முன்வைப்பனவற்றையும் அவற்றின் திட்டமாக்கிய அடையாளங்களையும் அட்டவணை 2 காட்டுகிறது.

After the names of large numbers, let us see the metric prefixes for the powers of thousand. The English names of such prefixes, my proposals for the Tamil versions, and their standard symbols are shown in அட்டவணை 2.

இயற்பியலில் பயன்படும் அளவைகளின் அலகுகளையும் அவற்றின் அடையாளங்களையும் பன்னாட்டு அலகமைப்பு (பவ) என்ற ஒருங்கமைப்பு திட்டமாக்கியிருக்கிறது. நாமும் அவற்றின் திட்டவட்டமான சமானிகளை பயன்படுத்தவேண்டும். அலகுகளின் பெயர்களை அட்டவணை 3 காட்டுகிறது. இந்த அட்டவணையில் பவ திட்டமாக்கலில் சொன்ன அடிப்படை அலகுகளும் வருவித்த அலகுகளும் உள்ளன. பவ திட்டமாக்கலில் இல்லாத சில அலகுகளும் அட்டவணையின் இறுதிப்பாகத்தில் உள்ளன.

The units of measurements used in physics and their symbols have been standardized by an organization called System International de Units (SI). We too should use their definite equivalents. அட்டவணை 3 *shows the unit names. The table contains the base units and derived units specified in the SI standard. Some units not in the SI standard are also shown towards the end of the table.*

எண்	**தமிழ் முன்னொட்டு**	***English prefix***	**அடையாளம்**
10	தெக்கா	*deca*	*da*
100	எட்டா	*hecta*	*h*
1000	கிலோ	*kilo*	*k*

10^{6}	மெகா	*mega*	*M*
10^{9}	கிகா	*giga*	*G*
10^{12}	தெரா	*tera*	*T*
10^{15}	பேட்டா	*peta*	*P*
10^{18}	எச்சா	*exa*	*E*
10^{21}	சேட்டா	*zeta*	*Z*
10^{24}	யோட்டா	*yotta*	*Y*
0.1	தெசி	*deci*	*d*
0.01	சென்றி	*centi*	*c*
0.001	மில்லி	*milli*	*m*
10^{-6}	மைக்குரோ	*micro*	μ
10^{-9}	நானோ	*nano*	*n*
10^{-12}	பீக்கோ	*pico*	*p*
10^{-15}	பெமுடோ	*femto*	*f*
10^{-18}	அட்டோ	*atto*	*a*
10^{-21}	செட்டோ	*zepto*	*z*
10^{-24}	யோட்டோ	*yocto*	*y*

அட்டவணை 2 ஆயிரத்தின் அடுக்குகளுக்கான மெட்டிரிக முன்னொட்டுகளும் அடையாளங்களும்

முன்னொட்டுகளையும் அலகுகளின் பெயர்களையும் தமிழில் எழுதும் உரிமை நமக்கு இருக்கிறது. ஆனால் அவற்றுக்கான அடையாளங்களை பன்னாட்டு அலகமைப்பு நிர்ணயித்திருக்கிறது. அவற்றை கொடுக்கப்பட்ட உரோமானியகிரேக்கக்குறியீடுகளாலே எழுதவேண்டும். தமிழில் சிறு எண்களை க, உ, ங, ச, ரு. சு. எ. அ கூ என்றெல்லாம் எழுதாமல் *1, 2, 3, 4, ...* என்று உரோமானியக்குறியீடுகளால் எழுதி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ... என்று வாசிப்பதுபோலவே, அளவுகளை 10 கிமீ, 4 நொ, 7 கி என்று எழுதாமல் $10\ km, 4\ s, 7\ g$ என்று எழுதி, பத்து கிலோமீட்டர், நான்கு நொடிகள், ஏழு கிராம் என்று வாசிக்கவேண்டும். அதாவது, இங்கு m என்பது மீட்டரைக்குறிக்கும் ஒரு உரோமானிய அடையாளம்; அதை எம் என்ற ஆங்கில எழுத்தாக எண்ணுவது தவறு.

We have the freedom of writing the number prefixes and unit names in Tamil. Howerver, their symbols are determined by the System International de Units. We must write them in the given Roman or Greek notation. Just like we write small numbers in Tamil not as க, உ, ங, ச, ரு. சு. எ. அ கூ *but using Roman symbols as 1, 2, 3, 4, ... and read them as* ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ..., *we should write measurements not as* 10 கிமீ, 4 நொ, 7 கி *but as* $10\ km, 4\ s, 7\ g$

and read them as பத்து கிலோமீட்டர், நான்கு நொடிகள், ஏழு கிராம். Here m is a Roman symbol denoting meter; it is incorrect to think of it as the English letter em.

Measurement	**அளவு**	***Unit***	**அலகு**	**அடையாளம்**
length	நீளம்	*meter*	மீட்டர்	*m*
mass	நிறை	*kilogram*	கிலோகிராம்	*kg*
time	நேரம்	*second*	நொடி	*s*
electric current	மின்னோட்டம்	*ampere*	ஆம்பியர்	*A*
temperature	வெப்பநிலை	*degree Kelvin*	பாகை கெல்வின்	*K*
amount of substance	பொருளளவு	*mole*	மோல்	*mol*
light intensity	ஒளிச்செறிவு	*candela*	காண்டலா	*cd*
angle	கோணம்	*radian*	ஆரையன்	*rad*
solid angle	திண்மக்கோணம்	*steradian*	திண்மாரையன்	*sr*
frequency	அலைவெண்	*hertz*	எர்சு	*Hz*
force	விசை	*newton*	நியூட்டன்	*N*
pressure	அழுத்தம்	*pascal*	பாசுக்கல்	*Pa*
energy	ஆற்றல்	*joule*	யூல்	*J*
power	திறன்	*watt*	வாட்டு	*W*
electric charge	மின்னூட்டம்	*coulomb*	கூலும்	*C*
electric field potential	மின்புல ஆற்றநிலை	*volt*	வோல்ட்டு	*V*
electric capacitance	மின்தேக்கம்	*farad*	பாரடு	*F*
electric resistance	மின்தடையம்	*ohm*	ஓம்	Ω
electric conductance	மின்கடத்தம்	*siemens*	சீமன்சு	*s*
magnetic flux	காந்தப்பாயம்	*weber*	வெபர்	*Wb*
magnetic flux density	காந்தப்பாய அடர்வு	*tesla*	தெசுலா	*T*
indunctance	தூண்டல்	*henry*	என்ரி	*H*
temperature	வெப்பநிலை	*degree celcius*	பாகை செல்சியசு	*ºC*
luminous flux	ஒளிப்பாயம்	*lumen*	யூமன்	*lm*
illuminance	ஒப்பு ஒளிப்பாயம்	*lux*	யூசு	*lx*

radioactivity	கதிரியக்கம்	*becquerel*	பெக்கரல்	*Bq*
absorbed dose	உட்கவர் அளவு	*gray*	கிரே	*Gy*
dose equivalent	உட்கவர் சமானி	*sievert*	சிவர்டு	*Sy*
catalytic activity	வினையூக்களவு	*katal*	கறல்	*kat*
length	நீளம்	*angstrom*	ஆங்கிதம்	*Å*
length	நீளம்	*centimeter*	சென்றிமீட்டர்	*cm*
volume	பருமன்	*cubic centimeter*	கன சென்றிமீட்டர்	*cc*
mass	நிறை	*gram*	கிராம்	*g*
digital information	எண்மியத்தகவல்	*bit*	இணு	*b*
digital information	எண்மியத்தகவல்	*byte*	எணு	*B*

அட்டவணை 3 அளவைகளின் அலகுகளும் அடையாளங்களும்

ஆயிரத்தின் அடுக்குகளின் பெயர்களையும் அளவைகளின் அலகுகளின் பெயர்களையும் தமிழில் எழுதி, அவற்றின் அடையாளங்களை உரோமானிய அல்லது கிரேக்கக் குறியீடுகளில் எழுதுவதுபோலவே, வேதியியலில் தனிமங்களின் பெயர்களை தமிழில் எழுதி, அவற்றின் அடையாளங்களை உரோமானியக்குறியீடுகளில் எழுதவேண்டும். இந்த முறையை சீன மொழியிலும் கடைப்பிடிப்பதை படம் 1 காட்டுகிறது. தமிழில் வெகுகாலமாக வழங்கிவரும் தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம், துத்தநாகம், கந்தகம் போன்ற பெயர்களை அவ்வாறே எடுத்துக்கொண்டேன். *Hydrogen, helium, oxygen, nitrogen* போன்ற எளிதாக காரணந்தோன்றும் பெயர்களை தமிழிலும் காரணப்பெயர்களாக்கினேன். *Hydrogen* நீரிலிருந்து எழுவதால் நீரியம் ஆனது. *Helium* கதிரவனிலிருந்து வருவதால் கதிரவம் ஆனது. *Biology* உயிரியல் ஆகிவிட்டதால், *Oxygen* என்ற தனிமத்துக்கு உயிரியம் என்ற சொல்லை பயன்படுத்தினால், *bio-, oxy-* ஆகிய இரண்டு முன்னொட்டுகளும் உயிரிய- என்றாகிவிடும். ஆகவே தனிமத்துக்கு மூச்சியம் என்று பெயரிட்டேன். அப்படியானால், *oxidation* மூச்சியமேற்றம் என்றும் *reduction* மூச்சியமிறக்கம் என்றும் ஆகின்றன. மற்ற தனிமங்களின் பெயர்களை தமிழியலாக்கினேன். தனிமப்பெயர்களின் முழுப்பட்டியலை அட்டவணை 4 தருகிறது.

Just as we write the names of the powers of thousands and units of measurements in Tamil and their symbols in Roman or Greek notation, we should write the names of chemical elements in Tamil and their symbols in Roman notation. படம் 1 *shows how this method is used in the Chinese language. I have retained established Tamil names such as* தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம், துத்தநாகம், *and* கந்தகம். *I translated names such as hodrogen, helium, oxygen, and*

nitrogen whose etymology is clear. Since hydrogen arises from water it became நீரியம். Since helium arises from the sun, it became கதிரவம். Since biology is உயிரியல், using உயிரியம் for oxygen would cause the prefixes bio- and oxy- to be mapped to உயிரிய-. Hence I named the element மூச்சியம். Then oxidation becomes மூச்சியமேற்றம் and reduction becomes மூச்சியமிறக்கம். I Tamilized the names of other elements. The full list of element names is given in அட்டவணை 4.

http://thiru-padaippugal.blogspot.com/2012/09/chemical-elements.html

அணு எண்	***Name***	பெயர்	குறியீடு
1	*Hydrogen*	நீரியம்	*H*
2	*Helium*	கதிரவம்	*He*
3	*Lithium*	இலித்தியம்	*Li*
4	*Beryllium*	பெரிலியம்	*Be*
5	*Boron*	போரான்	*B*
6	*Carbon*	கரிமம்	*C*
7	*Nitrogen*	உப்பியம்	*N*
8	*Oxygen*	மூச்சியம்	*O*
9	*Fluorine*	புளோரின்	*F*
10	*Neon*	நியான்	*Ne*
11	*Sodium*	சோடியம்	*Na*
12	*Magnesium*	மகனீசியம்	*Mg*
13	*Aluminum*	அலுமினம்	*Al*
14	*Silicon*	சிலிக்கான்	*Si*
15	*Phosphorus*	பாசுவரம்	*P*
16	*Sulfur*	கந்தகம்	*S*
17	*Chlorine*	குளோரின்	*Cl*
18	*Argon*	ஆர்கான்	*Ar*
19	*Potassium*	பொட்டாசியம்	*K*
20	*Calcium*	கால்சியம்	*Ca*
21	*Scandium*	காந்தியம்	*Sc*
22	*Titanium*	தைத்தேனியம்	*Tl*
23	*Vanadium*	வனேடியம்	*V*
24	*Chromium*	குரோமியம்	*Cr*
25	*Manganese*	மாங்கனீசு	*Mn*
26	*Iron*	இரும்பு	*Fe*
27	*Cobalt*	கோபாற்று	*Co*
28	*Nickel*	நிக்கல்	*Ni*

29	Copper	தாமிரம்	Cu
30	Zinc	துத்தநாகம்	Zn
31	Gallium	காலியம்	Ga
32	Germanium	செருமேனியம்	Ge
33	Arsenic	ஆர்சனிக்கு	As
34	Selenium	செலினியம்	Se
35	Bromine	புரோமின்	Br
36	Krypton	கிரிட்டான்	Kr
37	Rubidium	உருபிடியம்	Rb
38	Strontium	துரந்தியம்	Sr
39	Ytttrium	இத்திரியம்	Y
40	Zirconium	சிருக்கோனியம்	Zr
41	Niobium	நியோபியம்	Nb
42	Molybdenum	மாலித்தினம்	Mo
43	Technetium	தெக்கினியம்	Tc
44	Ruthenium	உருத்தினியம்	Ru
45	Rhodium	உரோடியம்	Rh
46	Palladium	பல்லேடியம்	Pd
47	Silver	வெள்ளி	Ag
48	Cadmium	கடமியம்	Cd
49	Indium	இண்டியம்	In
50	Tin	தகரம்	Sn
51	Antimony	ஆந்திமனி	Sb
52	Tellurium	தெலுரியம்	Te
53	Iodine	அயோடின்	I
54	Xenon	சீனான்	Xe
55	Cesium	சீசியம்	Cs
56	Barium	பேரியம்	Ba
57	Lanthanum	இலந்தனம்	La
58	Cerium	சீரியம்	Ce
59	Praseodymium	பிரசோடிமியம்	Pr
60	Neodymium	நியோடிமியம்	Nd
61	Promethium	புரோமிதியம்	Pm
62	Samarium	சமேரியம்	Sm
63	Europium	ஐரோப்பியம்	Eu
64	Gadolinium	கடோலினியம்	Gd
65	Terbium	தேபியம்	Tb

66	Dysprosium	திப்புரோசியம்	Dy
67	Holmium	ஓலுமியம்	Ho
68	Erbium	எர்பியம்	Er
69	Thulium	துலியம்	Tm
70	Ytterbium	இத்தேபியம்	Yb
71	Lutetium	நுடீசியம்	Lu
72	Hafnium	ஆபினியம்	Hf
73	Tantalum	தாந்தலம்	Ta
74	Tungsten	துங்கதன்	W
75	Rhenium	இரீனியம்	Re
76	Osmium	ஆசுமியம்	Os
77	Iridium	இரிடியம்	Ir
78	Platinum	பிளாட்டினம்	Pt
79	Gold	தங்கம்	Au
80	Mercury	பாதரசம்	Hg
81	Thallium	தாலியம்	Tl
82	Lead	ஈயம்	Pb
83	Bismuth	பிசுமத்து	Bi
84	Polonium	பொலோனியம்	Po
85	Astatine	அசிதாதீன்	At
86	Radon	இரேடான்	Rn
87	Francium	பிரான்சியம்	Fr
88	Radium	இரேடியம்	Ra
89	Actinium	அட்டினியம்	Ac
90	Thorium	தோரியம்	Th
91	Protactinium	புரோட்டட்டினியம்	Pa
92	Uranium	யுரேனியம்	U
93	Neptunium	நெட்டுனியம்	Np
94	Plutonium	புளுட்டோனியம்	Pu
95	Americium	அமெரீசியம்	Am
96	Curium	சீரியம்	Cm
97	Berkelium	பெருக்கிலியம்	Kb
98	Californium	கலிபோர்னியம்	Cf
99	Einsteinium	ஐனத்தியம்	Es
100	Fermium	பெர்மியம்	Fm
101	Mendelevium	மெஞ்சலீவியம்	Md
102	Nobelium	நோபெலியம்	No

103	*Lawrencium*	இலாரன்சியம்	*Lr*
104	*Rutherfordium*	இரதர்பர்டியம்	*Rf*
105	*Dubnium*	அடபினியம்	*Db*
106	*Seaborgium*	சிபர்கியம்	*Sg*
107	*Bohrium*	போரியம்	*Bh*
108	*Hassium*	காசியம்	*Hs*
109	*Meitnerium*	மெயினரியம்	*Mt*
110	*Darmstadtium*	ஆருமசுடியம்	*Ds*
111	*Roentgenium*	உரோகனியம்	*Rg*
112	*Copernicium*	கோப்பர்நிசியம்	*Cn*
113	*Ununtrium*	ஒன்றொன்றுமூன்றியம்	*Uut*
114	*Flerovium*	பிளிரோவியம்	*Fl*
115	*Ununpentium*	ஒன்றொன்றைந்தியம்	*Uup*
116	*Livermorium*	உலிவமோரியம்	*Lv*
117	*Ununseptium*	ஒன்றொன்றேழியம்	*Uus*
118	*Ununoctium*	ஒன்றொன்றெட்டியம்	*Uuo*

அட்டவணை 4 வேதித் தனிமங்களின் பெயர்களும் அடையாளங்களும்

கரிமவேதிச்சேர்மங்களை பெயரிடுவதற்கான விதிமுறைகளை பன்னாட்டு தூய மற்றும் பயன்பாட்டு வேதியியலார் (பதூபவே) ஒன்றியம் செந்தரமாக்கியிருக்கிறது. ஒவ்வொரு சேர்மத்துக்கும் ஒரு ஒருத்துவமான தமிழ்ப்பெயர் வரும்படி இவ்விதிகளை நாம் தமிழில் மொழிபெயர்த்துக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, தெவிட்டிய நீரியக்கரிமங்களின் பெயர்கள் கரிமவணுக்களின் எண்ணிக்கை தோன்றும் ஒரு முன்னொட்டில் தொடங்கி –ஏன் என்ற பின்னொட்டில் முடியவேண்டும் என்று பதூபவே விதிக்கிறது. ஆனால் முன்னொட்டுகளையும் பின்னொட்டுகளையும் வேண்டிய மொழியில் எழுதிக்கொள்ளும் சுதந்திரத்தை அவ்விதிகள் மறுக்கவில்லை. கரிமச்சேர்மங்களின் பெயர்களை தமிழில் அமைமுறையில் பெயரிடுவதற்கான சொற்பகுதிகளை அட்டவணை 5 காட்டுகிறது.

International Union of Pure and Applied Chemistry (IUPAC) has standardized the rules for the nomenclature of organic chemical compounds. We can translate these rules into Tamil so that each compound has a unique name in Tamil. For example, IUPAC rules that the names of saturated hydrocarbons should start with a prefix showing the number of carbon atoms and end with the suffix –ane. But it does not deny the freedom of writing those prefixes and suffixes in the required language. அட்டவணை 5 *shows parts of words to be used for naming organic compounds systematically.*

தமிழ் எண்கள் அனைத்தும் உகரத்திலே (பெரும்பான்மை குற்றியலுகரத்திலே) முடிகின்றன. இந்த உகரத்தை நீக்கி அகரம் சேர்ப்பது கரிம எண்களின் எண்ணிக்கைக்கான முன்னொட்டை

பெறுவதன் பொது விதி எனவும் அந்த முன்னொட்டுகளுடன் -ஐல் சேர்ப்பது ஆல்க்கைல் தொகுதிகளின் பெயர்களை பெறுவதன் பொதுவிதி எனவும் நான் முன்மொழிகிறேன். இதன்படி பத்து கரிமவணுக்களுடைய சங்கிலியை குறிக்கும் முன்னொட்டு பத்த- எனவும், அவ்வாறான தெவிட்டிய சங்கிலி பத்தவேன் எனவும், அவ்வாறான ஆல்க்கைல் தொகுதி பத்தவைல் எனவும் ஆகின்றன. இதைப்போலவே 23 கரிம எண்கள் உள்ள கட்டமைப்புக்கூறுகளுக்கு முறையே இருபத்துமூன்ற-, இருபத்துமூன்றவேன், இருபத்துமூன்றவைல் என்று பெறுகிறோம். முதல் மூன்று தெவிட்டிய நீரியக்கரிமங்களை முறையே மீத்தேன், ஈத்தேன், புரோப்பேன் எனவும், நிகரான ஆல்க்கைல் தொகுதிகளை மீத்தைல், ஈத்தைல், புரோப்பைல் எனவும், ஆல்க்கீன்களை மீத்தீன், ஈத்தீன், புரோப்பீன் எனவும், ஆல்க்கைன்களை மீத்தைன், ஈத்தைன், புரோப்பைன் எனவும் எழுதுவதை சிறப்புவிதியாகக் கொள்கிறோம்.

All numbers in Tamil end in உ (mostly குற்றியலுகரம்). I propose that removing this உகரம் and adding an அகரம் is the general rule to get the prefix showing the number of carbon atoms and that adding an –ஐல் to that prefix is the general tule to get the names of alkyl groups. According to this, the prefix for a chain with ten carbon atoms becomes பத்த-, such saturated chain becomes பத்தவேன், and such alkyl group becomes பத்தவைல். Similarly we get இருபத்துமூன்ற-, இருபத்துமூன்றவேன், and இருபத்துமூன்றவைல் respectively for the structural elements with 23 carbon atoms. We take as a special rule to write the first three hydrocarbons as மீத்தேன், ஈத்தேன், புரோப்பேன், the corrsponding alkyl groups as மீத்தைல், ஈத்தைல், புரோப்பைல் respectively, the alkenes as மீத்தீன், ஈத்தீன், புரோப்பீன், and the alkynes as மீத்தைன், ஈத்தைன், புரோப்பைன்.

கட்டமைப்புக்கூறு	***English affix***	**தமிழ் ஒட்டுகள்**
கரிமவணு எண்ணிக்கை	*Buta-*	நான்க-
	Penta-	ஐந்த-
	Hexa-	ஆற-
	Hepta-	ஏழ-
தெவிட்டிய நீரியக்கரிமம்	*-ane*	-ஏன்
இரட்டைப்பிணைப்பு	*-ene*	-ஈன்
மும்மப்பிணைப்பு	*-yne*	-ஐன்
ஆல்க்கைல்	*-yl*	-ஐல்
ஆல்க்கீனைல்	*-enyl*	-ஈனைல்
ஆல்க்கைனைல்	*-ynyl*	-ஐனைல்
ஆல்ககால்	*-ol*	-ஆல்
	hydroxy-	நீர்மூச்சிய-
குளோரைடு	*chloro-*	குளோரோ-
புளோரைடு	*fluoro-*	புளோரோ-
புரோமைடு	*bromo-*	புரோமோ-
ஐயோடைடு	*iodo-*	ஐயோடோ-

ஆல்டிகைடு	*-al*	*-அல்*
	-carbaldehyde	*-கரிமால்டிகைடு*
	-benzaldehyde	*-பென்சால்டிகைடு*
கீற்றோன்	*-one*	*-ஓன்*
	oxo-	*மூச்சியோ-*
கரிமமிலம்	*-oic acid*	*-ஆயிக அமிலம்*
	carboxyl-	*கரிமமில-*
இரட்டைக்கரிமமிலம்	*-dioic acid*	*-ஈராயிக அமிலம்*
	dicarboxyl-	*இருகரிமமில-*
ஈத்தர்	*alkoxy-*	*ஆல்க்கமூச்சிய-*
கரிமமிலேட்டு	*-oate*	*-ஓயேட்டு*
அமீன்	*-amine*	*-அமீன்*
	amino-	*அமினோ-*
அமைடு	*-amide*	*-அமைடு*
	carbamoyl-	*கரிமமாயில்-*
	amido-	*அமிடோ-*
சயனலி	*-nitrile*	*-சயனலி*
	cyano-	*சயனோ-*
இரட்டைச்சயனலி	*-dinitrile*	*-இருசயனலி*
குறையமில உப்பாக்கைடு	*-oyl*	*-ஆயில்*
சுழல் நீரியக்கரிமம்	*cyclo-*	*சுழல்-*
அரோமாட்டியம்	*phenyl-*	*பினைல்-*
பக்க மாற்றியம்	*Z-*	*ஓ- (ஓரே)*
	E-	*ம- (மறு)*
வெளியிட மாற்றியம்	*R-*	*வ- (வலது)*
	S-	*இ- (இடது)*

அட்டவணை 5 கரிமத்தனிமங்களின் பெயரிடுமுறைக்கான சொற்பகுதிகள்

இம்முறையை பின்பற்றுவதன்மூலம் தமிழ் ஆங்கிலப்பெயர்களிடையேயும், பெயர்களுக்கும் கட்டமைப்புகளுக்குமிடையேயும் ஒன்றுக்கொன்றான தொடர்பை பெறுகிறோம். இம்முறையில் எழுதிய பெயர்கள் சிலவற்றை அட்டவணை 6 காட்டுகிறது. அட்டவணையிலுள்ள மூன்றாம் எடுத்துக்காட்டில், பதிலிகள் ஆங்கிலப்பெயரில் ஆங்கில அகரவரிசையிலும், தமிழ்ப்பெயரில் தமிழ் அகரவரிசையிலும் பட்டியலிடப்படுவதை நோக்குக. இந்த தமிழ்ப்பெயரை வாசிக்கும்போது, இரண்டு ம ஐந்து ஈத்தைல் ஆறு புரோமோமீத்தைல் எட்ட இரண்டு ஈன் என்றோ, இரண்டு ம ஐந்தீத்தைல் ஆறு புரோமோமீத்தைல் எட்டவிரண்டீன் என்பது போன்று சில உறுப்புகளை புணர்ச்சி விதிகளால்

சேர்த்தோ சொல்லலாம். ஆனால் எழுதும்போது முழுப்பெயரையும் இடையில் வெற்றிடம் இல்லாமல் ஒரு ஒற்றைச்சொல்லாக எழுதவேண்டுமென்பது பதூபவே விதி.

வரிசை எண்	கட்டமைப்பு	*English name*	தமிழ்ப் பெயர்
1		*octane*	எட்டவேன்
2		*ethyne*	ஈத்தைன்
3		*(2E)-6-(bromomethyl)-5-ethyloct-2-ene*	*(2ம)-5-ஈத்தைல்-6-(புரோமோமீத்தைல்)எட்ட-2-ஈன்*
4		*(3R)-3-methylhepta-1,5-diyne*	*(3வ)-3-மீத்தைல்ஏழ-1,5-ஈரைன்*
5		*cyclopentene*	சுழலைந்தவீன்

அட்டவணை 6 பதூபவே விதிகளின்படி கரிமச்சேர்மங்களின் பெயர்கள்

By following this method, we get a one-to-one correspondence between the Tamil and English names and between names and structures. அட்டவணை 6 *shows some names written in this method. In the third example of the table, please note that the substituents are ordered in the English alphabetical order for the English name and in the Tamil alphabetical order for the Tamil name. While reading the Tamil name we can say either as* இரண்டு ம ஐந்து ஈத்தைல் ஆறு புரோமோமீத்தைல் எட்ட இரண்டு ஈன் *or with coupling some parts such as* இரண்டு ம ஐந்தீத்தைல் ஆறுபுரோமோமீத்தைல் எட்டவிரண்டீன். *However, it is an IUPAC rule that the complete name should be written as a single word without intervening space.*

உயிரியலில் வாழ்வனவற்றை தாவரரசு, விலங்கரசு போன்ற பல பேரரசுகளாக பிரிப்பதில் தொடங்கி ஒவ்வோரினத்தின் வகையையும் வடிவத்தையும் குறிப்பது வரையான ஒரு படிவரிசைப் பாகுபாட்டுமுறை உள்ளது. இந்த படிவரிசையின் ஒவ்வொரு தரநிலையிலுமுள்ள பாகுபடுத்திக்கும் ஒவ்வோரினத்துக்கும் பெயரிடுவதற்கான ஒரு அமைமுறையான வழியும் உள்ளது. அதே படிவரிசை நிலைக்குமாறும் ஆங்கிலப்பெயருக்கும் தமிழ்ப்பெயருக்கும் ஒரு ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்குமாறும் ஒரு அமைமுறையை நாம் தமிழிலும் பின்பற்றவேண்டும். அவ்வாறான தொடர்பை ஏற்படுத்துவதற்காக பாகுபாட்டியலில் பயன்படும் சில சொற்களுக்கும் ஒட்டுகளுக்கும் நிகரான தமிழ்ப்பகுதிகளை அட்டவணை 7 காட்டுகிறது. ஒவ்வொரு தரநிலையிலும் ஒரு தொகுதியின் பெயர் அஃறிணைப்பன்மைச்சொல்லாக இருக்கவேண்டும் என்ற விதியை பின்பற்றுகிறோம்.

In biology, there is a hierarchical method of classifying life starting from separating it into kingdoms such as plantae and animalia down to specifying variety and form of each species. There is also a systematic way of naming the taxon at each rank of this hierarchy and each species. We must follow a systematics in Tamil such that the same hierarchy is preserved and there is a one-to-one rlation between the English name and Tamil name. In order to make such a relation அட்டவணை 7 *shows the Tamil parts corresponding to some words and affixes used in taxonomy. We follow the rule that the name of a group should be diminutive plural at every rank.*

English	***தமிழ்***	***English***	***தமிழ்***
taxon	பாகுபடுத்தி	*-mycota*	-பூஞ்சன
domain	களம்	*-phytina*	-தாவரின
subkingdom	உட்பேரரசு	*-phycotina*	-ஆல்கின
kingdom	பேரரசு	*-mycotina*	-பூஞ்சின
phylum	பிரிவு (வில)	*-opsida*	-தாவரவை
division	பிரிவு (தாவர)	*-phyceae*	-ஆல்கவை
class	வகுப்பு	*-mycetes*	-பூஞ்சவை
order	முறைமை	*-idea*	-தாவரிவை
infraorder	கீழ்முறைமை	*-phycidae*	-ஆல்கிவை
superfamily	மிகைக்குடும்பம்	*-mycetidae*	-பூஞ்சிவை
family	குடும்பம்	*-ales*	-ஐகள்
subfamily	உட்குடும்பம்	*-ineae*	-ஐகிள்
infrafamily	கீழ்க்குடும்பம்	*-aceae*	-அனையன

tribe	கிளையம்	*-oideae*	-அனையின
subtribe	உட்கிளையம்	*-eae*	-அங்கள்
genus	துறை	*-inae*	-இங்கள்
subgenus	உட்டுறை	*-phyte*	-தாவரம்
section	பகுதி	*-coccus*	-மணியம்
series	தொடர்	*-cocci*	-மணியன
species	இனம்	*-bacillus*	-குச்சியம்
subspecies	உள்ளினம்	*-bacilli*	-குச்சியன
infraspecies	கீழினம்	*animalia*	விலங்கரசு
variety	வகை	*plantae*	தாவரரசு
subvariety	உள்வகை	*chromista*	குரோமரசு
form	வடிவம்	*fungi*	பூஞ்சரசு
subform	உள்வடிவம்	*bacteria*	பாட்டரசு
-phyta	-தாவரன	*protozoa*	புரோட்டரசு
-phycota	-ஆல்கன	*archaea*	ஆர்க்கரசு

அட்டவணை 7 பாகுபாட்டியலில் வழங்கும் சில சொற்பகுதிகள்

எதிர்கால அலுவல்களும் சுருக்கவுரையும்

Future work and summary

முன்பு சொன்னபடி பத்து முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையான பாடப்புத்தகங்களிலிருந்து கலைச்சொற்களை திரட்டி ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குமாக இரண்டு பட்டியல்களாக கீழே தருகிறேன். இதை செய்துமுடிப்பதற்கு சுமார் இரண்டு ஆளாண்டுகள் தேவையானது என்று மதிப்பிடுகிறேன்; ஆயினும் நான் பகுதி நேரமே இதில் ஈடுபட்டதால் மூன்றாண்டுக்காலம் ஆனது. இந்த பட்டியல்கள் சுமார் பதிநான்காயிரம் பதிவுகள் அடங்கியவை. உயர் அறிவியலில் மேலும் பதினாயிரக்கணக்கான சொற்கள் இருக்கலாம். எதிர்காலத்தில் அவற்றையும் தொகுத்து தமிழாக்கும் வேலை இருக்கிறது. கரிமச்சேர்மங்களை பெயரிடும் முறைக்கு பதூபவே ஒன்றியம் இயற்றிய விதிகளுக்கான மேலும் விரிவான தமிழாக்கத்தை செய்யும் வேலையும் இருக்கிறது. மேலும் கனிமச்சேர்மங்கள், புரதங்கள், ஊக்கிப்புரதங்கள் போன்றவற்றின் திட்டமாக்கிய பெயரிடுமுறைப்படி தமிழ்ப்பெயர்கள் அல்லது தமிழியலாக்கிய பெயர்களை உண்டாக்கும் வேலையும் இருக்கிறது. உலகிலுள்ள சுமார் *1.7* இருமடியாயிரம் இனங்களின் உயிரியல் பெயர்களையும் அவற்றின் படிவரிசைத்தரநிலையின் பெயர்களையும் தமிழெழுதும் வேலையும் இருக்கிறது. இந்த மாபெரும் உயிரியல் பணியை செய்ய வெகுகாலம் ஆகலாம். பாகுபாட்டுப்படிவரிசையை மேலிருந்து கீழ் அதாவது வேரிலிருந்து இலைகளை நோக்கி நடக்கையிடுவதன் மூலம் இடைநிலை முடிவுகளை தன்னியைபான நிலைகளில் வைத்திருக்கலாம். இந்த நூல் ஒரு **முதற்படி**தான்.

> *As mentioned before, I collected technical words from tenth through twelfth standards textbooks and made two lists one from English to Tamil and another from Tamil to English. I estimate that the completion of this work took about two person years, although I took about three years working part-time. The lists contain about fourteen thousand entries. There may be tens of thousands of more words in advanced science. The job of translating them remains for the future. The IUPAC rules for organic nomenclature needs to be translated in more detail. Further, the Tamil or tamilized names for inorganic compuonds, proteins, and enzymes need to be created in accordance with the standardized nomenclature. The task remains to write in Tamil the names of about 1.7 million species on earth and the names of the ranks in their hierarchical arrangement. It may take a long time to complete this great biology task. By traversing the taxonomic hierarchy from top to bottom, i.e. from root to the leaves, the intermediate results can be kept in selfconsistent states. This book is only a **first step**.*

இந்த நூலின் நோக்கம் அறிவியல் இலக்கியங்களை செந்தமிழில் எழுதுவது சாத்தியம் என்று காட்டுவதும் அதற்கு தேவையான சொல்லாக்கப்பணியை தொடங்கிவைப்பதுமாகும். தமிழ்நாட்டின் பாடநூல்கள் எனக்கு கிடைத்ததால் அவை இப்பணிக்குத்தேவையான ஒரு வளமாக பயன்பட்டன. தமிழ்பேசும் எந்த நாட்டிலும் நிலவும் தற்காலக்கல்விமுறையை திறனாய்வதோ, தமிழில் அறிவியல் கற்பிக்கவேண்டும் என்று வலியுறுத்துவதோ இந்நூலின் நோக்கமன்று. தமிழ்வழிக்கல்வியின் அரசியல், சமூக, பொருளாதாரப்பின்விளைவுகளை அலசுவதும் இந்நூலின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்டது. இந்த நூலின் உள்ளடக்கம் ஒரு

முன்வைப்பே. இதை ஏற்பதும் ஏற்காததும் தமிழ்பேசும் கற்றறிஞர்களின் விருப்பம். செந்தமிழில் அறிவியல் எழுதாததற்கு அவ்வாறு எழுதவியலாது என்பது ஒரு காரணமாக இருக்கவேண்டாம்.

The purpose of this book is to show that it is possible to write scientific literature in Tamil and to begin the task of creating the necessary vocabulary. Since the textbooks of Tamilnadu were available to me they were useful as the resource I need. It is not the purpose of this book to criticise the educational method prevailing in any Tamil speaking nation; nor is it to emphasize science education in Tamil. Analyzing the political, social, and economical consequences of Tamil medium education is also beyond the scope of this book. The contents of this book is only a ***proposal****. It is up to the Tamil speaking scholars to accept it or not. The reason for not writing science in Tamil need not be that it cannot be done.*

சுருக்கமாக, அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஆங்கிலத்தில் வழங்கும் கலைச்சொற்கள் ஒவ்வொன்றுக்கும் இணையாக ஒரு ***துல்லியமான, திட்டவட்டமான, ஒருத்துவமான*** *தமிழ்க்கலைச்சொல்லைத்தரும்* ***முழுமையான, ஒன்றுக்கொன்றான, தன்னியைபான*** *பட்டியலை* ***முன்வைப்பதன் முதற்படி*** *இந்நூல்.*

அதுதான் நான் செய்ய விரும்பியது. ஆனால் மனித முயற்சிகளில் பிழைகள் நேர்வது இயல்பு. அப்பிழைகளை சுட்டிக்காட்டுவதற்கும், வேறெந்தப்பின்னூட்டங்களை தருவதற்கும் jkottalam@gmail.com என்ற முகவரிக்கு எழுதுங்கள். நன்றி.

In summary, this work is the ***first step*** *in* ***proposing*** *a* ***complete****,* ***one-to-one****, and* ***self-consistent*** *list containing a* ***precise****,* ***definite****, and* ***unique*** *Tamil technical word for a given English technical word in science and technology.*

That was my intention. But being human I must have made mistakes. Please write to jkottalam@gmail.com to point out the mistakes and to provide any other feedback. Thank you.

பார்வையங்கள்

References

1. கணிப்பொறிக் கலைச்சொல் அகராதி, *1998;* வளர்தமிழ் மன்றம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.
2. *www.innerbody.com*
3. http://thiru-padaippugal.blogspot.com/2012/09/blog-post_10.html biological names

The following abbreviations are used in the word lists.

Abbreviation	***Meaning***
n	*noun*
v	*verb*
vt	*transitive verb*
vi	*intransitive verb*
adj	*adjective*
aka	*also known as*
brit	*Brittish English*
colloq	*colloquial*
opp	*as opposed to*
பெ	பெயர்ச்சொல்
வி	வினைச்சொல்
பெய	பெயரடைச்சொல்

அட்டவணை 8 சொற்பட்டியல்களில் பயன்படும் குறுங்குறிகள்

ஆங்கிலத்திலிருந்து தமிழ்

English to Tamil

A

a posteriori	பிற்கோள்
a priori	முற்கோள்
ab initio	முதற்தொடக்க
ABA problem	கசக சிக்கல்
abacus	மணிச்சட்டம்
abbreviation	குறுங்குறி
abdomen	அடிவயிறு
abdominal cavity	அடிவயிற்றுக் குழி
abdominal hernia	வயிற்றுக் குடற்பிதுக்கம்
aberration	பிறழ்ச்சி
ability	இயன்மை
abiogenesis	உயிரின்மைக் கோட்பாடு
abiotic agents	உயிரற்ற முகவர்கள்
abiotic factors	உயிரற்ற காரணிகள்
abnormal	இயல்பற்ற
abnormality	இயல்பின்மை
abort	செயன்முறி
abscess	சீழ்க்கட்டி
abscisic acid	உதிர்ம அமிலம்
abscissa	கிடையச்சு
abscission	உதிர்தல்
absolescence	வழக்கொழிதல்
absolute	ஒப்பிலா
absolute error	ஒப்பிலாப் பிழை
absolute function	மட்டுச் சார்பு
absolute liquid assets	துல்லிய நீர்மை சொத்துகள்
absolute liquid ratio	துல்லிய நீர்மை விகிதம்
absolute path	ஒப்பிலாப் பாதை[1]
absolute poverty	ஒப்பிலா வறுமை
absolute temperature	ஒப்பிலா வெப்பநிலை
absolute value (opp relative value)	ஒப்பிலா மதிப்பு
absolute value (opp signed value)	மட்டு மதிப்பு
absolute zero	ஒப்பிலாச் சுழி
absorbate	உட்கவர்பொருள்
absorbent	உட்கவர்வி
absorption	உட்கவர்தல்[2]
absorptive power	உட்கவர்திறன்
abstain	விலகியிரு
abstinence	விலகியிருத்தல்
abstract	உருவிலா[3]
abundance	மலினம்
abutment	தொடுமுட்டல்
AC generator	மாறியற்றி[4]
AC motor	திசைமாறு உந்துவி
academic	அறிவக
academy	அறிவகம்
acanthocephalan	முட்தலைப்புழு
accelerated frames	முடுக்கிய சட்டங்கள்
accelerator	முடுக்கி[5]
accelleration	முடுக்கம்
accept	ஏல்
acceptable	ஏற்புடைய
acceptance	ஏற்றல்
acceptor	ஏற்பி
acceptor arm	ஏற்பிக் கிளை
acceptor circuit	ஏற்பி மின்சுற்று
access	அணுகு
access time	அணுகு நேரம்

[1] *relative path* – ஒப்புமைப் பாதை

[2] *adsorption* - மேற்கவர்தல்

[3] *concrete* - திண்ணுருவ

[4] திசைமாறு மின்னியற்றி என்பதன் சுருக்கம்

[5] *machine* - எந்திரம்

accessibility	அணுகுமை
accessible	அணுகக் கூடியது
accessory	துணைக்கருவி
accident	விபத்து
accident insurance	விபத்துக் காப்பீடு
accommodation (anatomy)	ஏற்பமைவு
account balance	கணக்கின் இருப்பு
account holder	கணக்குடையார்
account statement	கணக்குப் பட்டியல்
accountability	மறுமொழிப்பொறுப்பு
accountancy	கணக்குப் பதிவியல்
accountant	கணக்கியர்[1]
accounting	கணக்கியல்
accounts payable	செலுத்தற்குறிய கணக்குகள்
accounts receivable	பெறுதற்குறிய கணக்குகள்
accresent	கனிமூடிய
accretion	அடுக்குத்திரள்தல்
accrued interest	கூடியுள்ள வட்டி
accumulated reserve	திரண்ட இருப்புவைப்பு
accumulator	திரட்டி
accuracy	சரியளவு[2]
-aceae	-அனையன
acelylation	அசிற்றைலேற்றம்
acetabulum	பந்துக்கும்பா
acetaldehyde	அசிற்றால்டிகைடு
acetate	அசிற்றேட்டு
acetic acid	அசிற்றிக அமிலம்
acetoacitic acid	அசிற்றோவசிற்றிக அமிலம்
acetobacter	அசிற்றோபாட்டர்
acetobacteraceae	அசிற்றோபாட்டனையன
acetogenic	அசிற்றாக்க
acetone	அசிற்றோன்
acetyl	அசிற்றைல்
acetyl CoA	அசிற்றைல் துணையூக்கி
acetyl coenzyme	அசிற்றைல் துணையூக்கி
acetylene	அசிற்றலீன்
acetylide	அசிற்றலைடு
achene	நெற்று
achlamydeous	உறையற்ற
achromatium	நிறமற்றவம்
acid anhydride	அமில நீரிலி
acid Bessemer process	அமில பெசிமர் வழிமுறை
acid halide	குறையமில உப்பாக்கைடு
acid hydrolysis	அமில நீராற்பகுப்பு
acid resisting	அமிலத்தடைய
acidaminococcus	அமிலமினமணியம்
acidity	அமிலத்துவம்
acidosis	அமிலமிகைப்பு
acids and bases	அமிலங்களும் காரங்களும்
acini	அசினங்கள்
acinus	அசினம்
acknowledge	ஏலறிவி
acknowledgement	ஏலறிவிப்பு
acoelomata	உடற்குழியற்றவை
acoelomate	உடற்குழியற்ற
aconitase	அகானிடூக்கி
aconitate	அகானிடேட்டு
aconitic acid	அகானிடிக அமிலம்
acoustic plaster	ஒலியுறிஞ்சு சாந்து
acoustic tiles	ஒலியுறிஞ்சு ஓடு
acoustics	ஒலியியல்[3]
Acquired Immune Deficiency Syndrome (AIDS)	தகவமை நோயெதிர்ப்புப் பற்றாக்குறைக் குறித்தொகுப்பு (தநோபகு)
acquired immunity[4]	தகவமை நோயெதிர்ப்பு
acrania	மண்டையற்றவை
acridine	அக்கிரிடின்
acridine orange	அக்கிரிடின் ஆரஞ்சு

[1] *bookkeeper* - கணக்கர்

[2] *correctness* - சரியுடைமை

[3] *phonetics* - பேச்சொலியியல்

[4] *aka adaptive immunity*

acrocentric	உயரமைய
acrolein	அக்கிரோலீன்
acromegaly	மெகலவளர்ச்சி[1]
acromion process	தோள்ப்பட்டை நீட்சி
acronematic flagellum	சாட்டைக் கசையிழை
acronym	குறுஞ்சொல்
acropetal	உச்சிநோக்கிய
acrophobia	உயரவச்சம்
acropora	கொம்புப்பவளங்கள்
acrosome	முனையுறை
acrylonitrile	வைனில்சயனலி
actin	செயற்புரதம்
actinide	அட்டினவன்ன
actinium	அட்டினியம்
actinobacillus	கதிர்க்குச்சியம்
actinomadura	கதிர்மதுரம்
actinomorphic	வட்டச்சமச்சீர்
actinomyces	கதிர்ப்பூஞ்சைகள்
actinomycete	கதிர்ப்பூஞ்சை[2]
actinoplanes	கதிர்வெளியம்
actinopolyspora	பலவித்துக்கதிர்ப்பூஞ்சையம்
actinosynnema	கதிரிழையம்
actino-uranium	அட்டினோயுரேனியம்
action plan	செயல் திட்டம்
activate	செயலாக்கு
activated complex	செயலாக்கக் கூட்டுமம்
activation	செயலாக்கம்
activation energy	செயலாக்க ஆற்றல்
active (opp inactive)	செயலிலுள்ள
active (opp passive)	முனைவு
active absorption	முனைவு உட்கவர்கல்
active center	செயல்மையம்
active immunity	முனைவு நோயெதிர்ப்பு
active partner	செயற் பங்காளி
active region	முனைவுப் பகுதி
Active Server Pages (ASP)	முனைவச் சேவையர் பக்கங்கள் (முசேப)
active site	செயல் தலம்
active transport	முனைவுக் கடத்தல்
active window	செயற் சாளரம்
activism	செயல்முனைவு
activity	செயன்மம்
activity ratio	செயற்றிறன் விகிதம்
actual parameter	உண்மையான அளவுரு
acuminate	கூர்ம (தாவரவியல்)
acute (medicine)	குறுங்கடு
acute angle	குறுங்கோணம்
acute glomerulonephritis	குறுங்கடு முடிச்சச்சிறுநீரகவழற்சி
acute T cell leukemia	குறுங்கடு தைமநிணவணு குருதிப்புற்று
acyclic	சுழலற்ற
acyl	குறையமில
acyl halide	குறையமில உப்பாக்கைடு
acylase	அமைடூக்கி
acyltransferase	குறையமில மாற்றலூக்கி
ad hoc	தனிக்கோள்
Adam Smith	ஆடம் ஸ்மித்
adamantane	பிடிவாதவேன்
Adam's apple	கழுத்துச் சங்கு
adaptation	தகவமைவு
adaptive immunity[3]	தகவமை நோயெதிர்ப்பு
adaptor	தகவமைப்பி
adder	கூட்டி
addition	கூட்டல்
addition reaction	சேர்த்தல் வினை
additional	மேற்பட்ட
additional district judge	மேற்பட்ட மாவட்ட நடுவர்

[1] *hypertrophy* - மிகைவளர்ச்சி

[2] கிரேக்கம்: *aktis* – கதிர்; *mykes* – பூஞ்சை

[3] *aka acquired immunity*

additional secretary	மேற்பட்ட செயலர்
additive identity	கூட்டல் சமனி
address space	முகவரி வெளி
adenine	அடினீன்
adenohypophysis	முன்பிட்டூட்டரி
adenoid	சுரப்பனையம்
adenoma	சுரப்பிப்புற்று
adenosine	அடினசீன்
adenosine diphosphate (ADP)	அடினசீன் இருபாசுவேட்டு (அருபா)
adenosine monophosphate (AMP)	அடினசீன் ஒற்றைப்பாசுவேட்டு (அறைபா)
adenosine triphosphate (ATP)	அடினசீன் முப்பாசுவேட்டு (அமுபா)
adenosyl	அடினசில்
adenovirus	சுரப்பி வைரசு
adequacy	போதகுமை[1]
adequate	போதகுமான
adhesion	ஒட்டிணைவு
adhesion of stamens	மகரந்தத்தாள்களின் ஒட்டிணைவு
adhesive	ஒட்டிணை
adhesive forces	ஒட்டிணை விசைகள்
adiabatic	வெப்பமாறா
adipic acid	அடிப்பிக அமிலம்
adipose tissue	கொழுப்புத் திசு
adjacent angles	அண்டைக் கோணங்கள்
adjoint	அடுமம்
adjoint matrix	அடுமத் தளவணி
adjustment	சரிக்கட்டல்
adjuvant	துணையம்
administer (medicine)	உட்கொடு
administration	நிர்வாகம்
administrator	நிர்வாகி
admission	நுழைசேர்ப்பு
admixture	துணைச்சேர்ப்பு
adnate anther	முழுப்பிணைப்பு மகரந்தம்
ADP (adenosine diphosphate)	அருபா (அடினசீன் இருபாசுவேட்டு)
adrenal gland	அண்ணீரகச் சுரப்பி
adrenaline[2]	அண்ணீரலின்
adrenocorticotropic hormone	அண்ணீரப்புரணிய இயக்குநீர்
adsorbate	மேற்கவர்பொருள்
adsorbent	மேற்கவர்வி
adsorption	மேற்கவர்தல்[3]
adsorption chromatography	மேற்கவர்தல் நிறப்பிரிகை
adult	முதுவர்[4]
adulteration	கலப்படம்
advance (finance)	முன்பணம்
advanced	உயர்நிலை
advantage	நன்மை[5]
adventitious	வேற்றிட
adventitious branches	வேற்றிடக் கிளைகள்
adverse effect	தீய விளைவு
advertise	விளம்பரி
advertisement	விளம்பரம்
advice	அறிவுரை
aerenchyma	வளிக்கூழ்த்திசு
aerial	விசும்ப
aerial modification	விசும்ப மாற்றமைவு
aerial root	விசும்ப வேர்
aerial view	விசும்பக் காட்சி
aerobe	காற்றுவாழ்வன
aerobic	காற்றும
aerobic exercise	காற்றும உடற்பயிற்சி
aeromonas	காற்றலகியம்
aeronautics	வானூர்தியியல்
aerosol	காற்றுக்கரை

primary sexual character	முதன்மை பாலினப் பண்பு
primary structure	முதன்மைக் கட்டமைப்பு
primary transcript	முதன்மைப் படிநகல்
primase	முதன்மியூக்கி
primate	உயருயிரி
prime minister	தலைமையமைச்சர்[2]
prime numbers	பகா எண்கள்
primer	தொடக்கி
primeval	முதற்கால
priming	தொடக்கல்
primitive	எளிநிலை
primitive cell	எளிநிலைக் கூடு
primordial	தொடக்காதி
primordial soup	தொடக்காதி குழைமம்
principal qunatum number	முதன்மைத் துணுக்க எண்
principal value	முதன்மை மதிப்பு
principle	கொள்கை
printed circuit board (PCB)	அச்சிட்ட மின்சுற்றுப் பலகை (அமிப)
printer	அச்சிடுவி
prion	பிரையான்[3]
prior probability	முற்கோள் சாத்தியக்கூறு
priority	முன்னுரிமை
priority rules	முன்னுரிமை விதிகள்
prism	பட்டகம்
privacy	தனியம்
private carrier	தனிச் சுமப்பி
private dwelling	தனியார் வசிப்பிடம்
private sector	தனியார் வணிகத்துறை
privitization	தனியார்மயமாக்கல்
probability	சாத்தியக்கூறு[4]
probability density function	சாத்தியக்கூறு அடர்வுச் சார்பு
probability distribution	சாத்தியக்கூறு பரவல்
probability mass function	சாத்தியக்கூறு நிறைச் சார்பு
probability sampling	சாத்தியக்கூறு மாதிரிக்கூறெடுப்பு
probability theory	சாத்தியக்கூறியல்
probe	நுண்ணாய்வி
problem	சிக்கல்
proboscis	தும்பிக்கை
procambium	நீர்மக்குழலாக்கத்திசு
procedure	செய்முறை
process (analyze)	அலசல்
process (method)	வழிமுறை
process (phenomenon)	நிகழ்முறை
processing	செயலாக்கம் (கணினியியல்)
processor	அலசி
prochloraceae	முதற்பசுமியனையன
prochlorales	முதற்பசுமியைகள்
prochloron	முதற்பசுமியம்
prochlorothrix	முதற்பசுமுடியம்
prochronism	காலமுன்பிழை
proctodaeum	மலப்புழை

[1] *aka main memory*

[2] *chief minister* - முதலமைச்சர்

[3] *freon* - பிரீயான்

[4] நிகழ்தகவு - *frequency of occurrence*

proctoscopy	மலக்குடல்நோக்கல்
procure	முதற்கொள்
procurement	முதற்கொள்ளல்
procurement cost	முதற்கொள் ஆக்கவிலை
prodigal	சிக்கனமற்ற
producer	உற்பத்தியாளர்
product (chemistry)	விளைபொருள்
product (manufacturing)	உற்பத்திப் பொருள்
product (math)	பெருக்கற்பலன்
product catalog	விற்பொருட் பட்டியல்
product formulae	பெருக்கல் வாய்ப்பாடுகள்
product law	பெருக்கல் விதி
product of sums	கூட்டல்களின் பெருக்கல்[1]
product term	பெருக்கலுறுப்பு
productive insects	பலன்தரு பூச்சிகள்
proenzyme[2]	ஊக்கிப்புரதமாக்கி
profession	தொழில்
professional	தொழிலர்
profit	பெறுமம்[3] *(வணிகம்)*
profit and loss	பெறுமமும் இழப்பும்
profit and loss account	பெறும இழப்புக் கணக்கு
profit margin	பெறும அளவு
profitability	பெறுமத்தன்மை
profundus	ஆழமைத் தசை
progamete	இனவணுவாக்கி
progenitor	உண்டாக்கி
progesterone	இளந்தாங்கு முன்னியக்குநீர்
proglottis	புழுக்கூறு
program (administrative)	செய்திட்டம்
program (computer)	நிரல்[4] *(கணினியியல்)*
program evaluation and review technique (PERT)	செய்திட்ட மதிப்பறிதலும் மீள்பார்வையுமான செய்நுட்பம் *(செமமீசெ)*
programmable	நிரலாக்கத்தகு
programmable read only memory (PROM)	நிரலாக்கத்தகு படிக்கவே நினைவகம் *(நிபநி)*
programme	பணித்திட்டம்
programmed cell death	திட்டமிட்ட அணுச்சாவு
programmer	நிரலர்
programming (computer)	நிரலாக்கம்
programming language	நிரல்மொழி
progression	உறவுத்தொடர்
progressive	வளர்வீத
progressive tax	வளர்வீத வரி
progressive wave	தொடரலை
prohibition	தடையுறுத்தல்
prohibition writ	தடையுறுத்து நீதிப்பேராணை
project	திட்டப்பணி
project management	திட்டப்பணி மேலாண்மை
project Tiger	புலித் திட்டப்பணி
projectile	எய்பொருள்
projection	வீழ்ப்பு
projection formula	வீழ்ப்பு வாய்ப்பாடு
projection line	வீழ்ப்புக்கோடு
projector	வீழ்ப்பி
projector coil	வீழ்ப்பிச் சுருள்
prokaryote	அணுக்கருவிலி

[1] கூட்டல் கூட்டற்பலனைக் குறிப்பதால் ஆகுபெயர்

[2] *aka zymogen*

[3] *loss* - இழப்பு

[4] *column (table, matrix)* - நெடுக்கை

prolactin hormone[1]	பால்சுரப்புத் தூண்டுநீர்
proliferate	மிகப்பெருக்கு
proliferation	மிகப்பெருக்கம்
prolific	மிகப்பெருக்க
proline	புரோலின்
prolonged	நீடித்த[2]
PROM (programmable read only memory)	நிபநி (நிரலாக்கத்தகு படிக்கவே நினைவகம்)
promastigote	கசையிழையம்
promethium	புரோமிதியம்
promise	வாக்குறுதி[3]
promote	மேலுயரத்து
promoter	மேலுயர்த்தி
promotion	மேலுயர்த்தல்
promotional advertising	மேலுயர்த்த விளம்பரம்
prompt n	தூண்டி[4] (கணினியியல்)
prompt v	தூண்டு
pronephric	முதற்சிறுநீர
pronephros	முதற்சிறுநீரம்
proof	நிரூபணம்
proof by construction	கட்டுமான நிரூபணம்
proof by contradiction	முரண்பாட்டால் நிரூபணம்
proof by induction	தூண்டல்வழி நிரூபணம்
prop- (propane)	புரோப்பு- (புரோப்பேன்)
prop roots	தூண் வேர்கள்
propagate	பரவுநட
propagated error	பரவுநடந்த பிழை
propagation	பரவுநடை
propagation delay	பரவுநடை தாமதம்
propane	புரோப்பேன்
propellant	உமிழுந்தி
propeller	சுழலுந்தி
proper form	தகுவடிவு
proper subset	தகு உட்கணம்
proper vector	பான்மைத் திசையன்
properdin	அழிவாக்கி
property	பண்பு
prophage	உடன்பெருக்கி
prophase I	முதல் தொடக்கக் கட்டம்
prophase II	இரண்டாம் தொடக்கக் கட்டம்
prophylactic drug	நோய்த்தடுப்பு மருந்து
prophylaxis	நோய்த்தடுப்பியல்
propionibacterium	மூன்றாயிகபாட்டீரியம்
propionic acid	மூன்றாயிக அமிலம்
proportional tax	விகிதவீத வரி
proportionality constant	விகிதவீத மாறிலி
proportionality theorem	விகிதவீதத் தேற்றம்
proposal	முன்மொழிவு
propose	முன்மொழி
proposition	முன்மொழிதல்
propositus	மரபுவழியாதி
proprietary	உரிமைத்துவ
proprietor	உரிமையாளர்
proprietorship	உரிமைத்துவம்
propyl	புரோப்பைல்
propyne	புரோப்பைன்
prorennin	திரளூக்கியாக்கி
prosencephalon	முன்மூளை
prospect	வருநிலை
prospective	வரத்தக்க
prospectus	தகவலறிக்கை
prostaglandin	மென்தசைச்சுருக்கி
prostate	முன்னிலைம
prostate duct	முன்னிலைம நாளம்
prostate gland	முன்னிலைமச் சுரப்பி
prostatic urethra	முன்னிலைம சிறுநீர்ப்புறவழி
prosthecochloris	துணைச்சேரிளம்பச்சையம்

[1] *aka* luteotropic hormone, luteotropin, lactogenic hormone, mammotropin.

[2] *augmented* - மிகுத்த; *extended* - நீட்டிய

[3] *assurance* - வாக்கீடு

[4] *fishing rod* - தூண்டில்

prosthetic group	துணைச்சேர் தொகுதி
prostomium	மேலுதடு
protactinium	புரோட்டட்டினியம்
protamine	புரதமீன்
protandry	மகரந்தமுன்முதிர்வு
protease	புரதமூக்கி
protect	கா
protection	காப்பு
protein	புரதம்
protein coat	புரதவுறை
protein folding	புரத மடிப்பு
protein structure	புரதக் கட்டமைப்பு[1]
protein synthesis	புரதத் தொகுத்தாக்கம்
protein yolk	புரதக் கருவுணவு
proteinase	புரதவூக்கி
proteolysis	புரதப்பகுப்பு
proteolytic agent	புரதப்பகுப்பி
proteome	புரதவமைப்பு[2]
proteomics	புரதவமைப்பியல்
proteose	புரதோசு
Proterozoic eon	உயிர்முன் பேரூழி
protesting	எதிர்ப்புத்தெரிவித்தல்
prothrombin	உறைதமாக்கி
prothrombinase	உறைதமாக்கியூக்கி
protista	முதலணுவிகள்
protochordates	மூலநாண்முதுகிகள்
protocol	விதிமுறை
protocooperation	முன்னொத்துழைப்பு
protoderm	மேற்றோலாக்கத்திசு
protography	சூலகமுன்முதிர்வு
proton	புரோட்டான்
protonated	புரோட்டானேற்றிய
protonema	வித்துமுளை
protooncogene	புற்று மரபணு முன்னோடி
protoplasm	அணுநீர்மம்[3]
protoplast	அணுவடக்கம்[4]
prototheria[5]	ஒற்றைக்கழியன
prototype	மாதிரியம்
protoxylem	முன்கட்டைத்திசு
protozoa	ஒற்றையணுவிகள்
protracheata[6]	மென்காலிகள்
protractor	கோணளவி
protuberance	புடைப்பு
proventriculus	முன்னிரைப்பை
provitamin	வைட்டமினாகி
proximal	அண்மைப்பக்க
proximal convoluted tubule	அண்மைப்பக்கச் சிக்கற்குழலம்
proximal tubule	அண்மைப்பக்கக் குழலம்
proximate cause	அண்மைக் காரணி
proximity	அண்மை
proxy	பதிலாள்
prozone	பசையாப்பகுதி
prudence	முன்மதி
P-selectin	தட்டுவத் தேர்விணைவி
pseudo first order reaction	போலி முதல் முறைமை வினை
pseudo heptulose	ஏழுலோசுப் போலி[7]
pseudo random number	போலி நேர்ந்தவாறான எண்
pseudo-code	போலிக் குறி
pseudocoelom	போலியுடற்குழி
pseudocoelomata	போலியுடற்குழியுள்ளவை
pseudomonadaceae	போலியலகியனையன
pseudomonas	போலியலகியம்
pseudomurein	போலிப்புரதைச்சர்க்கரைடு
pseudonocardia	போலிநோக்கார்டியங்கள்
pseudophakic	போலிப்பக்கிய
pseudopod	போலிக்கால்

[1] *proteome* - புரதவமைப்பு
[2] *protein structure* - புரதக் கட்டமைப்பு
[3] *cytoplasm* - அணுக்குழைமம்
[4] *protoplasm* - அணுநீர்மம்
[5] *aka* monotremata
[6] *aka* onychophora and malacopoda
[7] *sedoheptulose* - சிடோவேழுலோசு

psi	சை (கிரேக்க எழுத்து)
psittacosis	கிளிக்காய்ச்சல்
PSLV (polar satellite launch vehicle)	துதுவ (துருவத் துணைக்கோளேவு வண்டி)
psoas major	தொடைமடக்குத் தசை
psychological isolation	மனவியத் தனிமையாதல்
psychology	மனவியல்[1]
psychrophile	குளிர்விரும்பி
pteraspis	ஓடுடையிறகி
pteridophyte	பெரணித்தாவரம்
pterosaur	பறவைலி
pterygoid	சிறகனைய தசை
pteryla	இறகுச்சுவடு
ptyalin	வாயூக்கிப்புரதம்
p-type metal oxide semiconductor (PMOS)	நேரிய உலோக மூச்சியைடு குறைகடத்தி (நேவுமூகு)
p-type semiconductor	நேர்ம வகைக் குறைக்கடத்தி
puberty	பூப்பு
pubis	பூப்பெலும்பு
public address system	பொதுக்கூவல் அமைப்பு
public sector	பொது வணிகத்துறை
publication	பதிப்பு
publicity	விளம்பம்
publish	பதிப்பி
publishing	பதிப்பித்தல்
puccinia	துருப்பூஞ்சை
pudendum	புடண்டம்
puerperal	பிற்பேறுகால
puerperium	பிற்பேறுகாலம்
puff balls	பொசு பந்துகள்
puffer fish	ஊதுமீன்
pug mill	குழைப்பு எந்திரம்
pulldown menu	கீழிழு பட்டியல்
pulley	கப்பி
pulmonary	நுரையீரல் பெய
pulmonary artery	நுரையீரல் தமனி
pulmonary circulation	நுரையீரல் சுற்றோட்டம்
pulp cavity	சக்கைக் குழி
pulsate	துடியசை
pulsation	துடியசைவு
pulsation theory	துடியசைவுக் கோட்பாடு
pulse	துடிப்பு
pulse beetle	பருப்பு வண்டு
pulse modulation	துடிப்பு இணக்கேற்றம்
pulvinus	மெதுப்பு
pumice	நுரைக்கல்
pump	ஏற்றி
punch	துளையிடு
punched dressing	துளையால் அழகுறுத்தல்
punctum	நீட்சிமுனை
pupa	கூட்டுப்புழு
pupil	கண்பாவை
purchase	கொள்முதல்
pure culture	தூய நுண்வளரி
purgative	வெளிப்போக்கி
purge	முழுநீக்கு
purification	தூய்மையாக்கல்
purine	பியூரின்[2]
purity of gametes	இனவணுக்களின் தூய்மை
purkinje fiber	பர்க்கைன் இழை
purlin	தூலகவிட்டம்
purple	செவ்வூதா
purple of cassium	கேசியச் செவ்வூதா
purposive sampling	நோக்கமுடைய மாதிரிக்கூறெடுப்பு
push	தள்ளு
push pull	தள்ளலும் இழுத்தலும்
pustule	சீழ்க்கொப்புளம்
put option	அளி விருப்புமை
putty	சுதைக்குழை
puzzle	சிக்கலாட்டம்

[1] உளவியல் - *espionage*

[2] *furan* - பியூரான்

PVC (polyvinylchloride)	பவைகு (பன்மவைனில்குளோரைடு)
pydidoxal	பிரிடாச்சல்
pygidium	வாலம்
pyloric region	குடற்பக்கப் பகுதி
pyloric sphincter	குடற்பக்க இடுக்கி
pyloric stomach	குடற்பக்க இரைப்பை
pyogenes	சீழாக்கிகள்
pyogenic	சீழாக்க
pyramid	நாற்கூம்பு
pyrenoid	கொட்டையனையம்
pyrethrum cresol	பைரித்திரம் கிரசால்
pyridine	பிரிடீன்
pyridoxal phosphate	பிரிடாச்ச பாசுவேட்டு
pyridoxine	பிரிடாச்சின்
pyrimethamine	பிரிமீத்தமீன்
pyrimidine	பிரிமிடீன்
pyrogallol	எரிகாலிகால்
pyrogen	காய்ச்சலாக்கி
pyrolysis	வெப்பச்சிதைவு
pyrophosphate	எரிபாசுவேட்டு
pyrophosphoric acid	எரிபாசுவரிக அமிலம்
pyrrole	பைரோல்
pyrulium	பிரிலியம்
pyruvate	பைருவேட்டு
pyruvic acid	பைரூவிக அமிலம்
Pythagoras	பிதாகரஸ்
Pythagoras' theorem	பிதாகரசின் தேற்றம்

Q

Q wave	சவ்வலை[1]
QED (quod erat demonstrandum)	இநிவே (இதுவே நிரூபிக்க வேண்டியது)
Q-factor	த-காரணி
quad universal LNB	குவாடு அனைத்துவக் குறையிரைச்சற்கட்டி
quadrant	காற்பகுதி
quadrate lobe (liver)	சதுரமடல் (கல்லீரல்)
quadratic	இருபடி
quadratic polynomial	இருபடிப் பல்லுறுப்புக்கோவை
quadratus muscle	நாற்கோணத் தசை
quadriceps	நாற்றலைத் தசை[2]
quadriceps femoris	கால்நீட்டுத் தசை
quadrifoliate	நாலங்கை
quadrilateral	நாற்கரம்
quadrillion (short scale)	ஐமடியாயிரம்
quadrupole	நான்முனை
quake	நிலநடுக்கம்
qualitative	பண்புசார்
qualitative analysis	பண்புசார் பகுப்பாய்வு
quality control	தரக் கட்டுப்பாடு
quality factor	தரக்காரணி
quantitative	அளவுசார்
quantitative analysis	அளவுசார் பகுப்பாய்வு
quantum	துணுக்கம்
quantum number	துணுக்க எண்
quark	குவார்க்கு
quartan	நான்குக்கொரு காய்ச்சல்
quartan malaria	நான்குக்கொரு மலேரியா
quartet	நான்மம்
quartile deviation	கால்மான விலக்கம்
quartz	படிகக்கல்
quasi fluid	குறைப் பாய்மம்
quaternary	நான்காமை
quaternary carbon	நான்காமைக் கரிமம்

[1] *P wave* - கவ்வலை; *Q wave* - சவ்வலை; *R wave* - தவ்வலை

[2] நான்கு + தலைத் தசை

Quaternary period	நான்காமைக் காலம்
quaternary structure	நான்காமைக் கட்டமைப்பு
quattro universal LNB	குவாட்டிரோ அனைத்துவக் குறையிரைச்சற்கட்டி
quattuordecillion (short scale)	பதினைமடியாயிரம்
queen closer	அரசி மூடுகல்
queen post	பக்கக்கால்
quench	தணி
quencher	தணிப்பி
query	வினவல்
query language	வினவல் மொழி
query wizard	வினவல் மாயாவி
querying	வினவுதல்
questionnaire	வினாப்பட்டியல்
queue	வரிசை[1]
quick launch	கடிதேவு
quicklime	சுட்ட சுண்ணாம்பு
QuickTime	குவிட்டைம்
quill	குழற்றண்டு
quill feather	கதிரிறகு
quincuncial	ஐங்குவிய இதழடுக்கம்
quincunx	ஐங்குவியம்
quindecillion (short scale)	பதினறுமடியாயிரம்
quinic acid	குயினிக அமிலம்
quinine	கொயினா
quinol	குயினால்
quinolinic acid	குயினாலினிக அமிலம்
quinone	குயினோன்
quinonoid	குயினோனனையம்
quinonoid theory	குயினோனனையக் கோட்பாடு
quintet	ஐம்மம்
quintillion (short scale)	அறுமடியாயிரம்
quo warranto	தகுதிவினவு
quod erat demonstrandum (QED)	இதுவே நிரூபிக்க வேண்டியது (இநிவே)
quoin	மூலைக்கோணம்
quorum	கோரெண்
quotation mark	மேற்கோள் குறி
quotient	ஈவு
quotient law	வகுத்தல் விதி
R-(stereoisomerism)	வ- (வெளியிட மாற்றியம்)

R

ρ *protein*	ρ புரதம்
R wave	தவ்வலை[2]
rabies	நாய்க்கடி நோய்[3]
race	நிறவினம்
racemase	ஒளித்திருப்பச்சமமூக்கி
raceme	தொடர்நுனியன்
racemic	சமத்திருப்ப
racemic mixture	சமத்திருப்பக் கலவை
racemization	சமத்திருப்பமாக்கல்
racemose inflorescence	தொடர்நுனி மஞ்சரி
racial equality	நிறவினச் சமத்துவம்
radar	வானலையுணரி
radial	ஆர
radial artery	ஆரவெலும்புத் தமனி
radial paper chromatography	வட்டத்தாள் நிறப்பிரிகை
radial shake	ஆர விரிசல்
radial vein	ஆரவெலும்புச் சிரை
radian	ஆரையன்
radiata	உருட்சீரன
radiator	வெப்பவீசி
radical	உறுப்பு (வேதியியல்)
radical	மூலக்குறி
radicle	முளைவேர்

[1] *sort* - முறைமையாக்கு

[2] *P wave* - கவ்வலை; *Q wave* - சவ்வலை; *R wave* - தவ்வலை

[3] நாய்க்கடியால் ஏற்பட்ட நோய்; மூன்றாம் உருபும் பயனும் உடன்தொக்க தொகை

radio	வானலை[1]
radio button	வட்டப் பொத்தான்
radio echo	வானலை எதிரொளிப்பு
radio receiver	வானலை பெறுவி
radio reception	வானலை பெறுதல்
radioactivity	கதிரியக்கம்
radiocarbon	கதிர்க்கரிமம்
radiocarbon dating	கதிர்க்கரிமக் காலங்காணல்
radiography	வானலைவரைவி
radiotherapy	கதிர்ச்சிகிச்சை
radium	இரேடியம்
radius	ஆரம்
radius bone	ஆரவெலும்பு
radix	அடியம்
radix point	அடியப் புள்ளி
radon	இரேடான்
raft	தெப்பம்
rafter	கைமரம்
rail	தண்டவாளம்
rail (construction)	கிடைப்பட்டை
railway	தண்டுவழி
railway reservation system	தண்டுவழி முன்பதிவு அமைப்பு
rainbow	வானவில்
Rainforest Action Network	மழைவனச் செயல் வலையம்
Rainforest Alliance	மழைவன நட்புமை
rainwater harvesting	மழைநீர்ச் சேகரிப்பு
Rajya Sabha	மாநிலவை
raking bond	பல்வரிப்பிணைப்பு
Raleigh	ராலி
RAM (random access memory)	நேநி (நேரணுகு நினைவகம்)
Raman effect	இராமனின் விளைவு
Ramsay	ராம்சி
Ramsay - Raleigh method	இராம்சியிராலியின் முறை
rancidity	சுவைகெடல்
random	நேர்ந்தவாறான[2]
random access	நேரணுகு[3]
random access memory (RAM)	நேரணுகு நினைவகம் (நேநி)
random error	நேர்ந்தவாறான பிழை
random event	நேர்ந்தவாறான நிகழ்வு
random number	நேர்ந்தவாறான எண்
random rubble masonry	நேர்ந்தவாறான சீரற்ற கற்கட்டு
random sampling	நேர்ந்தவாறான மாதிரிக்கூறெடுப்பு
random variable	நேர்வுமாறி
randomly	நேர்ந்தவாறு
randomness	நேர்ந்தவாறுமை
range	வீச்சு
range chart	வீச்சு வரிவரைவு
range of a function	சார்பின் வீச்சகம்
range of signed integer	குறியுடை முழுவெண்ணின் வீச்சு
ranging (surveying)	இடங்குறித்தல்
ranging rod	இடக்குறிப்புத் தண்டு
ranikhet	இராணிக்கட்டு
rank	தரநிலை
ranking	தரநிலையாக்கல்
ransom stone	இரான்சம் கல்
rape	கற்பழிப்பு
raphe	கட்டணை
rapport	ஒன்றுணர்வு
rare earth elements	புவியருமைத் தனிமங்கள்
rash (skin)	சொறி
raster	பல்வரி
rat flea	எலி தெள்ளை

[1] இது ஒலியலை அல்லாததால் வானொலி என்பது பொருந்தவில்லை; இவ்வலை வானொலிபரப்புக்காக பயன்பட்டதால் வானலை என்பது பொருத்தம்.

[2] சமவாய்ப்பு - *equally likely*

[3] *aka direct access*

rat snake	சாரைப்பாம்பு
ratchet	பற்சுழற்றி
rate constant	வினைவேக மாறிலி
rate determining step	வினைவேகத் தீர்மானப் படி
rate equation	வினைவேகச் சமன்பாடு
rate law	வினைவேக விதி
rate of reaction	வினைவேகம்
rated	தரமிட்ட
Rathke's pouch	இராத்திகேயின் பை
ratio	விகிதம்
ratio analysis	விகிதப் பகுப்பாய்வு
ration	பங்களவு
rational (reasonable)	காரணவழி
rational expression	விகிதமுறு கோவை
rational function	விகிதமுறு சார்பு
rational numbers	விகிதமுறு எண்கள்
rationing	பங்களவிடல்
rattle snake	கிலுப்பைப் பாம்பு
raw	பண்முன்
raw data	பண்முன் தரவு
raw material	பண்முன் பொருள்
ray of light	ஒளிக்கதிர்
ray optics	கதிர் ஒளியியல்
rayon	நார்ப்பட்டு
RBI (Reserve Bank of India)	இவிவ (இந்திய இருப்புவைப்பு வங்கி)
reabsorption	மீளுட்கவர்தல்
reactant	வினைபொருள்
reaction (chemistry)	வேதிவினை
reaction (to an action)	எதிர்வினை
reaction intermediate	வினையிடைப் பொருள்
reaction mechanism	வினைமுறை
reaction path	வினைவழி
read only memory (ROM)	படிக்கவே நினைவகம் (பநி)
read write head	எழுதும் படிக்கும் தலை
reader	படிப்பி
ready delivery	உடன் கொண்டளிப்பு
reagent	வினையாக்கி[1]
reagin	ஒவ்வாமை நோயெதிர்ப்பி
real gas	இயல் வளிமம்
real image	இயல் நிழலுரு
real numbers	மெய்யெண்கள்
realAudio	இயற் கேட்பொலி
realized gain	பெற்ற பெறுமம்
rearragement	மாற்றடுக்கம்
rearrange	மாற்றடுக்கு
rebated joint	தள்ளிணைப்பு
rebating	தள்ளிடல் (தச்சு)
reboot	மறுதொடங்கு
receipt	பற்றுச்சீட்டு
receiving antenna	பெறுதல் அலைவுணரி
receptacle[2] *(botany)*	பூத்தளம்
receptor	பெறுவி[3]
receptor organ	பெறுவி உறுப்பு
recession	ஒடுங்கம்
recessive	ஒடுங்கிய[4]
recessive epistasis	ஒடுங்கு மேல்நிற்றல்
recessive gene	ஒடுங்கு மரபணு
recessiveness	ஒடுங்கல்
recipient	பெறுனர்
reciprocal	தலைகீழி
reciprocal cross breeding	இருவழிக் குறுக்கு இனவளர்ப்பு
reckoning	கணக்கீடு செய்தல்
reclamation	மீட்டெடுத்தல்
reclamation disease	மீட்டெடுத்தல் நோய்
recoil	பின்னுந்தம்

[1] *catalyst* - வினையூக்கி

[2] *aka* thalamus, torus

[3] *acceptor* - ஏற்பி

[4] *dominant* - ஓங்கிய

recombinant	மீள்சேர்[1]
recombinant DNA	மீள்சேர்வு அனடி
recombination	மீள்சேர்வு
recon (biology)	மறுசேரி[2]
reconciliation	சரிகாணல்
reconstruction	மறுகட்டுமானம்
record	பதிவு
recourse	தஞ்சம்
recover	மீட்பெறு
recovery	மீட்பெறல்[3]
recovery (computer)	காப்புமீட்பு
recreation	புத்தூட்டம்
recrystallization	மீள்படிகமாக்கல்
recrystallize	மீள்படிகமாக்கு
rectal cancer	மலக்குடற் புற்று
rectangle	செவ்வகம்
rectangular coordinate plane	செவ்வக ஒருங்களவு தளம்
rectifier	நேராக்கி
rectify	நேராக்கு
rectifying entry	நேராக்கப் பதிகை
rectrices	வாலிறகுகள்
rectum	மலக்குடல்
recurring	மீள்தொடர்
recurring deposit	மீள்தொடர் வைப்பு
recursion	தற்சுருள் பெ.
recursive	தற்சுருள் பெய
recursive relation	தற்சுருள் உறவு
recycle	மறுசுழற்சி
recycle bin	மறுசுழற்சிப் பெட்டி
red blood cell[4]	சிவப்பணு
red blood corpuscle[5]	சிவப்பணு
Red Cross	செஞ்சிலுவை
red giants	செம்பெருமீன்கள்
red marrow	சிவப்பூன்
red pulp	சிவப்புச் சக்கை
Red Sea	செங்கடல்
redeem	பணமீள்
redeemable	பணமீள்தகு[6]
redifferentiation	மீள்வேறுபடல்
redirection	திசைதிருப்பல்
redox	மூச்சியமேற்றவிறக்கம்
redox couple	மூச்சியமேற்றவிறக்க இரட்டை
redox potential	மூச்சியமேற்றவிறக்க ஆற்றநிலை
red-tape	சிவப்பு நாடா
red-tapism	சிவப்பு நாடாத்தனம்
reducing agent	மூச்சியமிறக்கி
Reductio ad Absurdum	முரண்பாடு தருவித்தல்
reduction	மூச்சியமிறக்கம்[7]
reduction formula	படியிறக்க வாய்ப்பாடு
reduction potential	மூச்சியமிறக்க ஆற்றநிலை
redundancy	மிகைமம்
redundant	மிகைம
reed	நாணல்
reefer (construction)	பாவுசட்டம்
reentrant	மீள்நுழை
reexport	மறு ஏற்றுமதி
reference (citation)	பார்வையம்
reference (computer)	முகடி[8]
reference (origin)	ஆதி
refine	பண்படுத்து
refined	பண்பட்ட
reflect	எதிரொளி
reflection	எதிரொளிப்பு
reflection symmetry	எதிரொளி சீரொருமை

[1] *recon* - மறுசேரி
[2] *recombinant* - மீள்சேர்
[3] *reversibility* - மீள்திருப்புமை
[4] *aka erythrocyte*
[5] *aka erythrocyte*
[6] *reversible* - மீள்தகு
[7] குறுக்கம் - *contraction*
[8] **முகவரி காட்டி**

reflector	எதிரொளிப்பி
reflex	தன்னிகழ்வு
reflex angle	பின்வளை கோணம்
reflex arc	தன்னிகழ்வு வில்
reflexive	பின்வளை
reform	சீர்திருத்தம்
refracted ray	முறிகதிர்
refraction	ஒளிவிலகல்
refractive index	ஒளிவிலகல் எண்
refresh	மீளூட்டு[1]
refrigerant	குளிரூட்டி
refrigerate	குளிரூட்டு
refuse (sanitation)	ஒதுக்கம்
regenerate	மீளுருவாக்கு
regeneration	மீளுருவாக்கம்
region	வட்டாரம்
regional	வட்டார
regional rural banks	வட்டாரக் கிராம வங்கி
register n	பதிவி[2]
register v	பதிவிடு
registration	பதிவீடு
registration number	பதிவெண்
registry	பதிவகம்
regma	மூவறைப் பிளவுக் கனி
regression	மீள்வீழ்வு
regression line	மீள்வீழ்வுக் கோடு
regressive	மீள்வீழ்
regressive tax	மீள்வீழ் வரி
regular polygon	ஒழுங்குப் பலகோணம்
regular polygon	சீரான பலகோணம்
regular polyhedron	சீரான பன்முகி
regularity	சீர்மை
regulate	ஒழுங்கமை[3]
regulation (by itself)	ஒழுங்கமைதல்
regulation (by something)	ஒழுங்கமைத்தல்
regulator	ஒழுங்கமைப்பி
regulatory	ஒழுங்கமை
regulatory substances	ஒழுங்கமை பொருட்கள்
rehabilitation	மறுவாழ்வு
rehearsal	ஒத்திகை
Reichert-Meissl number	இரைக்கடு மெய்சலின் எண்
Reimer-Tiemann reaction	இரீமர்தீமனின் வினை
reinfection	மறுகிருமியேற்றம்
reinforce	வலிமையூட்டு
reinstate	மீட்டமை
reinstatement	மீட்டமைப்பு
reinstatement policy	மீட்டமைப்புக் காப்பிதழ்
Reissner's membrane[4]	நுழைவறைச் சவ்வு
reiterate	மீண்டும் கூறு
reject	நிராகரி
rejection (transplant)	ஏற்பின்மை
relation	உறவு
relational database	உறவுமை தரவுத்தளம்
relational expression	உறவுமைக் கோவை
relational operator	உறவுமைச் செயலி
relative error	ஒப்புமைப் பிழை
relative lowering of vapor pressure	ஒப்புமை ஆவி அழுத்தக் குறைவு
relative motion	ஒப்புமை இயக்கம்
relative path	ஒப்புமைப் பாதை (இலினசு)
relative poverty	ஒப்புமை வறுமை
relative standard deviation	ஒப்புமைத் திட்ட விலக்கம்
relative value (as opposed to	ஒப்புமை மதிப்பு

[1] *renew* - புதுப்பி

[2] *registry* - பதிவகம்

[3] *organize* - ஒருங்கமை; *coordinate* - ஒருங்கிணை

[4] *aka* vestibular membrane

absolute value)	
relatively	ஒப்பளவில்
relativistic	ஒப்புமைசார்
relativity	ஒப்புமை[1]
relaxin	நெகிழ்தம்
relay pump theory	ஏற்றி வரிசைக் கோட்பாடு
relieving arch	துணை வளைவு
reluctance	மறுப்பம்
REM (rapid eye movement) sleep	விகவு (விரைவுக்கண்ணசைவு றக்கம்)
remediation	மீள்சீராக்கம்
remiser	துணைத்தரகர்
remodelling	மறுவொப்புருவாக்கம்
remote (control)	தொலைவி
remote control	தொலைக்கட்டுப்பாடு
remote controller	தொலைக்கட்டுப்படுத்தி
remote desktop	தொலைப் பணித்தளம்
Remote Desktop Connection	தொலைப் பணித்தள இணைப்பு
remote sensing	தொலையுணரல்
remote sensor	தொலையுணரி
remove	நீக்கு[2]
remunerate	பணியீடளி
remuneration	பணியீடு[3]
renal artery	சிறுநீரகத் தமனி
renal capsule	சிறுநீரகப் பெட்டகம்
renal column	சிறுநீர்த் தூண்
renal corpuscle	சிறுநீரகத் தனித்துகள்
renal failure	சிறுநீரகச் செயலிழப்பு
renal hilum	சிறுநீரக நுழைவடு
renal papillae	சிறுநீரகச் சிம்பிகள்
renal pelvis	சிறுநீரக இடுப்பு
renal portal vein	சிறுநீரக நுழைவச் சிரை
renal pyramid	சிறுநீரக நாற்கூம்பு
renal regulation	சிறுநீரக ஒழுங்கமைத்தல்
renal sinus	சிறுநீரகக் குழிவு
renal vein	சிறுநீரகச் சிரை
rename	பெயர்மாற்று
rendering	உருவளித்தல்
René Descartes	ரினே டேகார்ட்[4]
renew	புதுப்பி[5]
renewable	புதுப்பிக்கவல்ல
renewable resources	புதுப்பிக்கவல்ல வளங்கள்
renewal	புதுப்பித்தல்
renibacterium	சிறுநீரகப்பாட்டீரியம்
reniform	சிறுநீரகவடிவ
rennin	திரளூக்கி
reorder (list)	மறுமுறைமையாக்கு
reorder (merchandise)	மறுவருகோள்
reorient	மறுதிசையமை
reorientation	மறுதிசையமைவு
repack	மறுபொதியலிடு
repacking	மறுபொதியல்
repaint	மீள்பூசு
repair	செப்பனிடு
repeat i.v	மீண்டும் வா
repeat t.v	மீண்டும் செய்
repid eye movement (REM) sleep	விரைவுக்கண்ணசைவுறக்கம் (விகவு)
replace	மீள்வை
replace with (text)	மீள்வைப்புரை[6]
replacement	மீள்வைப்பு
replication	இரட்டித்தல்
replication bubble	இரட்டித்தல் குமிழி
replication fork	இரட்டித்தல் பிளவு
replicon	இரட்டிப்பி
report n	அறிக்கை
report v	அறிக்கையளி
reporting	அறிக்கையளித்தல்
reposses	மீட்கவர்
repossession	மீட்கவர்தல்
representation	நிற்பம்
representative	நிற்பாளர்

[1] சார்பு - *dependence*

[2] *delete* - அகற்று; *erase* - துடை

[3] பணி + ஈடு

[4] சரியான கிரேக்க உச்சரிப்பு

[5] *refresh* - மீளூட்டு

[6] *search for* - தேடுரை

reproduction (biology)	இனப்பெருக்கம்
reproduction (physics)	மீளுற்பத்தி
reproductive isolation	இனப்பெருக்கத் தனிமையாதல்
reproductory system	இனப்பெருக்க அமைப்பு
reptilia	ஊர்வன
republic	குடியரசு
repulsion	விலக்கல்[1]
rerun	மீளோடு
research	ஆய்வு
research and development	ஆய்வும் வளராக்கமும்
researcher	ஆய்வாளர்
reservation	முன்பதிவு
Reserve Bank of India (RBI)	இந்திய இருப்புவைப்பு வங்கி (இவிவ)
reserve capital	இருப்புவைப்பு மூலதனம்
reserve n	இருப்புவைப்பு[2]
reserve v	முன்பதி
reservoir	தேக்கி
reservoir vessel	தேக்கிக் குழல்
reset	மீளாக்கு
residence time	உள்ளுறை காலம்
resident	உள்ளுறை
resident monitor	உள்ளுறை கண்காணிப்பான்
residual magnetism	எச்சக் காந்தம்
residual value	எச்ச மதிப்பு
residue	எச்சம்
resilience	மீண்மை
resilient	மீழெழு
resin	பிசின்
resistance	தடையம்
resistance vessel	தடையக் குழல்
resistivity	தடைவுமை
resistor	தடையி
resistors in parallel	பக்க இணைப்பில் தடையிகள்
resistors in series	தொடர் இணைப்பில் தடையிகள்
resize	அளவுமாற்று
resochin	இறிசாச்சின்
resolution	தீர்மானம்
resolution (instrument)	பகுதிறன்
resolution (into components)	அகைபிரித்தல்
resolve (into components)	அகைபிரி
resonance	ஒத்தலைவு
resonance effect	ஒத்தலைவு விளைவு
resonance energy	ஒத்தலைவு ஆற்றல்
resorcinol	பிசினார்சினால்
resource	வளம்
Resource for the Future (RFF)	வருங்காலத்துக்கான வளங்கள் (வவ)
respiration	மூச்சு
respiratory chain	மூச்சுக் கோர்வை
respiratory passage	மூச்சுப்பாதை
respiratory quotient	மூச்சுவிடல் விகிதம்
respiratory regulation	மூச்சு ஒழுங்கமைத்தல்
respiratory roots	மூச்சுவிடும் வேர்கள்
respiratory system	மூச்சமைப்பு
respiratory tract	மூச்சுச்சுவடு
respiroscope	மூச்சுநோக்கி
respond	பதிலளி
response	பதில்வினை
response error	பதிலளிப்புப் பிழை
rest mass	ஓய்வு நிறை[3]
rest room	கழிவறை
restart	மீள்துவங்கு

[1] *deviation* - விலக்கம்

[2] *stock* - இருப்பு

[3] *inertial mass* - நிலைம நிறை

restaurant	உணவகம்
restore	மீளமை
restriction endonuclease	வரையறை அகவனவூக்கி
restriction enzyme	வரையறையூக்கி
restructure	மறுகட்டமைப்பு
result	விடை
resultant vector	தொகுபயன் திசையன்
resuscitation	மீட்டெழுப்பல்
retail	சில்லரை விற்பனை
retailer	சில்லரை விற்பவர்
retaining wall	தடுப்புச் சுவர்
retarding potential	வேகங்குறை ஆற்றநிலை
rete testis	விந்தணு வலையம்
reticular cells	வலையவணுக்கள்
reticular layer	வலையகப் படலம்
reticulate venation	வலை நரம்பமைப்பு
reticuloendothelial	வலையகச்சவ்வு
reticuloendothelial cell	வலையக அகச்சவ்வணு
reticulum	வலை (உடலமைப்பியல்)
retina	விழித்திரை
retinal detachment	விழித்திரை பிரிதல்
retinene	விழித்திரையல்
retinene isomerase	விழித்திரையல் மாற்றியமூக்கி
retinol	பிசினால்[1]
retinopathy	விழித்திரைநோய்
retire	ஓய்வுறு
retirement	ஓய்வுறுதல்
retrieve	மீட்பெறு
retrofit	பின்பொருத்து
retrovirus	மாற்றுவைரசு
retting	நார்பிரிதல்
return	திருப்பம்
return key	திருப்பம் விசை
return on investment	முதலீட்டுத் திருப்பம்
return statement	திருப்பம் கூற்று
reuse	மீள்பயன்[2]
revaluation	மறுமதிப்பறிதல்
revenue	வருவாய்[3]
revenue transaction	வருவாயின வணிமாற்றம்
reverberatory furnace	எதிர்வெப்ப உலை
reversal	மீள்திருப்பம்
reversal law	மீள்திருப்ப விதி
reverse bias	மீள்திருப்பக் கோடல்
reverse direction	மீள்திருப்பத் திசை
reverse herkogamy	மீள்திருப்பத் தடுப்புத்தடை
reverse osmosis	மீள்திருப்பச் சவ்வூடல்
reverse transcriptase	மீள்திருப்ப நகலெழுதூக்கி
reversibility	மீள்திருப்புமை[4]
reversible	மீள்திருப்பத்தகு
reversible cell	மீள்திருப்பத்தகு மின்கலம்
review	மீள்பார்வை
revise	மீள்திருத்து
revoke	மீட்கொள்
revolute	பின்சுருண்ட
revolving door	சுழற் கதவு
rewinding	மீட்சுற்றல்
rewrite	மீளெழுது
Reynold's number	இரெனால்டின் எண்
rhabdovirus	கோல்வைரசு
rhamphotheca	அலகுறை[5]
rhenium	இரீனியம்
rheostat	மின்தடை மாற்றி
rhesus negative	எதிர்ம இரீசு
rhesus positive	நேர்ம இரீசு
rhesus type	இரீசு வகை

[1] *Although retinol is associated with retina, the name arises from resin* - பிசின்

[2] *second hand* - மறுபயன்

[3] *income* - வருமானம்

[4] மீட்பெறல் - *recovery*

[5] அலகு + உறை

rheumatic arthritis	எலும்புத்தசை மூட்டழற்சி
rheumatic fever	எலும்புத்தசைக் காய்ச்சல்
rheumatic heart disease	எலும்புத்தசைவலி இதயநோய்
rheumatism	எலும்புத்தசைவலி
rhinoceros beetle	காண்டாமிருக வண்டு
rhinosporidiosis	நாசிவித்தழற்சி
rhinosporidium	நாசிவித்து
rhizobiaceae	கிழங்கியனையன
rhizobium	கிழங்கியம்
rhizodermis	வேர்த்தோல்
rhizoid	வேரனையம்
rhizome	மட்டத்தண்டு
rhizopod	வேர்க்காலி
rhizopus	இழையப்பூஞ்சை
rhizosphere	வேர்க்கோளம்
rho	தோ
Rhode Island	உரோடு ஐலண்டு
rhodium	உரோடியம்
rhodomicrobium	உரோசநுண்பாட்டீரியம்
Rhodophyceae	சிவப்பால்கவை
rhodopsin	விழிச்செவ்வூதா
rhodospirillaceae	உரோசச்சுருளியனையன
rhodospirillales	உரோசச்சுருளியைகள்
rhodospirillum	உரோசச்சுருளியம்
rhombencephalon[1]	பின்மூளை
rhombohedral	கனச்சாய்சதுரம்
rhomboid major	சாய்சதுரப் பெருந்தசை
rhomboid minor	சாய்சதுரச் சிறுதசை
rhombus	சாய்சதுரம்
rhythm	தாளம்
rib	விலாவெலும்பு
rib cage	விலாவெலும்புக் கூடு
ribitol	இரைபிடால்
riboflavin	பி-2 வைட்டமின்
ribonuclease	அனரியூக்கி
ribonucleic acid[2]	அனரி
ribonucleoprotein	அனரிப்புரதம்
ribose	இரைபோசு
ribosomal DNA	புரதமாக்க அனடி
ribosomal RNA (rRNA)	புரதமாக்க அனரி
ribosome	புரதமாக்கி
ribulose	இரிபுலோசு
Ribulose-1,5-bisphosphate (RuBP)	இரிபுலோசு-1,5-இருபாசுவேட்டு (இரிபா)
rice bug	அரிசிப் பூச்சி
ricin	இரிசின்
rickets	புள்ளிக்காய்ச்சல்
Ricketts	ரிக்கெட்ஸ்
rickettsia	புள்ளிக்காய்ச்சலியம்
rickettsiaceae	புள்ளிக்காய்ச்சலியனையன
rickettsiales	புள்ளிக்காய்ச்சலியைகள்
ridge	முகடு (மலை)
right angle	செங்கோணம்
right click	வலச்சொடுக்கு
right hand limit	வலப்பக்க எல்லை
right justify	வலது நேர்த்தியாக்கு
right triangle	செங்கோண முக்கோணம்
right-handed system	வலக்கை அமைப்பு
rigid body	நெளியாப் பொருள்
rigid rotor	நெளியாச் சுழலி
rigidity	நெளியாமை
rigidity modulus	நெளியாமைக் குணகம்
rigor mortis	மரண விறைப்பு
rigorous	இறுக்கமான
rim lock	விளிம்புப்பூட்டு
rind gall	பசைவீக்கம்
rinderpest	கோமாரி
ring network	வளைய வலையம்
ring shake	வளைய விரிசல்
ringing experiment	வளையப் பரிசோதனை
ringworm	வளையப்புழு
ripe fruit	பழம்

[1] *aka* hindbrain

[2] *aka* RNA

ripple counter	சிந்து எண்ணி
rise	எழுச்சி
riser	உயர்த்தி
rising butt hinge	எழுவொன்றிய கீல்
risk	ஆபத்துக்கூறு
risk zone	ஆபத்துக்கூறு பகுதி
risorius	நகுதசை
rival	போட்டியர்[1]
rivalry	போட்டியம்
river delta	ஆற்றின் கழிமுகம்
rivet	தட்டாணி
RmksA (rationalized meter, kilogram, second, ampere)	காமீகிநொவா (காரண மீட்டர், கிலோகிராம், நொடி, ஆம்பியர்)
RNA	அனரி[2]
RNA primer	அனரி முதன்மியூக்கி
road	சாலை
road aggregate	சாலைகட்டுத் திரள்மம்
road sign	சாலைக் குறி
road signal	சாலைச் சைகை
roasting	வறுத்தல்
Robert Coch	ராபர்ட்டு காக்
Robert Gallo	ராபர்ட் கேலோ
Robert Hooke	ராபர்ட் ஹூக்
Robert Koch	ராபர்ட் கோச்
Robert Mulliken	ராபர்ட் மல்லிக்கன்
Robertson	ராபர்ட்ஸன்
robot	எந்திரன்
robotics	எந்திரனியல்
robust	பிழைபொறுக்கும்
rock lobster	கல் இறால்
rocket	ஏவூர்தி
rocket launch	ஏவூர்தி ஏவல்
rocket launch station	ஏவூர்தி ஏவுநிலையம்
rod (retina)	உருளையணு
rod and cone	உருளையும் கூம்பும்
Roentgen	ரென்ட்கன்
roentgenium	உரோகனியம்
Rohini	உரோகிணி
Rohu	உரோகிதம்
roja	உரோசா
rollback	பின்சுருட்டு
Rolle's theorem	இரோலின் தேற்றம்
rolling door	உருள் கதவு
rolling pin	பூரிக்கட்டை
rolling plan	உருள் திட்டம்
ROM (read only memory)	பநி (படிக்கவே நினைவகம்)
roof	கூரை
root	வேர்
root	வேர்
root (math)	படிமூலம்
root (math)	மூலம் (கணிதம்)
root canal	வேர்க் கால்வாய்
root cap	வேர்மூடி
root hair	வேர்த் தூவி
root mean square	வர்க்கச் சராசரி மூலம்
root nodule	வேர் முடிச்சு
root system	வேரமைப்பு
root user	மூலப் பயனர்
rootlet	சிறுவேர்
roots of equation	சமன்பாடுகளின் மூலங்கள்
rosaceous	உரோசவகை
rosales	உரோசனைகள்
rose bengal	வங்காளச் சிவப்பு
Rosenmund reduction	உரோசன்மண்டின் மூச்சியமிறக்கம்
rosette	மலரம்
rotate	சுழல் வி
rotate corolla	சக்கரவடிவ அல்லிவட்டம்
rotating wheel calculator	சுழற்சக்கரக் கணிப்பான்
rotation (of appointments, of crops)	சுழல்முறை
rotational latency	சுழல் சுணக்கம்

[1] *competitor* - போட்டியாளர்

[2] திருப்புச்சொல்லாகிய *ANR*-இலிருந்து அனரி என்ற புதுத் தமிழ்ச்சொல் உருவாகிறது; *DNA* – அனடி.

rotational symmetry	சுழற்சிச் சீரொருமை
rothia	இராத்தியம்
rotor	சுழலி[1]
rough endoplasmic reticulum	அகக்குழைமச் சொரவலை
rougth timber	அறுக்காத மரம்
Roult's law	இரௌல்ட்டின் விதி
round off	துல்முழுவாக்கு
round off error	துல்முழுவாக்கப் பிழை
round robin	வட்ட வரிசை
round window	வட்டத் திறப்பு
roundworm	உருளைப்புழு
route	வழித்தடம்[2]
router	வழித்தடமி
routine (computer)	நிரற்கூறு
routing	வழித்தடமம்
row (table, matrix)	கிடக்கை (அட்டவணை, தளவணி)
Royal Botanical Gardens	பிரித்தானியத் தாவரவியல் தோட்டம்
rRNA (ribosomal RNA)	புரதமாக்க அனரி
RS (reset-set) flip flop	ஆநீ எழுவிழு
Ru1P	ஒரிபா (இருபுலோசு-1-பாசுவேட்டு)
Ru5P	ஐரிபா (இரிபுலோசு-5-பாசுவேட்டு)
rubber	தேய்ப்பி
rubble masonry	சீரற்ற கற்கட்டு
rubella	செஞ்சொறி
rubidium	உருபிடியம்
RuBP (Ribulose-1,5-bisphosphate)	இரிபா (இரிபுலோசு-1,5-இருபாசுவேட்டு)
ruby	செங்குருந்தம்
ruby laser	செங்குருந்தச் சீரொளி
ruler (measurement)	அளவுகோல்
rumen	முதலிரைப்பை
ruminate	அசைபோடு
ruminococcus	இரைப்பைமணியம்
run n	ஓட்டம்
run time	ஓட்ட நேரம்
runella	உருனி
runner	ஓடுதண்டு
running	ஓடுதல்
rural	கிராம
Russia	உருசியா
ruthenium	உருத்தினியம்
Rutherford	ரதர்ஃபர்ட்
rutherfordium	இரதர்பர்டியம்

S

S- (stereoisomerism)	இ- (வெளியிட மாற்றியம்)
σ *factor*	σ காரணி
S wave	பவ்வலை[3]
saccate petal	பையுடைய இதழ்
saccharide	சர்க்கரைடு
saccharin	சாக்கரின்
saccharomyces	சர்க்கரைப்பூஞ்சை
saccoglossus	சாக்கோகிளாசு
Sach's law	சாக்கின் விதி
sacral region	திருவெலும்புப் பகுதி
sacrificing ratio	தியாக விகிதம்
sacrum	திருவெலும்பு
safari	விலங்கு காணிடம்
safe deposit box	காப்பு வைப்புப் பேழை
safety	ஆபத்தின்மை
safranin	குங்குமின்
Sagittarius	தனுசு
Sahiwal	சாகிவால்
sail	மரப்பாய்
sailor	மாலுமி
sal	சால்மரம்
salamander	சலமாண்டர்

[1] *stator* - நிலையி

[2] *track* - தடம்

[3] *P wave* - கவ்வலை; *Q wave* - சவ்வலை; *R wave* - தவ்வலை

salary	ஊதியம்
sales and marketing	விற்பனையும் சந்தையிடலும்
sales letter	விற்பனைக் கடிதம்
salesmanship	விற்பனைத் திறமை
salesperson	விற்பனையாளர்
salicylic acid	சாலிசிலிக அமிலம்
salinity	உப்புமை
saliva	வாய்நீர்
salivary amylase	வாய்நீர் தரசவூக்கி
salivary gland	வாய்நீர்ச் சுரப்பி
salmonella	சால்மனியம்
salmonella typhi	சால்மனியம் தைபை
salmonellosis	சால்மனியநோய்
saloon	அலங்காரகம்
salp	சால்ப்பு
salpa	சால்ப்புகள்
salt bridge	உப்புப் பாலம்
salver-shaped corolla[1]	தட்டுவடிவ அல்லிவட்டம்
samara	சிறகுக்கனி
samarium	சமேரியம்
sample	மாதிரிக்கூறு
sample space	மாதிரிக்கூறு வெளி
sampling	மாதிரிக்கூறெடுப்பு
sampling error	மாதிரிக்கூறெடுப்புப் பிழை
sampling frame	மாதிரிக்கூறெடுப்புச் சட்டம்
sampling unit	மாதிரிக்கூறெடுப்பு அலகு
sampling with replacement	மீள்வைப்புடன் மாதிரிக்கூறெடுப்பு
sampling without replacement	மீள்வைப்பிலா மாதிரிக்கூறெடுப்பு
sanctuary	சரணாலயம்
sand fly	மணல் ஈ
Sandmeyer reaction	சாண்மயரின் வினை
sandstone	மணற்பாறை
sanitation	துப்புரவு
sanitizer	துப்புரவாக்கி
sans recourse	தஞ்சமின்றி
sap	மரச்சாறு
saponification	சோப்பாக்கல்
sapphire	நீலக்குருந்தம்
saprophyte	மட்குண்தாவரம்
saprospira	மட்குச்சுருளியம்
saprozoonosis	மட்குவிலங்கின்வருநோய்
saquinavir	சகுனவீர்
sarcinae	பொதியவிங்கள்
sarcolemma	தசையுமி
sarcoma	எலும்புப்புற்று
sarcomere	தசையலகு
sarcoplasm	தசைக்குழைமம்
sarcoplasmic reticulum	தசைக்குழைம வலை
sarcotesta	விதைவெளியுறை
sardine	சாளை
sargassum	சார்கசம்
SARS (severe acute respiratory syndrome)	குமூகு (குறுங்கடு மூச்சமைப்புக் குறித்தொகுப்பு)
sartorius	கால்மடக்குத் தசை
sash (construction)	படற்சட்டம்
satchel	தோட்பை
satelite	துணைக்கோள்
satellite receiver	துணைக்கோள் பெறுவி
saticon	சேதிப்படநோக்கி
satiety value	நிறைவடைதல் மதிப்பு
satisfy	நிறைவுசெய்
satisfy conditions	நிபந்தனைகளை நிறைவுசெய்
saturated hydrocarbon	தெவிட்டிய நீரியக்கரிமம்
saturated solution	தெவிட்டிய கரைசல்
saturation	தெவிட்டல்
saturation current	தெவிட்டல் மின்னோட்டம்
saturation effect	தெவிட்டல் விளைவு

[1] *aka hypocrateriform corolla*

saturation point	தெவிட்டல் புள்ளி
Saturday	சனிக்கிழமை
Saturn	சனி (கோள்)
Saturn	சனி (கோள்)
sausage shaped	கிண்ண வடிவம்
savanna	வெப்பப் புல்வெளி
save	சேமி
save as	எனச் சேமி
saving	சேமிப்பு
savings account	சேமிப்புக் கணக்கு
savings bank	சேமிப்பு வங்கி
saw (tool)	அறுப்பி
sawing	அறுத்தல்
s-block	*s*-கட்டம்
s-block elements	*s*-கட்டத் தனிமங்கள்
SC (Scheduled Caste)	தாழ்த்தப் பட்டவர்கள்
scala media	நத்தையெலும்புக் குழி
scala tympani	நடுச்செவிக் குழி
scala vestibuli	நுழைவறைக் குழி
scalar	திசையிலி
scalar product	திசையிலிப் பெருக்கல்
scalariform	ஏணியுருவான
scale (math)	அளவிகிதம்
scale (physics)	அளவம்
scale (zoology)	செதில்
scale leaf	செதிலிலை
scaled skin syndrome	செதிற்றோல் குறித்தொகுப்பு
scalene	சரிவுத் தசை
scalene triangle	சமமற்ற முக்கோணம்
scaly bulb	செதிற் குமிழம்
scan	வரிவருடு
scandium	காந்தியம்
scanner	வரிவருடி
scanning	வரிவருடல்
scanning electron microscope	வரிவருடல் எலட்டிரான் நுண்ணோக்கி
scape	தண்டுமட்டை
scapula	தோளெலும்பு
scarcity	தட்டுப்பாடு
scatter	சிதறு
scatter diagram	சிதறல் படவரைவு
scent gland	வாசனைச் சுரப்பி
schedule	காலமுறை
scheduled bank	பட்டியலிலுள்ள வங்கி
Scheduled Caste (SC)	தாழ்த்தப் பட்டவர்கள்
Scheduled Tribe (ST)	பழங்குடியினர்
scheduling	காலமுறையாக்கல்
schema	கட்டுத்திட்டம்
schemata	கட்டுத்திட்டங்கள்
schematic	திட்டப்படம்
scheme	வரைதிட்டம்
Schiff's base	சிப்பின் காரம்
Schiff's reagent	சிப்பின் வினையாக்கி
schistosoma	குருதிப்புழு
schistosome	குருதிக்கொக்கியம்
schizocarpic fruit	பிளவுக் கனி
schizogony	பிளவுப்பெருக்கம்
schizont	பிரிவணு
Schneider	ஷ்னைடர்
scholar	கற்றறிஞர்
school of thought	எண்ணக்குழு
Schotten-Baumann reaction	சாட்டன் பாமனின் வினை
Schottky defect	சாட்கி குறைபாடு
Schrödinger	ஷ்ரோடிங்கர்
Schrödinger equation	சோடிங்கர் சமன்பாடு
schwann cell	பொதி நரம்பணு
sciatic artery	இடுப்புத் தமனி
sciatic vein	இடுப்புச் சிரை
SCID (severe combined immune deficiency)	கயிநோப (கடும் இரட்டை நோயெதிர்ப்புப் பற்றாக்குறை)
scientific notation	அறிவியல் குறியீடு
scintillation	மின்னொளிர்வு
sclera	கண்ணுறை
sclereids	கடினத் திசு
sclerenchyma	கடினக்கூழ்த்திசு

sclerosis	திசுக்கடினம்
sclerotesta	விதைநடுவுறை
sclerotic coat	கடினத்தசையுறை
sclerotic plate	கடினத்தசைத் தகடு
scolex	புழுத்தலை
scooter	துள்ளுந்து
scope	நோக்கெல்லை
scorpioid cyme	நெளிவு முற்றுநுனியன்
scorpion	தேள்
scotopic vision	உருளைவிழிதப் பார்வை
scotopsin	உருளைவிழிதம்
scratch pad	கிறுக்குத் தாட்கொத்து
scratch paper	கிறுக்குத் தாள்
screen saver	திரை காப்பு
screening	திரையிடல்
screening constant	திரையிடல் மாறிலி
screenshot	திரைநிலைப்படம்
screw	திருகாணி
screw gauge	திருகளவி
screwdriver	திருப்புளி
script (computer)	உரைநிரல்
scroll	திரையுருட்டு
scroll bar	திரையுருட்டுப் பட்டை
scrotal sac	விந்தகப்பையுறை
scrotal tissue	விந்தகப்பைத்திசு
scrotum	விந்தகப்பை
scurvy	சிகர்வி
scutellum	சிறுகேடயம்
scyphozoa	இழுதுகள்
sea	கடல்
sea anemone	கடல் அனிமோன்
sea bass	கொடுவா
sea snake	கடற் பாம்பு
sea travel	கடற்பயணம்
sea urchin	கடல் அரிச்சின்
seaborgium	சிபர்கியம்
search bar	தேடுபட்டை
search box	தேடு பெட்டி
search engine	தேடு பொறி
search for (text)	தேடுரை[1]
search light	தேடு விளக்கு
search results	தேடல் முடிவுகள்
search tool	தேடு கருவி
Searle's method	சரிலின் முறை
seashore	கடற்கரை
seasonal isolation[2]	பருவத் தனிமையாதல்
seasoning	பதமாக்கல்
seaweed	கடற்களை[3]
sebaceous gland	மெழுகுச் சுரப்பி
sebacic acid	சிபேசிக அமிலம்
SEBI (Securiteis and Exchange Board of India)	ஈமா (இந்திய ஈட்டாவண மாற்றகங்கள் வாரியம்)
SEBI act	ஈமா சட்டம்
sebum	மெழுகம்
secant (geometry)	வெட்டன்
secant (trigonometry)	வெட்டுவிகிதம் (வெவி)
second (angle)	விகலை
second (time)	நொடி
second hand	மறுபயன்[4]
second hand goods	மறுபயன் பொருட்கள்
second law of thermodynamics	வெப்பவியக்கத்தின் இரண்டாம் விதி
second order	இரண்டாம் முறைமை
second order reaction	இரண்டாம் முறைமை வினை
secondary	இரண்டாமை
secondary bronchus	இரண்டாமைச் சிறுகுழல்
secondary carbon	இரண்டாமைக் கரிமம்
secondary consumer	இரண்டாமை நுகர்வோர்

[1] *replace with* - மீள்வைப்புரை

[2] *aka temporal isolation*

[3] கடல் ஆல்கா - *laminaria;* பாசி - *moss*

[4] *reuse* - மீள்பயன்

secondary education	இரண்டாமைக் கல்வி[1]
secondary electric cell	இரண்டாமை மின்கலம்
secondary follicle	இரண்டாமைக் குழிப்பை
secondary function	இரண்டாமைச் செயற்பாடு
secondary halide	இரண்டாமை உப்பாக்கைடு
secondary memory	இரண்டாமை நினைவகம்
secondary pentane	இரண்டாமை ஐந்தவேன்
secondary root	இரண்டாமை வேர்
secondary sexual character	இரண்டாமைப் பாலினப் பண்பு
secondary storage	இரண்டாமைச் சேமகம்
secondary structure	இரண்டாமைக் கட்டமைப்பு
secrecy	கமுக்கம்
secretariat	செயலகம்
secretary	செயலர்
secretin	சுரப்பியக்கநீர்
secretion	சுரத்தல்
secretory vesicles	சுரப்புக் குமிழங்கள்
section	பகுதி பெ
section officer	பிரிவு அலுவலர்
sectional line	வெட்டுத்தோற்றக் கோடு
sectioning	பகுதியாக்கல்
sector (commerce)	வணிகத்துறை
sector (computer)	சுளை
secular	மதசார்பற்ற
secular trend	நேரம்சார் போக்கு
secured debenture	அடமானக் கடனோலை
securities	ஈட்டாவணங்கள்
Securities and Exchange Board of India (SEBI)	இந்திய ஈட்டாவண மாற்றகங்கள் வாரியம் (ஈமா)
securities market	ஈட்டாவணச் சந்தை
security	பாதுகாப்பு
sedative	உறக்கமூட்டி
sediment	படிமம்
sedimentary rock	படிமப்பாறை
sedimentation	படிமமாதல்
sedimentation constant	படிமமாதல் மாறிலி
sedoheptulose	சிடோவேழுலோசு[2]
Seebeck effect	சீபெக்கின் விளைவு
seed	விதை[3]
seed coat	விதையுறை (தாவரவியல்)
seeding clouds	மேகத்தூவல்
seedling	நாற்று
seep	கசிவிறங்கு
seer fish	வஞ்சிரம்
segment	துண்டம்
segment (zoology)	உடற்கண்டம்
segmental arch	சுளை வளைவு
segmentation	துண்டமாக்கல்
Segre	சக்ரே
segregate	தனிப்பிரி
segregation	தனிப்பிரிதல்
seismonasty	நடுக்கவளைவு
select	தேர்ந்தெடு
selectin	தேர்விணைவி
selection	தேர்வு[4]
selective pressure	தேர்வழுத்தம்
selectively permeable	தேர்வுப் புகவிடும்
selectivity	தேர்மை
selector	தேர்வி
selenium	செலினியம்

[1] *intermediate education* - இடைநிலைக் கல்வி

[2] *pseudo heptulose* - ஏழுலோசுப் போலி

[3] *spore* - வித்து

[4] *test* - சோதனை

selenocysteine	செலினப்பையனின்
selenoether	செலினயீத்தர்
selenol	செலினால்
selenomonas	நிலாவலகியம்
self awareness	தன்னுணர்வு
self defence	தற்காப்பு
self employed	தன் தொழிலர்
self induction	தன்தூண்டல்
self pollination	தன் மகரந்தச் சேர்க்கை
self recognition	தன்னையறிதல்
self sustaining	தானே நீடிக்கும்
self-incompatibility	தன்னொவ்வாமை
self-reliance	தற்சார்பு
Seliwanoff's test	செலிவனாப்பின் சோதனை
sella turcica	துருசிகப் பள்ளம்
seller	விற்பவர்[1]
selling	விற்றல்
selone	சிலியோன்
semantics	பொருளுணரியல்
semaphore	குறிதாங்கி
semen	விந்து[2]
semiautomatic	குறைதானியங்கி
semiaverage	பகுதிச் சராசரி
semicarbazide	அரைக்கரிமசைடு
semicarbazone	அரைக்கரிமசோன்
semicircular canals	அரைவட்டக் கால்வாய்
semiconductor	குறைக்கடத்தி
semiconservative replication	பிரிகை இரட்டித்தல்
semicontinuous	குறைதொடர்ந்த
semi-group	அரைக்குலம்
semilunar valve	பிறைத் தடுக்கிதழ்
seminal funnel	விந்து வடிப்பி
seminal vesicle	விந்துப்பை
seminar	பொழிவுரை
seminiferous tubule	விந்தணுக் குழலம்
semipermeable	குறைபுகவிடும்
senescence	மூப்பு
senior adj	முதுநிலை
senior n	முதியர்
sense of humor	சிரிப்புணர்வு
sense of timing	நேரவுணர்வு
sense organ	உணர்வுறுப்பு
sense strand	நேர்த்திசைக் கிடையிழை
sensitive	சாலுணர்
sensitivity	சாலுணர்மை
sensor	உணரி
sensorineural hearing loss	உணர்நரம்புச் செவிக் குறைபாடு
sensory areas (of brain)	உணர்வியப் பகுதிகள் (மூளையின்)
sensory hearing loss	உணர்விய செவிக் குறைபாடு
sensory memory	உணர்விய நினைவகம்
sensory retina	உணர்விய விழித்திரை
sentence	செப்பு[3]
sentimental	உணர்ச்சிவய
sepal	புறவிதழ்
separating funnel	பிரித்தல் வடிப்பி
separation	பிரித்தல்
sepia	சீப்பியா
sepsis	கிருமியேற்றம்
septate	இடைச்சவ்வுள்ள
septendecillion (short scale)	பதினெண்மடியாயிரம்
septic	சீழுடைய
septic tank	நச்சுத்தடைத் தொட்டி
septicemia	குருதிக்கிருமியேற்றம்
septicemic plague	இரத்தப் கொள்ளைநோய்
septicidal	இடைப்பிரி
septillion (short scale)	எண்மடியாயிரம்
septum	இடைச்சவ்வு
sequenator	தொடரிகண்டெழுதி
sequence	தொடரி

[1] விற்போர் - வில் + போர்

[2] *sperm* - விந்தணு

[3] தொல்காப்பியம் *495; சொற்றொடர் - phrase*

sequence alignment	தொடரி நேரமைத்தல்
sequence tagged site	தொடரி தொங்கியிட்ட தலம்
sequencer	தொடரிகாணி
sequencing	தொடரியாக்கல்
sequential	தொடரிய
sequential circuit	தொடரிய மின்சுற்று
sequester	தனியமிழ்
sequestration	தனியமிழ்த்தல்
serial printer	தொடர் அச்சிடுவான்
series	தொடர் (உதிரி)
series circuit	தொடர் மின்சுற்று
serine	சீரின்
serology	ஊனீரியல்
serotonin	செரட்டோனின்
serotype	ஊனீரியவகை
serous pericardium	இதயஞ்சூழ் நீர்ச்சவ்வு
serrate	பல்விளிம்புடைய
serratia	செராடியம்
serratus anterior	தோளெலும்புத் திருப்பத் தசை
serum	ஊனீர்
servant	சேவகர்
server	சேவையர்[1]
service	சேவை
service sector	சேவைசார் வணிகத்துறை
sessile	காம்பற்ற
session	அமர்வு
Sessions Judge	அமர்வு நடுவர்
set (math)	கணம்
set (switch)	உளதாக்கு (மாற்றி)
set square	முக்கோணச் சட்டம்
seta	உடல்முள்
setae	உடல்முட்கள்
setigerous	உடல்முட்களுடைய
settings	அமைப்பிகள்
settlement (geography)	குடியிருப்பு
settlement (soil)	திணுங்கல்
settlement (stock exchange)	தீர்வு (பங்கு மாற்றம்)
severe	கடும்
severe acute respiratory syndrome (SARS)	குறுங்கடு மூச்சமைப்புக் குறித்தொகுப்பு (குமூகு)
severe combined immune deficiency (SCID)	கடும் இரட்டை நோயெதிர்ப்புப் பற்றாக்குறை (கயிநோப)
sewage	கழிவோட்டம்
Sewall Wright effectl	சூவலிரைட்டின் விளைவு
sewer	கழிவுக்குழாய்
sewerage	கழிவகற்றல்
sex	பாலினம்
sex chromosome	பாலின மரபுமெய்யம்
sex chromosome mechanism	பாலின மரபுமெய்ய இயங்குமுறை
sex determination	பாலினம் நிர்ணயித்தல்
sex linked inheritance	பாலினசார் மரபுபெறல்
sexdecillion (short scale)	பதினெழுமடியாயிரம்
sextet	ஆறுமம்
sextillion (short scale)	எழுமடியாயிரம்
sexual	பாலின
sexual dimorphism	பாலின இருவடிவுமை
sexual equality	பாலினச் சமத்துவம்
sexual identity	பாலின இனங்காணல்
sexual isolation	பாலியத் தனிமையாதல்
sexual reproduction	பாலின இனப்பெருக்கம்
sexuality	பாலினவியம்
sexually transmitted diseases	பாலுறவுத் தொற்று நோய்கள்
seymouria	சீமூரியா
shaded	நிழலிட்ட

[1] *client* - சேவுறர்

shaft	தண்டு (எந்திரம்)
shake (timber)	விரிசல் (கட்டுமான மரம்)
shallow	ஆழமற்ற[1]
shank	கீழ்க்கால்
share n	பங்கு
share v	பகிர்
shareholder	பங்குதாரர்[2]
shark	சுறா
sharpness	கூர்மை
sheath	சூழுறை[3]
sheathed bacteria	சூழுறைபாட்டீரியம்
sheathing leaf base	மடலுறை
shelf	அடுக்குத்தட்டு
shell	ஓடு பெ (மேலுறை)
shell script	செயற்றள உரைநிரல்
shellac	அவலரக்கு[4]
shepherd	இடையன்
shield v	கேடயி
shielding	கேடயித்தல்
shift key	உயர்த்தி விசை
shifting operator	நகர்வுச் செயலி
shigella	சிகாவியம்
shigellosis	குச்சியப்பேதி
shingle	கூரைத்தகடு
shingles[5]	தோற்புண்
ship	கப்பல்
shipping	கப்பலேற்றல்
shipping documents	கப்பலேற்று ஆவணங்கள்
shivering	நடுக்கம்
shock absorber	அதிர்ச்சி தாங்கி
shock wave	அதிரலை
shock wave therapy[6]	அதிரலைச் சிகிச்சை
ShockWave	சாக்குவேவு
shoot	தளிர்
shoot senescence	தளிர் மூப்பு
shoot system	தளிரமைப்பு
shooting	எய்தல்
shop n	கடை
shopping	வாங்கல்
short circuit	குறு மின்சுற்று
short day plants	குறும்பகல் தாவரங்கள்
short pitch coil	குறைச்சரிவு சுருள்
short term	குறுங்கால
shortage	அளிப்புக்குறைவு
shortcut menu	குறுக்குவழிப் பட்டி
shortest job first	மீக்குறும் பணி முதலில்
show of hands	கை வாக்களிப்பு
show room	காட்சியகம்[7]
shower	பொழிவு
shrimp	கூனிறால்
shrub	புதர்
shrub stage	புதர் நிலை
shuffle	குலுக்கு (சீட்டுக்கட்டு)
shunt	தடமாற்றம்
shutdown	இயக்கடக்கு
shutter	இழுகதவு
SI units	பவ அலகுகள்
sialic acid	சியாலிக அமிலம்
siamese fighter	சயாமியவீரமீன்
SIB (Swiss Institute of Bioinformatics)	சுதப (சுவிச உயிர்மத் தகவலியல் பயிலகம்)
sickle cell anaemia	பிறையணு குருதிச்சோகை
side chain	பக்கக் கோர்வை
siderophilin	இரும்புக்கடத்தி
siemens	சீமன்சு
Siemen's ozoniser	சீமெனின் ஓசோனாக்கி
sieve tube	சல்லடைக்குழல்
sievert	சிவர்டு
sift	சலி

[1] *superficial* - மேலோட்டமான
[2] *partner* - பங்காளி
[3] *envelope* - மூடுறை
[4] அவல் + அரக்கு
[5] *aka herpes zoster*
[6] *aka lithotripsy*
[7] *display* - காட்சியம்

sight distance	காண்தொலைவு
sigma	சிம்மா
sigma factor	சிம்மா காரணி
sigmoid colon	வளைவுப்பெருங்குடல்
sign	குறி
sign convension	குறி மரபு
sign off	ஒப்பம்விடு
sign on	ஒப்பமிடு
signal	சைகை
signal (neural, electronic)	நிமிண்டல்
signal to noise ratio	சைகை ஓசை விகிதம்
signal to noise ratio	நிமிண்டல் ஓசை விகிதம்
signal transducer	சைகை அனுப்பி
signal transduction	சைகை அனுப்பீடு
signaling molecules	நிமிண்டல் மூலக்கூறுகள்
signed integer	குறியுடை முழுவெண்
significance	பொருளுமை
significant figures	பொருளுமை இலக்கங்கள்
signum function	குறிச்சார்பு
silane	சைலேன்[1]
silent infarction	வலியில்லாத் தசையிறப்பு
silhouette	வெளிக்கோட்டுரு
silica	சிலிக்கா
silicious	சிலிக்க
silicon	சிலிக்கான்
silicon chip	சிலிக்கான் சில்லு
silicon wafer	சிலிக்கான் சீவல்
silicone	சிலிக்கோன்
siliqua	பேழைக்கனி[2]
silkmoth	பட்டுப்பூச்சி[3]
silkworm	பட்டுப்புழு[4]
sill	நிலைப்படி
silt	வண்டல்
siltation	வண்டலாகல்
Silurian period	சிலுரியக் காலம்
silver	வெள்ளி (வேதியியல்)
silver fish	வெள்ளிமீன்
silver nitrate	வெள்ளி உப்பியைட்டு
simian virus	குரங்கு வைரசு
similar angles	ஒத்த கோணங்கள்
similar triangles	வடிவொத்த முக்கோணங்கள்
simonsiella	சைமனியம்
simple bar diagram	எளிய பட்டைப் படவரைவு
simple case	எளிய வேற்றுநிலை
simple cyme	தனி முற்றுநுனியன்
simple dichasium	தனி இருபிரிவன்
simple dry fruit	உலர் தனிக்கனி
simple fleshy fruit	சதைப்பற்றுள்ள தனிக்கனி
simple fruit	தனிக்கனி
simple goiter[5]	எளிய காயிட்டர்
simple harmonic	எளிய ஒத்திசை
simple interest	தனிவட்டி
simple leaf	தனியிலை
simple pit	எளிய குழி
simple random sampling	எளிய நேர்ந்தவாறு மாதிரிக்கூறெடுப்பு
simple random sampling with replacement	மீள்வைப்புடன் எளிய நேர்ந்தவாறு மாதிரிக்கூறெடுப்பு
simple reaction	எளிய வேதிவினை
simple tissue	எளிய திசு
simpleton	எளியன்
simplex (communication)	ஒருவழி (தகவற்றொடர்பு)
simplex (mathematics)	எளியுரு
simplex mode	ஒருவழி நிலமம்
simplification	எளிமையாக்கல்
simulate	பாவனையாக்கு

[1] *xylene* - சைலீன்
[2] *pod* - பேழை
[3] *butterfly* - பட்டாம்பூச்சி
[4] *butterfly* - பட்டாம்பூச்சி
[5] *aka endemic goiter*

simulation	பாவனையாக்கம்
simultaneous	உடனிகழ்
Sindhi	சிந்தி
sine	வவி (வளைவிகிதம்)
sine	வளைவிகிதம் (வவி)
Singer	சிங்கர்
single column cash book	ஒற்றை நெடுக்கை கைப்பண ஏடு
single density	ஒற்றை அடர்வு
single electrode potential	ஒற்றை மின்வாய் ஆற்றநிலை
Single European Act	ஒற்றை ஐரோப்பியச் சட்டம்
single layer winding	ஒற்றைப் படலக் கண்டு
single life policy	ஒற்றை ஆயுட் காப்பிதழ்
single nuclotide polymorphism	ஒற்றை அணுக்கருவைடு பலவடிவுமை
single pass	ஒற்றைக்கடவு
single pass transmembrane protein	ஒற்றைக்கடவு சவ்வூடு புரதம்
single phase winding	ஒற்றைக் கட்டக் கண்டு
single precision	ஒற்றைத் துல்லியம்
single premium policy	ஒற்றைச் செலுத்தக் காப்பிதழ்
single quotes	ஒற்றை மேற்கோள்
single spacing	ஒற்றை வரியிடை
single strand	ஒற்றைக் கிடையிழை
single strand binding protein	ஒற்றைக் கிடையிழைப் பிணைப்புப் புரதம்
single user	ஒற்றைப் பயனர்
singleton	ஒற்றையன்
singleton set	ஒற்றையன் கணம்
singular matrix	நேர்மாறற்ற தளவணி
sink n	அமிழ்வி
sinking fund method	ஈடு நிதி முறை
sinoatrial node	குழிவுமேலறைக் கணு
sinter	மெல்லுருகு
sintered glass	மெல்லுருகற் கண்ணாடி
sinus	குழிவு (உடலமைப்பியல்)
sinus venosus	நாளக்குழிவு
siphonogamy	குழல்வழிச்சேர்க்கை
Siri	சிரி (கால்நடை)
Sirius	வியாதா
site map	தல உள்ளடக்கம்
sitosterol	சைதத்திரால்
size	அளவு
skeletal muscle	எலும்புத் தசை
skeletal system	எலும்புக்கூடமைப்பு
skeleton	எலும்புக்கூடு
sketch	முன்வரை
sketch pad	முன்வரை தாட்கொத்து
skew	திரி வி
skewback	பின்தாங்கி
skewness	திரிமை
skin	தோல்
skip	தாவு
skip distance	தாவு தொலைவி
skip zone	தாவுப் பகுதி
skull	மண்டையோடு
sky	வானம்
sky advertising	வான் விளம்பரம்
skylight window	பகலொளிச் சாளரம்
slab	தடிப்பாளம்
slag	கசடு
slaked lime[1]	நீர்த்த சுண்ணாம்பு
slash	சாய்கோடு
Slater	ஸ்லேற்றர்
Slater rules	சிலேற்றரின் விதிகள்
Slater-Condon rules	சிலேற்றர் காண்டனின் விதிகள்
sleeping partner	செயலற்ற பங்காளி
sleeping pill	உறக்கக் குளிகை
sleeping sickness	தூக்க நோய்
slice n	சீவல்
slice v	சீவு
slide n	படவில்லை
slide presentation	படவில்லை தோன்றுரை
slide rule	சருக்கிக் கணிப்பான்

[1] *aka* hydrated lime

slide show	படவில்லைக் காட்சி
slide viewer	படவில்லைக் காட்டி
slider	சறுக்கி
sliding door	சருக்குக் கதவு
sliding filament hypothesis	சருக்குச் சிற்றிழை கருதுகோள்
slime	வழுமம்
slip ring	நழுவு வளையம்
slope	சாய்வு[1]
slot	நீள்துளை
slow wave sleep	மெதுவலை உறக்கம்
SLSI (super-large-scale integration)	மிபேதொ (மிகப்பேரளவத் தொகையிடல்)
sludge	சேறு
slug	அடுநத்தை
slump	வீழ்வு
slurry	நீர்ச்சரல்
SLV (Satellite Launch Vehicle)	கோளேவுவண்டி
small integer	சிறு முழுவெண்
small intestine	சிறுகுடல் தொகுதி
small scale	சிற்றளவம்
small scale retail organization	சிற்றளவச் சில்லரை விற்பனை ஒருங்கமைப்பு
smallpox	பேரம்மை[2]
small-scale integration (SSI)	சிற்றளவத் தொகையிடல் (சிதொ)
smart	சூட்டிகை
smart card	சூட்டிகை அட்டை
